படித்தவள்

டாக்டர் ரா. சீனிவாசன்

எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.

அணியகம்

சென்னை-30.

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பாடத்தவள்

டாக்டர் ரா. சீனிவாசன்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.



நூல் விவரம்

முதற் பதிப்பு	:	1993
மறுபதிப்பு	:	டிசம்பர் 1999
நூல் தலைப்பு	:	படித்தவள்
ஆசிரியர்	:	ரா. சீனிவாசன்
பொருள்	:	சிறு கதைகள்
பதிப்பகம்	:	அணியகம் 5, செல்லம்மாள் தெரு, சென்னை நகர், சென்னை – 600 030 தொலைபேசி : 644 96 30
தாள்	:	11.6 Kg.
அளவு	:	கிரெள்ன் 1/8
எழுத்து	:	10 புள்ளி
பக்கம்	:	192
விலை	:	ரூ.30.00
ஒளியச்சு	:	எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை – 600 017.
அச்சகம்	:	நெல்சன் அச்சகம், சென்னை – 600 024

முன்னுரை

கீற்றுகள்

கதை எழுதுபவன் இதில் ஒரு பாத்திரமாக இயங்கி நிகழ்ச்சிகளை விவரிப்பதாகக் கூறுவது இதன் அமைப்பு.

அவன் சந்திக்கும் முதல் பாத்திரம் 'குண்டு பையன்' அவனோடு உரையாடுவதில் கதை தொடங்குகிறது. இந்தப் படித்தவள் இதில் வரும் நான் ஒரு முதியவர்; அவர் பிறரோடு உரையாடுவதில் மகிழ்ச்சி காண்கிறார். அவர் சந்திக்கும் முதல் பையன் இவன்.

அடுத்து 'பண்டம் விற்பனை செய்யும் வனிதை'; இன்று வீடு தேடி வருபவர்களுள் இவளும் ஒருவர். அவளோடு உரையாடுவதில் ஒரு மகிழ்ச்சி. அதில் அவர் சொற்சுவை காண முடிகிறது.

அடுத்த சந்திப்பு இந்தக் கதையின் நாயகி; படித்தவள். அவள் தன் பெயரை 'பிறைமதி' என்று கூறுகிறாள்.

'காசு நாலு சம்பாதிக்க வேண்டும்' என்று கூறுகிறாள். அதாவது படித்துவிட்டு வெளியேறி உலகத்தின் படிகளில் மிதிக்கிறாள்.

''ஏன்மா நீ சம்பாதித்துதான் ஆக வேண்டுமா?'' என்பது இவர் கேள்வி.

''படித்தவள் சும்மா இருக்க முடியுமா?'' என்று அவள் அவரைப் பார்த்துத் திருப்பிக் கேட்கிறாள்.

''படித்தவள்'' அதுதான் பிரச்சனை என்று தெரிந்தது என்கிறார் கதை சொல்பவர். அவள் பிரச்சனைகள் கதையின் மையப் பொருளாக அமைகின்றன. ''அவள் சுவைப்படப் பேசிச் சுமையைக் குறைத்தாள்''என்று கூறுகிறார். உரையாடல்கள் இன்றைய படித்தவளின் நிலையை விளக்குகின்றன. இவளை வைத்தே கதை பின்னப்படுகிறது.

அடுத்தது பண்ணையார்; அவர் ஜோசியம் சொல்வது ஒரு பொழுதுபோக்காகக் கொண்டவர்; அவரைச் சந்தித்த மாந்தர்களுள் ஒருவர் சட்டம் படித்த வழக்கு உரைஞர்; வழக்குத் தொழில் செய்பவர். அவர் பண்ணையாரைச் சந்திக்கிறார். நடுத்தர வயதினர்; தன் சட்ட அறிவில் நம்பிக்கை வைக்கவில்லை; குரு பெயர்ச்சியில் அவர் நம்பிக்கை வைக்கிறார்.

'திருமூலர்' அந்த ஜோசியர் யதிக்கும் ஞானி; மூவாயிரம் ஆண்டுகள் வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுபவர். இதைப் பற்றிய விமரிசனம் அவர்கள் உரையாடல்களில் நிகழ்கிறது.

அந்த ஜோசியரைச் சந்திப்பது மற்றொருவர்; அவர் பழைய ' கார் ஓட்டி'; அவன் அனுபவங்கள் உரையாடல்களில் இடம் பெறுகின்றன.

அவர்கள் உரையாடல்களை ஒட்டி ஒரு வினா எழுப்பப்படுகிறது. "பெண் கள்ளா காவியமா?" என்று ஒரு வினா எழுப்புகிறார் ஜோசியர்.

"கள்ளோ காவியமோ" என்ற அறிஞர் மு.வ.வின் நாவல் எழுப்பும் வினா இது.

அதற்குத் தரப்படும் விடை இது.

"ஆரம்பத்தில் கள்; வெறி கொள்ளச் செய்கிறாள்; பிறகு காவியம்; நமக்கு நெறிகளைச் சொல்லிக் கொண்டிருப்பதால்" என்பது விடையாக அமைகிறது. இது நகைச்சுவைக்கு இடமாக அமைகிறது.

அறிஞர் பெர்னாட்ஷா 'கள்' என்கிறார்; மு.வ. அவர் 'காவியம்' என்று முடிக்கிறார். இந்த உரையாடல் இரண்டையும் ஒப்புக் கொள்கிறது; இது ஒரு புதிய சிந்தனையாகவும் அமைகிறது.

ஜோசியரை நோக்கி ஒரு ஒசி கிராக்கி வருகிறது.

"ஏன் சார் ஒருத்தி கூட நிலைத்து இருக்க மாட்டேன் என்கிறாள்" என்று மனைவியைப் பற்றிய அழுகையைத் தன் தொழுத கையோடு கூறுகிறான்.

அவள் அவனுக்குப் பாடம் கற்பிக்க நினைக்கிறாள் 'உன்னை எவன் சட்டை செய்வான்' என்று அடிக்கடி அவன் அவளைக் கேட்டு இருக்கிறான்.

அவளும் அவனைப் பார்த்து "என்னை விட்டால் உனக்கு வேறு யாரும் கதி இல்லை" என்று சொல்லி இருக்கிறாள். அதன் விளைவு சுவராசியமான நிகழ்ச்சிகள்; நகைச்சுவை இவர்கள் உரையாடல்களில் மிகுதியாக இடம் பெறுகிறது.

- 5 -

பிறைமதியை ஜோசியர் மகனுக்குப் பேசி முடிப்பதா கதை சொல்பவர் மகன் வேலுசாமிக்குக் கட்டி வைப்பதா என்று இருபால் சென்றது கதை சொல்பவர் நெஞ்சு. "தேய்புரிப் பழங்கயிறு போல்' என்ற சங்க இலக்கிய உவமை இங்கு இடம் பெறுகிறது. இதுவே கதையில் புகுத்தப்படும் கதைப் போராட்டம்; நிகழ்ச்சிப் போராட்டம்.

- 6 -

முத்து எழுதிய காதற் கடிதம் அது அவள் கை தவறிக் கீழே விழுகிறது; கதை சொல்பவர் எடுக்கிறார். பின் அவர் கூறுவது நயம் மிக்கதாக அமைகிறது.

"அதை எடுத்தேன்; கொடுத்தேன்; 'எடுக்கவோ உன் கையில் சேர்க்கவோ' என்றேன்" என்கிறார். 'அவள் சிரித்தாள்'. இச்சொற்றொடர் இலக்கியத் தாக்கம் என்பது சுட்டப்படுகிறது.

- 7 -

'எதையும் ஆர அமரச் சிந்தித்தே என் வாழ்வை அமைத்துக் கொள்வேன்" என்கிறாள் பிறைமதி.

"அவசரப்படவேண்டாம்" என்று கூறி அவள் அவரைத் தடுத்து நிறுத்துகிறாள்.

"அவசரப்பட வேண்டாம்" என்று அவள் அவரிடம் கூறியது எனக்கு இட்ட அறிவுரையாகப் பட்டது" என்கிறார் கதை சொல்பவர்.

- 8 -

கதையில் ஒரு இடைவெளி; பண்டம் விற்கும் வனிதையின் சந்திப்பு மீண்டும் இடம் பெறுகிறது.

அவள் தன் பிள்ளைகளைப் படிப்பித்தலில் ஏற்படும் சிரமங்களைக் கூறுகிறாள். "காதில் மூக்கில் என்ன ஒன்றுமே காணோமே" என்று கேட்கிறார் கதை சொல்பவர்.

"அவற்றை அடகு வைத்து விட்டேன்; வட்டி முழுகிப் போகும்போது எப்படியாவது மீட்பேன். மறுபடியும் அவற்றை அனுப்பிப் பள்ளிக்கூடம் படிக்க வைப்பேன். இப்பொழுது பாடம் படித்துக் கொண்டிருக்கிறது" என்று விளக்கம் தருகிறாள்.

அவள் சொல்வது சோகம் பாடும் சோஷலிசக் கவிஞர்களின் கவிதையை ஒத்திருந்தது என்று கூறப்படுகிறது.

- 16 -

முத்து அவனுக்குப் பிறை காதல் முறிவை ஏற்படுத்தி அவனை வெளிநாட்டுக்குப் போகச் செய்கிறாள். அவள் கூர்த்த மதி இதனைச் செய்து முடிக்கிறது. அவள் உண்மையில் 'பிறைமதி' என்பதைக் காட்டி விடுகிறாள்.

''என் பெற்றோர்களை விட்டுச் சொல்கிறேன். அவர்களைக் கவனித்துக் கொள்'' என்கிறான் முத்து.

''அவர்கள் என் பாதுகாப்பில் இருப்பார்கள்; என் தாயும் உன் பெற்றோர்களும் என் கண்கள்'' என்கிறாள் பிறைமதி.

''மூன்று ஆண்டுகள் காத்திருப்பேன்'' என்று கூறி விடை தந்து அனுப்புகிறாள்.

படித்தவள் இவளைப் பற்றிய சொற்சித்திரம் இந்த முதற் கதை.

2. களைகள்

இதில் கதை சொல்பவர் ஓர் இளைஞர் முதியவர் அல்ல.

கதை அறிமுகம் ஆகிறது; 'கம்மினாட்டி' என்ற சொல்லுக்கு விளக்கம் கேட்கப்படுகிறது. இது வினா? விடை காண முடியவில்லை. நகைச்சுவையோடு கதை தொடக்கம் பெறுகிறது.

மற்றொரு வினா அவனுக்கு வாழ்க்கையில் ஏற்படுகிறது.

'அன்னாகரினா' நாவலைப் படிக்கிறான். அதில் அவள் ரயில் என்ஜின் முன் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

கதாசிரியர் சந்திக்கும் மற்றொரு பாத்திரம் மனைவியை அவள் தவறுக்காகக் கழுத்து அறுத்துவிட்டுச் சிறை செல்கிறான்.

அன்னாகரினா செய்தது சரியா? இந்த இளைஞன் தன் மனைவியைக் கொலை செய்து விட்டுச் சிறை சென்றது சரியா?

கதை சொல்பவர் இந்த வினாக்களுக்கு என்ன விடை காண்கிறார். இது கதையில் கேட்கப்படும் வினா. அதற்குத் தரப்படும் விடை இதில் இடம் பெறுகிறது.

3. மனை நலம்

மனைமாட்சிக்கும் மனைநலத்திற்கும் வேறுபாடு உள்ளது. மனைமாட்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. சில அளவைகள் அவை குறைந்தும் விடுகின்றன. அவற்றை ஏற்பது எப்படி? அதற்கு விடை தருகிறது இக்கதை. இதன் மையக் கருத்து இந்நூலில் பக்கம் 164-ல் இடம் பெறுகிறது.

'காதலித்து மணம் செய்து கொள்வது காவிய நெறி. அது போற்றத்தக்கதுதான். அந்த உரிமை எல்லாப் பெண்களுக்கும் வாய்க்கும் என்று கூற முடியாது. பெரியவர்கள் முன்னிருந்து பேசி நிச்சயிப்பதுதான் இன்றைய நடைமுறை; இது இரண்டாவது; அவள் ஏற்கனவே காதலித்து இருக்கலாம்; பின் தெளிவு பெற்று இருக்கலாம்; காதலித்தவன் வாழ்க்கைக்கு உறுதி கொடுப்பான் என்ற அறுதி செய்ய இயலாது. ஊதி வைக்கும் பலூன் வெடித்துப் போக வாய்ப்புண்டு. அப்புறம் அது வெறும் ரப்பர் தோல்தான். காதல் சந்திப்புகள் வாழ்க்கையில் ஒரு சூழ்நிலைச் சூழல்கள் எனலாம்; அதில் முழுகி எழுந்து பின் தொடர்ந்து அவனையே மணக்கலாம்; மணத்துக்கு அது துணையாகலாம்; ஆனால் அதுவே முடிவு என்று கூற முடியாது. மனம் மாறிவிடலாம். மேல் நாட்டிலும் மணம் ஆவதற்கு முன் இருவருமே சேர்ந்து பழக அனுமதிக்கப்படுகின்றனர்; ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வாய்ப்புகள் கிடைக்கின்றன. ''பிடிக்கவில்லை'' என்றால் இடுப்பில் இருந்து கைகள் விலக்கப்படுகின்றன. இதில் என்ன தவறு இருக்கிறது?''

இது இன்றைய குறைகளுக்குத் தீர்வு. முடிவு? இந்தக் கதை கூறுகிறது.

4. பத்திரிகைபடி

இன்று திரைக்கதை என்றால் மருத்துவமனை; காவல் நிலையம்; சிறைக் கம்பிகள்; நீதிமன்றங்கள்; இவை நிலைத்த செட்டுகள் ஆகிவிட்டன.

'கிரைம்கள் இன்றைய செய்திகள். அவை ஒவ்வொன்றும் சிறுகதைகள் ஆகிவிடுகின்றன.

ஒரு சப் இன்ஸ்பெக்டர் அவர் முரடர்; எப்பொழுதும் அடித்து விட்டுத்தான் பேசுவார்.

அந்தப் பழக்கம் தன் கீழ்ப் பணி செய்யும் காவலர் ஒருவர்மீது காட்டி விட்டார்.

அவன் தான் வாங்கிய கடனை உடனே திருப்பிக் கொடுத்தான்.

அதற்குப் பிறகு அவர் மிகவும் சாதுவாகி விட்டார். பண்படுத்தப்பட்டார். இப்படி ஒரு செய்தி வந்தது.

இது ஒரு சிறுகதையாக எழுத முடிகிறது. பலசிறு கதைகள் பத்திரிகைச் செய்திகளில் உதயமாகின்றன. அதனால்தான் 'கிரைம்' துணுக்குகளை விரும்பிப் படிக்கிறார்கள். செய்திகளுக்காக அல்ல; சுவையும் புதுமையும் தருவதால்.

இதில் ஒருசில நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்படுகின்றன. 'பத்திரிகை படி' என்ற தலைப்பைப் பெற்று உள்ளது. ஒவ்வொரு கிரைம் நிகழ்ச்சியும் ஒரு சிறுகதை என்பது அறிவிக்கிறது.

அறிமுகமாகச் சில கீற்றுகள் இங்குத் தரப்பட்டுள்ளன. இனி மின்னல்கள் உள்ளே ஒளிவிடும்; இவை கண்ணைப் பறிக்கா; மனதைப் பறிக்கும்.

ரா. சீனிவாசன்

பாடகத்தவள்

1

திண்ணைத் தூங்கி என்று சொல்வார்கள். அந்தப் பாக்கியம் எனக்கு இல்லாமல் போய்விட்டது. ஏன் என்று கேட்கிறீர்களா? எங்கள் வீட்டில் திண்ணை வைத்துக் கட்டவில்லை. அதன் அவசியத்தை இந்த நூற்றாண்டு இழந்துவிட்டது; அதுதான் காரணம்; பிளாட்டு வாங்கி ஃபிளாட் கட்டும் காலம் இது.

திண்ணை வேதாந்தம் பேசிப் பழக்கம். அதற்கு ஒரு பண்ணையார் எனக்குக் கிடைத்து வந்தார். அவருக்கு வேதாந்தம் பேசுவது ரொம்ப பிரியம். பிராணாயாமம் என்பது பற்றிப் பேசி என் உயிரை வாங்கி விடுவார். அதனால் 'காயசித்தி' ஏற்படும் என்று கூறுவார்

சின்ன வயது; ஆறு இருக்கும்; அச்சரப்பாக்கம் கூட்டு ரோடு; அங்கே என் கிழிந்த புத்தகங்களைப் போட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பேன். 'டீ' கடையில் சூடான 'டீ' அதைக் குடிக்க முடியாமல் ஆறட்டும் என்று கையில்வைத்துக் கொண்டு ஒரு சிலர் பொழுது போக்குவதை ஒரு கலையாக அனுட விப்பதைப் பார்த்திருக்கிறேன். அது அன்று.

இந்த வயதில் 'டீ'யை ஆறவிட்டு அதைக் குடிக்காமல் மனத்தைச் சிதறவிடும் மனோபாவம் என்னிடம் இருப்பதை நான் உணர முடிகிறது. எனக்கு வயது ஆகிவிட்டது. வேலை வெட்டிக்குஉதவாதவன் என்று நான் ஒதுக்கப்பட்டேன், இதுவும் உண்மைதானே; எத்தனை நாளைக்கு நான் இடம் அடைத்துக் கொண்டு இருப்பது.

என்னை அறியாமல் 'காயசித்தி' பைத்தியம் என்னையும் பிடித்துக் கொண்டது. திருக்குறள் படித்துப் பழக்கம். நானாக அதை எடுத்துப் படிக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். அந்த நல்ல பழக்கம் என்னிடம் என்றைக்குமே இருந்தது இல்லை. படிக்கிற காலத்தில் அதைப் பாடநூலாக வைத்திருந்தார்கள். எந்த வகுப்பிலும் கடன் கொடுத்தவன் விடாமல் தொடர்வதைப் போலத் திருக்குறள் நம்மைத் தொடர்ந்து கொண்டே வருகிறது. அதிலிருந்து யாரும் விடுபட முடியாது. அதன் அருமை அப்பொழுது தெரிவதில்லை; இப்பொழுது தெரிகிறது. ஏதாவது குறள் நினைவுக்கு வரும்; அதை நினைத்துக் கொண்டே அசைபோடுவேன்.

சூது என்ற அதிகாரம்; அது தீது என்பதைப் பத்துக் குறளில் கூறுகிறார்.

பொருளை இழக்கும்தோறும் சூதின்மீது விருப்பு அதிகமாகும் என்பது அந்தக் குறளின் கருத்து. அதற்கு அவர் உவமை கூறி இருக்கிறார். உயிர் இழக்கும்தோறும் அதன்மீது காதல் ஏற்படுமாம். அதனை நான் இப்பொழுது உணர முடிகிறது. இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்து விடுவது என்ற ஆசையை அடக்கவே முடியவில்லை.

'முதியவர்கள் ஆசை' என்ற ஒன்று இருக்கிறது என்றால் அது இதுதான் என்பதை உணர முடிந்தது.

ஆசை இருந்து என்ன பயன்? வாழ்வது அவ்வளவு எளிதாகவும் படவில்லை, கவலைகள் நிறைய இருப்பது சில சிமயம் தேவைப்படுகிறது என்பதை என்னால் உணர முடிகிறது.

குண்டுபையன்; ஆனால் மண்டு என்று அவனைக் கூற முடியாது. அவன் பேசும் கொச்சை மொழி என்னை அவன்பால் இச்சை கொள்ளச் செய்தது. சின்னக் குழந்தையாக இருந்தால் அதனை மழலை என்று கூறலாம். அந்த இன்பத்துக்கு இவன் பேச்சு ஈடாகாது. மழலை அதில் பொருளே இருக்காது. சொற்கள் மட்டும் பற்களினின்று வெளிப்படும். அதில் எந்தக் கருத்தும் இருக்காது.

வரிகள் சில; ஓசை நயம்;அவ்வளவுதான். 'சில்லாவல்லி ராமக்கா சீப்பு போட்டு வாரக்கா' என்று சிரித்துக்கொண்டே அடுத்த வீட்டுச் சின்ன குழந்தை ஒன்று பேசும். அது அதன் பக்கத்து வீட்டுத் தெலுங்குப் பெண்ணின் தாக்கம்; அதனால் ஏற்பட்டது இந்த ஆக்கம். அந்தப் பெண்ணிடம் பாதி கற்றுக் கொண்டது என்று நினைக்கிறேன். 'சில்லாவல்லி' என்ற சொல் தமிழில் கேட்டதே இல்லை; இந்த ஓசை வரிகள் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இந்த குண்டு அப்படி அல்ல; கருத்து உடைய சொற்களைப் பேசுவான். அந்த வீட்டுக்கு அவன் ஒரே பிள்ளை; அதனால் அவன் குண்டாகி விட்டான் என்று தெரிகிறது. எதற்காக இவ்வளவும் சொல்கிறேன்; சில விஷயங்களில் 'சீரியஸ்னெஸ்' இருக்கக்கூடாது. அதுதான்

இன்பம்; பொழுதுபோக்கு; 'டூ' சூடாக இருக்கிறது. ஆறட்டுமே அதற்கு என்ன அவசரம்.

வியாபார வனிதை அவள் கொண்டு வந்தபண்டத்தை விலை கூறி விற்கக்கூடாதா? "வாங்கிக் கொள்ளுங்கள்" என்று மன்றாடுகிறாள். அவள்விற்பனைப் பொருளில் தரம் இல்லை; அவள் வாங்கி வந்த வரத்தைப் பற்றி முன்னுரை கூறி என் மனக் கட்டிடத்தை நெகிழ வைக்கிறாள் அதாவது இந்த வியாபாரம் அவளுக்குச் செய்யும் உதவி என்பது போல் இருந்தது.

அந்தக் குண்டு பையன் ஏதாவது கடித்துக் கொண்டே இருப்பான். 'சாக்லேட்' அவன் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு ஒரு சின்னத் துண்டு கடித்துக் கொடுப்பான்.

'போடா எச்சில்' என்று மற்றவர்கள் அவனை அழைப்பது பேசுவது சிரிப்பாக இருக்கும்.

'கடித்துத் தராதே தடித்த பையல் நீ' என்று ஒல்லிக் குச்சுப் பையன் சொல்லிவிட்டு ஓடி விட்டான்.

எனக்கும் சாக்லேட்டு கடிக்கக் கொடு என்று கேட்க ஆசைதான். கேட்க முடியுமா? வயது ஆகிவிட்டது. எந்த ஆசையும் கூடாது; கேட்டால் அவன் என் சின்னத்தனத்தைக் கண்டு துரைத்தனம் பேசுவான்.

அந்தப் பண்ட விற்பனை வனிதை வாய்திறந்து ஏதாவது தன்னைப்பற்றிச் சொல்வாள் என்று எதிர் பார்த்தேன். பண்டத்தைவிட அந்த அம்மையின் வாய்ச் சுவையை விரும்பினேன். கதை கேட்கும் ஆர்வம்

மானிடர்க்கு ஏற்பட்டுள்ள மனநோய். அதற்கு நான்விதி விலக்கு ஆகவில்லை. புத்தகத்தைப் புரட்டுவதை விடப் புது முகங்களை உருட்டுவதில் மகிழ்வு ஏற்படுகிறது. இந்த அம்மை என் வெறுமைக்குப் புதுமுகம்தான். அவள் தன் வியாபாரத்துக்காகத் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். அவள் நரி முகத்தில் விழித்தாள். நான் அவள் விரும்பும் அளவுக்குப் பண்டங்களை வாங்கியதால்.

அவள் கூறும் செய்திகள் கதை கேட்பது போல் இருந்தன.

"எல்லாவற்றையும் மெல்ல மெல்லத் தோற்று விட்டு இந்தக் கதிக்கு வந்துவிட்டோம்" என்றாள்.

"இழப்புக்குக் காரணம்?"

"அவர் சரியாக இல்லை"

அதைக்கேட்டு அறிய வேண்டும் என்று வேடிக்கை யாகக் கேட்டேன்.

"எப்படி அழித்தார்?" என்றேன்.

அவள் நகை இழந்த முகத்தில் என்னால் நகை உண்டாக்க முடிந்தது.

"அதனால் உங்களுக்குப் பயன் இல்லை. அதைத் தெரிந்து கொண்டு நீங்கள் பயன் அடைய முடியாதே" என்று கூறினாள்.

என் இயலாமையை அவள் சுட்டிக் காட்டியது எனக்கு ஒரு பாடம்தான்.

சட்டசபையில் சில கேள்விகள் தான் அனுமதிக்கப் படுகின்றன; இஷ்டப்படி எதையும் கேட்டுவிட முடியாது.

அவன் அழித்தான் என்பது செய்தி; எப்படி என்பது அவள் கணவனின் விமரிசனம்; பண்பட்ட அவள் உள்ளம் அதைக் கூறாதது அவள் பெண்மையின் உயர்வை எடுத்துக் காட்டியது; படித்தவள் அவள்: வாழ்க்கையில் நெறிகளைப் படித்தவள் என்பதை அறிந்து பெருமைப்பட்டேன்.

காசு கொடுத்து வாங்கியது; அதன் சுவை மறந்து விட்டது. ஆனால் சொற்சுவை சோர்வு நீக்கியது. நினைத்துப் நாம் பாராட்டும் கவிதையாக இருந்தது.

2

நின் கதாநாயகி இப்பொழுதுதான் அறிமுகம் ஆகிறாள். அவள் 'துருதுருப்பாக' இயங்கிக் கொண்டிருக் கிறாள். "என்னம்மா எப்பெழுதும் சுருசுருப்பாக இருக்கி றாயே" என்று கேட்கிறேன்.

"காசு நாலு சம்பாதிக்க வேண்டும்" என்று கூறுகிறாள். அதாவது படித்துவிட்டு வெளியேறி உலகத்தின் படிகளில் மிதிக்கிறாள். சிட்டுப் பறவை போலக் கட்டு நீங்கிப் பறந்து கொண்டிருந்தாள். 'பிறை' வீட்டுச்சிறையில் கிடப்பதைப் போன்ற உணர்வு பெறுகிறாள். அவள் பெயர் 'பிறைமதி'. அதைச்சுருக்கிப் பிறை என்று கூறுகிறார்கள். முழுப் பெயரில் அவளை வகுப்பு ஆசிரியர்கள் அழைத்துக் கேட்பாள். யாரால் இவ்வளவு பெரிய பெயரைக் கூறமுடியும். அழகான தமிழ்ப் பெயர் அவளுக்குக் கிடைத்தது. 'பிறை' என்றுதான்

அவளை அழைத்து வருகிறார்கள். அது அவள் முழுப் பெயரின் கடைக் குறை. அவள் மற்றவர்களுக்குப் பிறையாகத் தெரிந்தாள். எனக்கு அவள் மதியாகவே தென்பட்டாள். 'அறிவு மதி' என்று ஒரு கவிஞர் கேள்விப்பட்டு இருக்கிறேன். அறிவு என்றாலும் ஒன்றுதான்; மதி என்றாலும் ஒன்றுதான். அங்கே அறிவு ஆகிய அறிவு என்பதுபொருள். இங்கே மதி என்பது சந்திரனைக் குறிக்கிறது. பிறைமதி என்றால் பிறைச்சந்திரன் என்பது பொருள். அவள் நெற்றியின் அழகு அந்தப் பெயர் அவளுக்குப் பொருந்தும் எனக் காட்டியது.

என் கெட்ட பழக்கம் யாரிடமாவது பேச்சுக் கொடுப்பது. என்ன செய்வது சிகரெட்டுப் பிடிப்பதை விட இது மேல் என்று கருதுகிறேன்.

"ஏன்'மா நீ சம்பாதித்துதான் ஆக வேண்டுமா?" என்று கேட்கிறேன்.

"படித்தவள் சும்மா இருக்க முடியுமா?" என்று என்னைத் திருப்பி மடக்குகிறாள்.

"படித்தவள்" அதுதான் பிரச்சனை என்று தெரிந்தது.

"எந்த வேலைக்குப் போக விரும்புகிறாய்?"

"ஏதாவது; என்னால் சும்மா இருக்க முடியாது. படிப்பு எப்பொழுது முடியும் என்று காத்திருந்தேன். அது ஏன் முடிந்தது என்று வருத்தப்படுகிறேன்" என்கிறாள்.

"பாக்கி வைப்பது தானே; ஏதாவது எழுதிக் கொண்டிருக்கலாமே" என்றேன்.

"எப்படி எழுதினாலும் அவர்கள் மார்க்குப் போட்டு விடுகிறார்கள்".

"காரணம்?"

"என் கையெழுத்து அழகாக இருக்கும்"

"நல்லது தான்"

"என் தலையெழுத்துச் சரியாக இல்லையே" என்று பதில் கூறுகிறாள்.

"அன்று எழுதி வைத்தவன் அப்படி; அதை அழிப்பது நம்மால் முடிவது எப்படி? எதுவும் நடக்கும் அதன்படி".

"என்ன சார் வேதாந்தம் பேசுகிறீர்கள்?" என்றாள்.

"என் சித்தாந்தம் எடுபடாது என்பதை உணர்கிறேன்"

"அது பழைய காலம். வாய்ப்பு தான் தேவை; அதற்குப் பிறகு எல்லாம் சரியாகப் போய்விடும்" என்றாள்.

வெளியே போகிறவரை எங்கே போகிறாய் என்று கேட்கக்கூடாது தெரிகிறது; கேட்காமலும் இருக்க முடியவில்லை. நிச்சயமாகப் பிறை போர்க்களத்துக்குப் போகவில்லை; பெரிய காரியம் எதுவும் இருக்காது.

அவள் கையில் பை ஒன்று வைத்திருந்தாள்;

"கடைக்கா?" என்று கேட்கிறேன்.

"இல்லை; ஷாப்பிங்கிக்கு" என்று சொல்லிச் சிரித்தாள்.

"பலமா இருக்குமா?"

"அரை கிலோ கத்தரிக்காய்; கால்கிலோ சுண்டைக் காய்; ஒரு கிலோ வெண்டைக்காய்" என்று அடுக்கிக் கொண்டே சென்றாள்.

"இதுதானா ஷாப்பிங்க்?"

அவள் சிரித்தாள்.

'கடைக்கு' என்றால் அது அகௌரவம். அதற்காக இந்தச் சொல்லைப் பயன்படுத்தினேன். அந்தஸ்து இதனால் உயர்கிறது" என்றாள்.

படித்தவள் சாமர்த்தியமாகப் பேசுகிறாள்.

"அதற்கு ஸ்கூட்டர் எதற்கு?"

"வாங்கியாகி விட்டது; பயன்படுத்த வேண்டாமா?" என்றாள்.

"உனக்கு எதுக்கு ஸ்கூட்டர்?"

"வசதி இருக்கிறது; அதை விளம்பரப்படுத்துவதற்கு" என்றாள்."

"தேவைக்கு மேல் எதுவும் வைத்திருக்கக் கூடாது" என்றேன்.

"இரண்டு பிள்ளைகளுக்குமேல் ஒருவருக்கு இருந்தால்"? என்றாள்.

"ஒன்றே போதும்; மற்றொன்று தேவைக்கு மீறியது" என்றேன்.

பிறை 'ஷாப்பிங்க்' கொண்டு சென்ற பையை நிரப்பிக் கொண்டு வந்தாள். அதோடு மற்றொரு கையில் ஓர் 'உறை' வைத்திருந்தாள்.

"இது என்ன காய்?" என்றேன்; ஏனெனில் அவள் காய்தானே வாங்கிவரச் சென்றாள்.

"அத்திக்காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காய்வாய் நீ
அத்திக்காய் காயாயோ'

என்று பாடினாள்.

"உனக்குப் புத்தி இருக்கிறதா" என்று கேட்டு விட்டேன். அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் பாட்டுப் பாடியதால்.

"அதிகம் இருக்கிறது; தேவைக்குமேல் இருக்கிறது; உங்களுக்குத் தேவைப்படுகிறதா" என்று கேட்டு விட்டாள்.

அவள் சுவைபடப் பேசிச் சுமையைக் குறைத்தாள். அதைத் தெரிந்து கொள்ளாமல் விளையாட்டுக்குச் சொன்னதை விபரீதப்படுத்தி விட்டேன்.

"இது விண்ணப்பப் படிவம்; கடையில் காய்க்கிறது" என்றாள்.

காய்கறிக் கடைக்கு அது வந்து காசுக்கு விற்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

"அரசு விண்ணப்பங்கள் அங்காடிக்கு வந்து விடுகின்றன. அஞ்சல் செலவு மிச்சம்" என்றாள்.

"தினந்தோறும் ஒன்று வரும்; தவறாமல் வாங்கி வருவேன்" என்றாள்.

"ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் காசு; அதற்கு நகல் படிவங்கள்; வங்கிக் கேட்பு வரைவோலை; இதற்கே சரியாகப் போய்விடுகிறது. என் படிப்பு அதற்கு ஈடு செய்யமுடியாது. எனக்குத் தெரியாத பொருள்களில் அவர்கள் வினா அமைந்து விடுகிறது; எழுதுகிறேன்; எழுதிக் கொண்டே இருக்கிறேன்" என்று திரைப்படப் பாணியில் இரைச்சல் கலந்து கூறுகிறாள்.

அவள் காலகட்டம் எனக்குப் புரிகிறது. எப்படியாவது ஒரு வேலை வாங்கி விடுவது என்பது அவள் தொடர்ந்த முயற்சிகள் தெரிவிக்கின்றன.

அவளைப் பார்க்கும்போது பரிவு ஏற்படுகிறது.

பேசாமல் யாரையாவது கட்டிக் கொண்டு தொலையக் கூடாதா என்ற எண்ணம் எழுந்தது.

"ஏன்'மா அம்மாகிட்டே சொல்லி உனக்கு"?

"கருமாதி" என்றாள். திருமணத்தில் அவள் ஆர்வம் இச்சொற்களினின்று அடக்கு முறையைக் காண்கிறது என்று தெரிகிறது.

"இதுக்கா இதுவரை படித்தது" என்று இடித்துக் கேட்கிறாள்.

திருமண அழைப்பிதழில் அழகாகப் பட்டங்களைப் போட்டுக் கொள்வது நினைவுக்கு வந்தது.

"கலியாணப் பத்திரிகையில் உன் பேருக்குப் பின்னால் இரண்டு ஆங்கில எழுத்துக்களை மற்றவர்கள் உச்சரிக்கச் செய்ய" என்று விளக்கினேன்.

"அந்த அளவுக்குப் பெண்கள் ஏமாற்றப்படுகிறார்கள்; அது எங்களுக்கு ஆறுதல் பரிசு" என்கிறாள்.

அவள் உறுதியாக ஒரு வேலைக்குப் போவது என்பதில் அவள் பேச்சு சுழன்றது.

"உழைப்பாளி படம் பார்த்தீர்களா?" என்று கேட்டாள்.

"வீடியோவில் வரவில்லை" என்றேன்.

"அரங்குக்குப் போய்ப் பார்க்கலாமே" என்றாள்.

"முதல் நாள் டிக்கட்டுக் கிடைக்கவில்லை; இனி அதற்குப் போவது இல்லை என்று விட்டு விட்டேன்."

"அப்புறம் போவது?"

"அதில் சுவை இல்லை; அதை விட மண்ணெண்ணெய் போட்டுக் கொளுத்திக் கொள்ளலாம்" என்றேன்.

அந்தப்படம் வெளியிட்ட போது ரசிகன் ஒருவன் தற்கொலை செய்து கொண்டான் முதற்படம் பார்க்க முடியாமல் என்ற செய்தியைத் தெரிவித்தேன்.

"எதற்குச் சாவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய் விட்டது இந்த நாட்டில். இவனுக்கு என்ன தியாகத் தொகையா கிடைக்கப் போகிறது?" என்றாள்.

"இளைஞர்கள் துடிப்பு உடையவர்கள்" என்றேன்.

"படிப்புக் குறைவு" என்று அவள் சுட்டிக் காட்டினாள்.

3

பண்ணையார் என் பேச்சு நண்பர். ஓய்வு பெற்ற இந்த வயதில் சாய்வு பெறுவதற்கும் பேச ஆள் தேவைப்படுகிறது. அவர் திண்ணை சற்று விசாலமாகவே இருந்தது. நிலம் சரியாகப் பயிரிடுவார் இன்மையால் மெல்ல மெல்ல நிலங்களை எல்லாம் ஒன்றும் பாதியுமாக விற்றுவிட்டுச் சென்னை வந்து சேர்ந்துவிட்டார். ஊரிலே பெரிய திண்ணை. அதே மாதிரி இங்கே கட்ட வேண்டும் என்று திண்ணை வைத்து வீடு கட்டி இருக்கிறார்.

பொதுவாகக் கோயில்களின் முன்னால் இந்த மாதிரி திண்ணை போட்ட வீடுகள் இருந்தால் திருவிழாக் காலங்களில் பக்த கோடிகள் ஒதுங்குவதற்கு உதவுகின்றன. சோறு போடுவது புண்ணியம் என்று சொல்லுவார்கள். அதைவிட யாராவது தங்குவதற்கு இடம் தந்தால் பெரிய தர்மம் என்று அவருக்குப் பட்டது.

இரவிலே இந்த இடத்தில் யார் யாரோ வந்து ஒதுங்குகிறார்கள். அதனால் இதற்குக் கிராதி போட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்தார். அந்த வியாதி இவரையும் பிடித்துக் கொண்டது. அந்தக் கிராமத்து வீட்டைச் சிரமம் இல்லாமல் நகரத்து வீடாக மாற்றி விட்டார். திண்ணை இருந்த இடம் ஆபீசு அறையாக மாறி விட்டது. தொலைபேசி இடையிடையே அவரை எண்ணிட்டுக் கூப்பிட்டுக் கொண்டு இருந்தது.

அவர் ஜோசியம் சொல்வதை ஒரு பொழுது போக்காக ஆரம்பித்தார். அது மிகவும் தேவைப்படும் கலையாகி

விட்டது. எதையும் தைரியமாக நம்பும் சூழ்நிலை குறைந்து வருகிறது. துணிந்து நாளை என்ன நடக்கும் என்று கூறமுடியாது. அதை முன் கூட்டிச் சொல்வது என்றால் உண்மையில் அது அற்புதக் கலைதான்; தேவையும் கூட.

நான் அவரிடம் போகும்போது சட்டம் படித்து நல்லபடி சம்பாதித்துக் கொண்டு வரும் நாற்பதைக் கடந்த நடுத்தர வயது உடையவர். அவர் தம் சாதகம் என்று ஏதோ குறிப்புகளைக் கொடுத்து 'குரு' எங்கே இருக்கிறான் என்று தேடிக் கண்டு பிடிக்கச் சொல்லிக் கொண்டிருந்தார். காணாமற் போனவர்களைத் தேடுவது போல என் நண்பர் துருவித் தேடிக் கண்டு பிடித்தார்.

"உனக்குக் குரு நல்ல இடத்தில் வந்து தங்கி இருக்கிறான்; நீ வேண்டாம் என்றாலும் அவன் உன்னை விட்டுப் போக மாட்டான்" என்று தெளிவு படுத்தினார். "நீ தொடும் வழக்குகள் எல்லாம் தோல்வியே அடையாது. குருபதி உன்னிடம் இருப்பதால் நீ அதிபதியாக இருப்பாய்; நீதிபதி ஒன்றும் உன்னை அசைக்க முடியாது. நீ சொல்வது அவர் கேட்டுத்தான் ஆகவேண்டும். வேறுவழி இல்லை" என்று உற்சாகப் படுத்தினார்.

அவர் துணிந்து கூறும் மொழிகள் ஆறுதல் உடையனவாக இருந்தன. தன்னம்பிக்கையும் வாத நம்பிக்கையும் இல்லாத இந்த மடசாம்பிராணிகளுக்குச் சில உறுதிகள் தேவைப்படுகின்றன. என் நண்பர் அவற்றைத் துணிந்து கூறுகிறார்.

அவரிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்தது. ஜோசியம் சொல்வார்; ஆனால் காசுகள் வாங்க மாட்டார்.

"ஏன் சார் இதை ஒரு தொழிலாக வைத்து நடத்தலாமே" என்றேன்.

"நம்மிடம் வருபவரிடம் காசு பெற்றால் நாம் சொல்வதை நம்பமாட்டார்கள். நம்மீது நம்பிக்கை வைக்க மாட்டார்கள். நாம் எதைச் சொன்னாலும் நம்ப மாட்டார்கள்; இதற்கு நான் காசு வாங்குவது இல்லை" என்றார்.

'பாப்பா' என்று கூப்பிட்டார்; அங்கே ஒரு கிழவி வந்தாள்; வியப்பாக இருந்தது.

"இது அவளுக்குச் சின்னவயதில் வைத்த பெயர்; அதை மாற்ற முடியவில்லை" என்றார். அவளை அந்த அறையைப் பெருக்கச் சொன்னார்.

"அன்று எழுதி வைத்ததை யாரும் மாற்றமுடியாது" என்று கிண்டலாகச் சொன்னேன்.

கல்வி கற்றவர்; நீதி பேசுகிறார். சட்ட நுணுக்கங்கள் அறிந்தவர்; திட்டங்களை அலசுபவர். அவருக்குத் தன் தொழில்மீது நம்பிக்கை இல்லாமல் இருந்ததைக் கண்டு வியப்பு அடைந்தேன்.

தான் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தலையோங்கியது. நீதி வெல்ல வேண்டும் என்ற நியாயம் அவருக்குத் தோன்றவில்லை. தன் வழக்குத் தவறானதாக இருந்தால் இடறிவிழவேண்டியதுதான். அதற்கு அவர் எப்படிப் பொறுப்பு ஆக முடியும்,

"உங்களை வந்து அவர்கள் சரண் அடைவது நன்றாக இல்லை" என்றேன்.

"அரண் வேறு இல்லை. அவர்கள் நம்பிக்கைகளுக்கு உரம் இடுகிறேன்; அவ்வளவுதான் அவர்கள் உற்சாகமாகத் தம் தொழிலில் ஈடுபடுவார்கள்; திறமை இருக்கலாம்; ஆற்றல் இருக்கலாம்; அறிவு இருக்கலாம்; அது உன்னிடம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால்தான் அவை முழுவதும் வெளிப்படும்" என்றார்.

'உங்களால் அவர்களுக்கு நன்மை உண்டு என்கிறீர்களா?"

"மக்கள் அதிர்ச்சிகளைத் தாங்க மாட்டார்கள்; நாங்கள் அவர்கள் நஷ்டப்படும்போது அதைத் தாங்கும் மனநிலையைத் தருகிறோம்; கஷ்டப்படும்போது கருத்து அழிய வேண்டாம் என்று அருத்தமுள்ள செய்திகளைச் சொல்வோம். எதையும் துணிந்து செயல்படத் தயங்குவார்கள். அப்பொழுது 'குருவைத்' துணைக்கு அழைத்து அவர்கள் அஷ்டமத்துச் சனியனுக்கு விடுதலை தருவோம். அவர்கள் வெற்றி காண்பார்கள். அந்த முடிவுக்கு நாங்கள் தான் விடிவு கூறுகிறோம்" என்று விளக்கினார்.

"மேல் நாட்டில் கூட இப்பொழுது ஜோசியத்தை நம்புகிறார்கள்" என்றேன்.

"நாம் விஞ்ஞானத்தை அவர்களுக்குத் தர முடியாது; இந்த அஞ்ஞானத்தையாவது பரப்ப முடிகிறது. அதற்குப் பெருமைப்படுவோம்" என்றார்.

அவர் உண்மையை ஒப்புக்கொள்வது அவரை நேசிக்கச் செய்தது.

"காயசித்தி என்ன ஆயிற்று" என்று என் பேச்சைத் தொடர்ந்தேன். அவருக்கு உற்சாகம் கிளம்பி விட்டது. கையில் 'திருமூலர்' வைத்திருந்தார்.

"இவர் யார்?" என்று கேட்டேன்.

"இவரைத் தெரியாதா?"

ஏதோ சனாதிபதியை அறிமுகப்படுத்துவது போல என்னைக் கேட்டார்.

பத்திரிகையில் வரவில்லையே என்றேன். அவர்கள நல்லது எல்லாம் இருட்டடிப்புச் செய்து விடுவார்கள் அவர்கள் தவறாக நினைக்கிறார்கள். திரை நடிகையைப் போட்டால்தான் விற்பனை ஏற்படும் என்று நினைக்கிறார்கள் என்றார்.

"இவரைப் போட்டால் கதவு அடைப்புத்தான் செய்ய வேண்டும்" என்றேன்.

"சித்தர் திருமூலர் இவர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்" என்றார்.

"கின்னசில் இடம் பெற வேண்டியவர்" என்றேன்.

"உங்களுக்குக் கிண்டலாக இருக்கும்; மனிதன் நீடித்து வாழமுடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு அற்றுவிட்டது. மனிதன் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறான்; வாழ முடியும்; ஆதி மனிதன் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறான். விவிலியம் அப்படித்தான் சொல்கிறது" என்றார்.

"அவனுக்கு ஒரு துணைவி இருந்தாளாமே! 'ஈவ்' என்பது அவள் பெயராமே; Evil என்ற ஆங்கிலச் சொல்லே

அவள் பெயரிலிருந்து தான் அமைந்ததாமே! அப்படி ஒருத்தி இருந்தது உண்மை தானே" என்று கேட்டேன்.

"நூறு ஆண்டுகள் வாழ்வது எப்படி என்று ஒரு நூல் தமிழில் இருக்கிறதே தெரியுமா" என்று கேட்டேன்.

"மூவாயிரம் ஆண்டுகள் நிச்சயமாக வாழ்ந்திருக்க முடியாது" என்றேன்.

"விவிலியத்தைக் கூட உங்களால் நம்ப முடியாதா?" என்று கேட்டார்.

"தெய்வத்தை எதிர்க்க முடியும்; சமய நூலை எதிர்க்க முடியாது" என்று ஒப்புக் கொண்டேன்.

"ஆதிமனிதன் 'அரை' உடையில் இருந்தானா? 'கால்' உடையில் இருந்தானா?" என்று கேட்டு வைத்தேன்.

"அவன் ஆதிமனிதனாக இருக்க முடியாது" என்கிறார்.

"அவன் அரை மனிதனாகத் தான் இருந்திருப்பான் என்றேன்" அவருக்கு விளங்கவில்லை.

"ஆடை இல்லாதவன் அரை மனிதன் தானே" என்றேன்; அவர் சிரித்தார்.

திடீர் என்று அடுத்த பிறவிக்குப் பாய்ந்தோம்.

சென்ற 'பிறவியில்' அவரிடம் டிரைவராக இருந்தவன் இந்தப் பிறவியில் வேறு ஓர் இடத்தில் வேலை செய்கிறான் என்று சொன்னார்.

"எங்கேப்பா! இந்தப் பக்கம்வர்ரதே இல்லை"

"உங்களை விட்டுப் போனதும் வேறு இடத்திற்குப் போய் விட்டேன். இப்பொழுது தண்ணீர் அடிக்கிறேன்" என்றான்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. கொஞ்சம் பயமாகவும் இருந்தது. அவன் நிதானம் இழக்கவில்லை.

"இந்தப் பழக்கம் எத்தனை நாளிலிருந்து" என்று கேட்டார்.

"நெய்வேலிக்கும் பண்ருட்டிக்கும் போய் வருகிறேன். லாரியில் தண்ணீர் கொண்டு வருகிறேன். சத்தம் ஆயிரம் கிடைக்கிறது. அதில் நித்தம் எனக்கு இருநூறு தருகிறார்கள்" என்றான்.

"அடபாவி இதை அப்பவே சொல்லித் தொலையக் கூடாதா" என்று தம் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

அவர் ஏன் இவரிடமிருந்து வேலையை விட்டான் என்பது தெரிந்தது, 'தண்ணீர் தண்ணீர்' இந்தப் படம் அவனுக்கு அதிக வருவாய் தந்தது. மக்கள் கண்ணீர் பெருகும் காலத்தில் எல்லாம் வியாபாரிகளுக்குக் கொண்டாட்டம் தான்.

"இப்பொழுது உங்களுக்கு டிரைவர் இல்லையா" என்று கேட்டேன்.

"Self driving தான்" என்றார்.

"அது ரொம்பவும் உத்தமம்" என்று தெரிந்தது போல் பதில் சொன்னேன்.

"சம்பளம் ஒன்பது நூறு கொடுத்தேன். 'பேட்டா' தினம் பத்து கேட்டு வாங்கிக் கொண்டான்; இப்பொழுது விலகி விட்டான்" என்றார்.

"இப்பொழுது போக்குவரத்து நெரிசல் ஆகிவிட்டது; ஓட்டுவது எளிதல்ல; முடியவில்லை. அதை விட பிரமுகர்கள் அடிக்கடி போக்குவரத்துக்கு இடையூறு செய்கிறார்கள் அவர்கள் வருகிறார் என்றால் சாலைகள் தம்பித்துப் போகின்றன."

"இவர்கள் இனிமேல் ஹெலிகாப்டரில் போனால்தான் மற்றவர்கள் நிம்மதியாகப் போகமுடியும்" என்றார்.

"இன்னும் பத்து வருஷம் போனால் எப்படி இருக்குமோ?"

"அது வரையும் சென்னை தாக்குப்பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை" என்றார்.

"அதனால்தான் நான் கார் வாங்கவில்லை" என்று பெருமையாகப் பேசிவைத்தேன்.

"அது இருந்தாலும் சிரமம்; இல்லாவிட்டாலும் சிரமம்" என்றார்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று அதற்கு நிகராக ஒரு பழமொழியைச் சொல்லிவைத்தேன்.

"உங்களுக்கு வசதி இருக்கிறது; அது அவசியம் தேவைப்படுகிறது" என்றேன்.

"தேவை இருக்கிறது; அதனால் அதை வைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது" என்று திருத்தம் கூறினார்.

நாங்கள் பேச்சை எங்கே தொடங்கினோம் என்பது மறந்தே விட்டோம்.

"சென்ற பிறவியில் விட்டோம்; இப்பொழுது புதுப் பிறவிக்கு வந்திருக்கிறோம்" என்றேன்.

"டேய்! இரண்டு கப் காப்பி வாங்கி வா" என்றார்.

"சர்க்கரை போட்டதா போடாததா" என்று கேட்டான்.

நான் புதியவன்; என் இரத்தம் எந்தச் சுவை என்பது அவருக்குத் தெரியாது.

அவருக்கு உப்பு இருக்கிறது; சர்க்கரை இல்லை; எனக்கு எதுவுமே இல்லை.

"அவருக்குச் சர்க்கரை இல்லை; சீனி போட்டே வாங்கி வா" என்றார்.

"இந்தச் சர்க்கரை நோய் பொல்லாதது" என்றேன்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்; உங்களுக்கு இல்லையே" என்றார்.

"வந்து போய்விட்டது பத்து வருஷம் இன்சுலினில் தான் இருந்தேன். நானே போட்டுக்கொள்வேன். இப்பொழுது இல்லை" என்றேன்.

"அது எப்படி முடியும்; ஒரு முறை வந்தால் அது சாகும் வரை தொடரும் என்று கூறுகிறார்களே"

"நான் விதி விலக்கு" என்றேன்; அவர் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

"அது எப்படி முடிந்தது?"

"பென்ஷன் வாங்கினேன்; டென்ஷன் போய்விட்டது" என்றேன்.

"டென்ஷனால்தான் நோய் வருகிறது என்று சொல்கிறீர்களா".

"அதிலே என்ன சந்தேகம்".

"டென்ஷன் இல்லாமல் வாழ முடியுமா?"

"வாழறதிலே அர்த்தமே இருக்காது. அதுவும் தேவைதான்".

அவனிடம் மீதி சில்லரை கேட்கவே இல்லை; அவனும் கொடுக்கவே இல்லை. பழக்கம் அது என்று தெரிந்தது.

"என் மகனுக்கு நல்ல இடத்திலே ஒரு பெண் பார்க்க முடியுமா?" என்று கேட்டார்.

"எந்த இடத்திலும் பார்க்க முடியும். உங்களுக்குப் பெண் எப்படி இருக்க வேண்டும். சொந்தம் பந்தம் சொத்து பத்து".

"படித்தவளாக இருக்க வேண்டும்" என்றார்.

என் அனுபவம் ஒன்றை அவருக்கு எடுத்துக் கூறினேன்.

"ஒரு இன்ஜினியர் இருக்கிறார். அவருக்கு இப்பொழுது வழுக்கைத் தலை ஏற்பட்டு விட்டது; அப்பொழுது இல்லை.

சுருசுருப்பான மனிதர், இப்பொழுது இரண்டு கோடிக்குச் சொத்துக்காரர்.

அப்படிக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்.

அவர் சொன்னார்: "பெண்ணுக்குப் படிப்பு இருக்கக் கூடாது. அதைவிட அழகு அதைத் தேடக் கூடாது. குடும்பத்துக்கு இவை தேவை இல்லை. அப்படித்தான் தேடினேன்; கிடைத்தது" என்றார்.

"நீங்கள் அதிஷ்டசாலி; படிக்காத பெண் கிடைப்பது அதிருஷ்டம்" என்று சொல்லி வைத்தேன்.

"எப்படி சார் சொல்றீங்க." அவர் கேட்ட கேள்வி.

"இன்றைக்குக் காலம் அப்படி ஆகிவிட்டது; தேடித் தேடிப் பார்த்தா கூட எங்கேயும் கிடைக்க மாட்டார்கள்" என்று தெரிவித்தேன்.

"தேடினால் கிடைக்கும் சார்; குடும்பத்துக்குப் படித்த பெண்ணே கூடாது" என்று வற்புறுத்திக் கூறினார்.

அவர் மனைவி அப்படியே வாய்த்தாள் என்றார்." அதை இந்த நண்பரிடம் அறிவித்தேன்."

"இதை ஏன் சொல்றீங்க?" என்று என் நண்பர் கேட்டார்.

"இதிலே என்ன புதுமை இருக்கிறது?" என்று கேட்டார்.

"அவர் பின்னாலே பார்த்த போது ஒட்டு வீடு ஒன்று தேடிக் கொண்டார்; அதை அவரே ஒப்புக் கொண்டார்.

"அழகும் தேவைப்படுகிறது; அதை விலைக்கு வாங்கிக் கொண்டேன்" என்கிறார்.

"உங்களுக்கு என்ன சார் கோடீசுவரன் ஒன்று என்ன இன்னும் இரண்டு மூன்று கூட."

"நேரம் இல்லை என்ன செய்யறது; ஒன்றோடு நிறுத்திக் கொண்டேன்" என்று தெரிவித்தார்." என்றேன்.

இதைக் கேட்பதற்குச் சுவாரசியமாக இருந்தது அவருக்கு.

"சார் எனக்கு ஒரு சந்தேகம்; பெண் கள்ளா? காவியமா?" என்று கேட்டார்.

"ஆரம்பத்தில் கள்; வெறி கொள்ளச் செய்கிறாள். பிறகு காவியம் நமக்கு நெறிகளைச் சொல்லிக் கொண்டே இருப்பதால்" என்றேன்.

"ஏன் சார் பெண் லட்சணமா இருக்கிறாள் என்று சொல்கிறார்களே. எதை வைத்துச் சொல்கிறார்கள்?" என்று கேட்டார்.

"லட்சுமிகரமாக இருக்க வேண்டும்; அதற்கு அவள் லட்சாதிபதிமகளாக இருக்க வேண்டும். அவள் தாமரையில் குடியிருப்பாள்; தரையில் இறங்கமாட்டாள். அவள் நிறம் சிவப்பு; சரசுவதி வெள்ளை நிறம்; உமை கறுப்பு; இப்படித் தெய்வங்களையும் நிறம் கூறித் தரம் பிரித்து இருக்கிறார்கள்.

பிரமன் பார்ப்பனன்; வேதம் ஓதுபவன்; அவன் கலைமகளைத் தேடிக்கொண்டான்; பெருமாள் அவன் பெரும் ஆள்; பணத்தைத் தேடிக் கொண்டான்; சிவன்

எதுவுமே கிடைக்கவில்லை; கிடைத்தது கருப்பு; சிவமே என்று எடுத்துக்கொண்டான்" என்றேன்.

"இதில் யார் புத்திசாலி?" என்று கேட்டார்.

"இந்தக் கதைகளைப் படைத்தவர்கள் தான் புத்திசாலி" என்றேன்.

பிறைமதியை அவர் மகனுக்கு சிபாரிசு செய்யலாம் என்று நினைத்தேன்; அவளுக்குப் படிப்பு இருக்கிறது; தெய்வங்களிடம் யாரும் பண்பு இருக்கிறது என்று பேசுவது இல்லை; அது இவளிடத்தில் இருக்கிறது. திருமகள் என்று கூற முடியாது; ஆனால் வீட்டுக்கு அவள் நல்ல மருமகளாக இருப்பாள். அவளை சிபாரிசு செய்வது என்று முடிவு செய்தேன் ஆனால் அவசரப்படவில்லை.

4

பண்ணையார் 'திண்ணை' என்றே அவர் வீட்டை நான் அழைப்பது; அந்த வீட்டுக்கு அவர் 'அறிவுப் பண்ணை' என்று பெயர் வைத்திருந்தார். அவர் புத்தி சாலித்தனம் கண்டு வியப்பு அடைந்தேன்.

விவசாயப் பண்ணை வைத்தவர் இப்பொழுது வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கிறார். அந்தப் பேச்சு அறிவு தருகிறது என்பது அவர் நம்பிக்கை போலத் தெரிகிறது. அந்த இடத்துக்கு இது தகுதியான பெயர் என்று முடிவு செய்து கொண்டேன்.

அவர் தன்னைப்பற்றிய ஒரு செய்தி சொன்னார். அதைக் கேட்பதற்கு முன் என்னைப்பற்றிச் சொல்வதற்கு முந்திக்கொண்டேன்.

நான் என் தாய்க்கு எட்டாவது மகன்; ஆறாவதாகப் பிறந்தால் அவன் யானை கட்டி வாழ்வான் என்று கூறுவார்கள். அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை அதற்கு உயிர்இயல் காட்சிச்சாலையில் உத்தியோகம் கிடைத்திருக்க வேண்டும். எனக்கு அந்த வாய்ப்பு இல்லை. எட்டாவது பிறந்து விட்டேன்.

எட்டாவது பிறந்தால் மாமன் சாவு தப்பாது என்று சொல்வார்கள். அது உண்மையா பொய்யா என்பது இன்னும் எனக்குத் தெளிவுபடவில்லை. என்னைப் பொறுத்தவரை அது உண்மை என்று தான் நினைக்கிறேன். நான் என் வீட்டுக்கு எட்டாவது மகன்; அது கள்ளம் கபடம் இல்லாத காலம்; வரையறை பற்றிச் செவியறை செய்யாத காலம். என் முன்பிறந்தவர்கள் எல்லாம் மடிவதில் கியூவில் நின்றார்கள். நான் ஒருவன்தான் தேவகி மைந்தனாக நின்றேன். என் தந்தை வசுதேவர் பிறப்பு இறப்புக் கணக்குப் பதிவுகள் செய்வதிலேயே காலம் கழித்தார். அந்த ஆபீசு அவருக்கு அத்துப் படி.

நான் பிறந்த போது என் மாமன் அதாவது தாய் மாமன் என் அம்மாவுடன் பிறந்தவர் அவரைக் கம்சன் என்றே கூறினார்கள். அது அவர் பிறந்த அமிசம்; எங்கள் வமிசம் அப்படி; கல்மிஷம் இல்லாதவர். அந்தக் காலத்தில் மாரடைப்பு என்று இந்தக் கதவு அடைப்பைச் சொல்வது இல்லை; நெஞ்சுவலி என்று சொல்வார்கள், இருந்தார்

கிடந்தார் போனார் என்று அவர் பெயர் எடுத்தார். நான் பிறந்தேன்; அதனால்தான் அவர் இறந்தார் என்ற கதை வலுப்பெற்று விட்டது. ரொம்பவும் வருத்தம் தான். என்னால் ஒருவர் இறந்தார் என்று எப்படிக் கேட்டுக் கொண்டு இருக்க முடியும். ஏன் பிறந்தேன் என்று சில சமயம் எண்ணுவது உண்டு. கஷ்டம் வரும்போது எண்ணுவது உண்டு. என் மாமன் சாவின் பேச்சு வரும்போது இப்படி எண்ணுவது உண்டு.

இதை நம்பத் தயார் இல்லை என்று பலமுறை சொல்லி இருக்கிறேன். மற்றவர்கள் நான் சொல்வதை நம்பத் தயாராக இல்லை. இவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவிரும்பினேன்.

அவரிடம் இதை விவாதிப்பேன். காக்கை ஏறப் பனம் பழம் விழுந்தது என்னும் போக்கை அவருக்கு எடுத்துக் காட்டுவேன். அந்தப் பண்ணையார் நான் சொல்வது எண்ணிப் பார்க்கவும் மறுத்துவிட்டார். தம் சாதகத்திலும் தம் மகன் பாதகம் ஆவான் என்று எழுதி இருப்பதாக எடுத்துச் சொல்வார். அவனுக்கு மணம் ஆனால் மகன் பிறப்பான்; பிறந்தவன் சும்மா இருக்க மாட்டான்; வளர்வான். அவன் வளர்ந்து இரண்டு ஆண்டுகளில் தனக்குத் தீபம் ஏற்றுவான் என்று கணித்து அதைத் துணிந்து கூறுகிறார்.

வாழ்க்கையில் ஒரு முறையாவது வழக்கு உரைஞரிடம் செல்லுவது தப்பாது; படம் நூறு நாள் ஓடினால் அதற்கு என்று விழாக் கொண்டாடுகிறார்கள். ஜோசியம். அவர்கள் பிழைப்பு ஓடிக் கொண்டே இருக்கிறது; அதற்கு ஏந்த விழாவும் கொண்டாடுவது இல்லை; எனறாலும் ஆரவாரம் இன்றிச் செல்வந்தர் தம் வீட்டுத் தாழ்வாரங்களில்

அவர்களுக்கு இடம் தந்து சாதகப் பலன் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர் கணித்துக் கூறுவதைப் பணிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. மறுப்புச் சொல்வதற்கு எதிர் காலம் வராது; முன் நின்று எதிர்ப்புச் சொல்லப் போவது இல்லை. இந்தத் தொழிலை என் நண்பர் தொழில் ரீதியர்க ஏற்காவிட்டாலும் திக்கெட்டும் பரவிய புகழ் இவருக்கு ஒரு சந்தையை உண்டு பண்ணிவிட்டது. அட்வான்சு புக்கிங் செய்துவிட்டு ஆட்கள் அவரிடம் வந்து கொண்டிருந்தனர்.

நான் சொல்லுவேன் "உமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. யாருமே தம் பதவிகளில் ஒட்டிக் கொண்டி ருப்போம் என்ற நம்பிகைகள் இருப்பது இல்லை. தேர்தல்கள் இருக்கும் வரை உங்களுக்கு நல்ல பிழைப்பு. ஜோசியனைக் கலக்காமல் கட்சி டிக்கட்டுகள் வாங்கமாட்டார்கள். வெற்றி பெற்றதும் ஐந்தாண்டு நீடிக்குமா என்று ஐயப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் அமைச்சர்கள் ஆகிவிட்டாலும் ஆட்டம் கொடுக்காது என்பது நிச்சயம் இல்லை. இவர்கள் எல்லாம் உம்மிடம் வந்துகொண்டே இருப்பார்கள். அதைவிட நடிகர்கள் நடிகைகள் அவர்களுக்குத் தம் நடிப்பு மீது நம்பிக்கை இருப்பது இல்லை. அப்படி இருந்தாலும் இந்த மக்களை நம்புவதற்கும் இல்லை; ரசிகர்கள் அவர்களை நம்ப முடியாது. அதனால் தம் நட்சத்திரப் பதவி நிலைக்குமா என்ற அச்சம் ஏற்படுகிறது. இவ்வாறு எந்தத் தொழில் செய்தாலும் அதில் நிலைபேறு இருப்பது இல்லை. தொழிலுக்கு வந்தவர்கள் தங்கள் பதவி உயர்வு எப்போது என்று சதா கனவு கண்டு கொண்டே இருக்கிறார்கள்.

நிச்சயமற்ற நிலையில் உம் தொழில் நிச்சயம் வெற்றி பெறும்; அச்சமின்றித் தொடரலாம்" என்று ஊக்குவிப்பேன்.

அவர் அதை ஏற்றுக்கொண்டது இல்லை. காசு வாங்கினால் பலிக்காது என்பது அவர் நம்பிக்கை. போகட்டும் வட்டிக்கடை வைத்து ஈட்டிக்காரர் ஆகிப் பலர் சேட்டுகள் ஆகி வருவதைச் சுட்டிக் காட்டுவேன். அதை இப்படியாவது பெருக்கலாமே என்று அவருக்கு வழிகள் பேசிக் காலம் கடத்துவோம்.

"திரை வானமும் புது மழை பொழிகிறது. இனிமேல் உணர்ச்சி நடிகர்களுக்கு இடம் இல்லை. செயல் நடிகர் களுக்கே எதிர்காலம்; கராத்தே பயிற்சியாளரும் குத்துச் சண்டை வீரர்களும் இனிமேல் திரைப்படத்தில் தம் சாகசங்களைக் காட்ட முயல்வார்கள். அவர்களும் உம்மைக் கேட்டுக் கொண்டுதான் கால் வைக்கப் போகிறார்கள்" என்று பேசித் தூண்டுவேன்.

எவ்வளவு சொல்லியும் அவர் இதைத் தொழிலாக ஏற்று நடத்த முன் வரவில்லை. அவர் ஏதோ திட்டத்தைத் தீட்டுவது போல் எனக்குக் காணப்பட்டார்.

பேச்சை மாற்ற நினைத்தேன்; அதனால் அவன் மகன் முத்துவைத் தேர்ந்து எடுத்தேன்.

"முத்துக்கு என்ன வயது?"

"முப்பதுக்கு மூன்று குறைவு" என்றார்.

"நாற்பதுக்குப் பதின்மூன்று குறைவு என்று கூறி இருக்கலாமே" என்றேன்.

"இருபதும் ஏழும்" என்றார்.

"இருபத்தேழு என்று சொல்லி இருக்கலாமே?"

"ஜோசிய நூல் படித்துப் பழக்கம். அதில் வீடுகள் இப்படித்தான் சுட்டிக் காட்டுவார்கள்" என்றார்.

தொழில் பழக்கம் என்பது அறிந்தேன்.

'பெண்ணுக்கு வயது இருபத்து ஒன்று. அதுதான் கலியாண வயது" என்றார்.

"யார் நிச்சயித்தது?"

"அரசாங்கம்"

"சற்றுத் தள்ளிப்போடலாமே"

"முப்பதுக்குப் போகக்கூடாது"

"நீங்கள் தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறீர்களே" என்று கேட்டுவிட்டேன்.

"தள்ளிப் போடவில்லை; கொள்ளி போட என் பேரன் பிறப்பான் என்று சாதகம் கூறுகிறது. அவன் பிறந்து இரண்டாம் ஆண்டு நான் என் இரண்டு கண்களையும் மூடி விடுவேன் என்று எழுதி இருக்கிறது. அதைச் சற்றுத் தள்ளிப் போடலாமே என்றுதான் பொறுத்து இருக்கிறேன்" என்றார்.

"நீங்கள் வருமுன் காத்திருக்கலாமே?"

"எதைச் சொல்கிறீர்?"

"மகனைப் பெறாமல் இருந்திருக்கலாமே?"

"அவள் கேட்டால் தானே! அவள் அவசரப்படுத்தினாள்; நிதானிக்கலாமே என்றேன்; என் ஆண்மையைச் சந்தேகித்தாள். சாதகம் அப்படிக் கூறுவது உண்மை என்றால் அதனால் பாதகம் இல்லை. நான் நிச்சயம் பேரனைக் காண்பேன்" என்று பேசுகிறாள்.

"பையனையும் அவசரமாகப் பெற்றெடுத்தாள்; இப்பொழுதும் அவசரப்படுத்துகிறாள். பையனுக்கு முதலில் கலியாணம் பண்ணிவையுங்கள்; மருமகள் இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கட்டும். அது போதும். இந்த வீடு கிழடு தட்டிவிட்டது. வரவர இது சந்நியாசி மடமாகப் போய்க் கொண்டு இருக்கிறது. காவி வேட்டி ஒன்று வாங்கி அதை இரண்டாகக் கிழித்து உங்களுக்கு ஒன்று; உங்க பையனுக்கு ஒன்று என்று மாட்டிக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு வெள்ளைச் சேலையை மஞ்சளில் நனைத்துக் கொடுங்கள். அரே கிருஷ்ணா இயக்கத்துக்கு நான் தலைமை வகிக்கிறேன். இதனைப் பஜனை மடம் ஆக்குகிறேன் என்று கூறுகிறாள்" என்றார்.

5

ஜோசியரை நோக்கி ஒரு ஓசி கிராக்கி வந்து சேர்ந்தது. அவர் ஏழை என்றும் பணக்காரன் என்றும் இந்த வகையில் வேறுபாடு காட்டுவது இல்லை. தன்னை மதித்து வருகிறான் என்பதைவிடத் தன் ஜோசியத்தில் அவன் நம்பிக்கை காட்டுகிறானே என்பதால் அவனைப் பெரிதும் வரவேற்றார்.

"ஏன் சார் ஒருத்திகூட நிலைத்து இருக்கமாட்டேன் என்கிறாள்" என்று மனைவியைப் பற்றிய அழுகையைத் தன் தொழுத கையோடு கூறினான்.

"ஏன் ஒரு வேலைக்காரன்கூட நிலைத்து இருக்க மாட்டேன் என்கிறானே" என்று கூறுவது போல் இருந்தது அவன் சொல்வது.

"அவர்கள் என்னோடு தாக்குப் பிடிக்க மாட்டாமல் தூக்குப் போட்டுக்கொண்டார்கள்" என்றான்.

"காரணம்?"

"பெண்கள் தூக்குப் போட்டுக் கொள்வதற்கு இதுவரை யாரும் காரணம் கண்டுபிடித்ததே இல்லை; இனிமேலும் இதில் யாரும் வெற்றி பெற முடியாது" என்றான்.

"நீ அவளைக் கவனிப்பது இல்லையா?"

"குடித்துவிட்டு வந்து நன்றாகக் கவனிப்பேன். நான் அடித்தால் அழவேண்டுமே. அதைச் செய்ய மாட்டாள். அடி'யா இன்னும் போட்டு உதை என்று அடம்பிடிப்பாள். அதை எப்படி நிராகரிப்பது? என்னால் முடிந்தவரை விளாசுவேன். அதற்குப் பிறகு சங்கீதம் செய்வாள்; அவள் பாட்டைக் கேட்க அக்கம் பக்கத்தவர் வந்து கூடி விடுவார்கள்.

"அவன் பெண்டாட்டியை அவன் அடிக்கிறான்; உங்களுக்கு என்ன வேலை?" என்று ஒரு பெரிய மனிதர் மைக் இல்லாமல் பேசுவார்.

"இன்று அடிப்பான்; நாளைக்குக் கொஞ்சுவான்; அது அவன் இஷ்டம். பொண்டாட்டி புருஷன் சண்டை" என்று கூறி அலுத்துக்கொண்டு போய்விடுவார்கள். மண் சிவக்காது. கண்தான் சிவக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"ஏன்'பா அவளை அடிச்சே?"

"சே! அந்தச் சுகம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் ஒரு நாள் தொட்டுப் பாருங்க. உங்களுக்குச் சுகம் தெரியும்" என்றான்.

நாங்கள் ஏன் நிம்மதியாக இருக்கிறோம் என்று அவன் உபதேசம் செய்தான்.

"அடுத்தவள்?"

"குடியைக் கெடுத்தவள்; ஓடுகாலி" என்றான்.

"இது என்ன நாற்காலி முக்காலிபோல இருக்கிறதே?" என்று கேட்டேன்.

"எனக்குத் தெரியாது" என்றான்.

என் நண்பர் புத்திசாலி; அதனால் இதற்கு விளக்கம் தந்தார்.

"ஓடுகின்ற காலை உடையவள் ஓடுகாலி. கை மாறுவாள்; ஆள் மாறுவான்; அவள் ஒரு இடத்தில் நிலைத்து இருக்கமாட்டாள்" என்று விளக்கம் தந்தார்.

'Rolling Cup' என்று கேள்விப்பட்டிருக்கிறேன் அதுபோல் இது இருக்கிறது என்று கூறி விளங்கிக் கொண்டேன்.

மேலே அவன் தொடர்ந்தான்.

"அவள் ஒருவனை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டாள்" என்றான்.

"அவன் அவளை இழுத்தானா? அவள் அவனை இழுத்தாளா?" என்று கேட்டேன்.

"இந்த இழுபறி எல்லாம் எனக்குத் தெரியாது: அவள் என்னிடத்தில் இல்லை" என்றான்.

"நல்லதாகப் போச்சு: அவளும் மற்றவளைப் போலத் தூக்கு மாட்டிக் கொண்டு உனக்குத் துயரத்தை உண்டாக்காமல் போய் விட்டாள், உத்தமி" என்றேன்.

"உத்தமி யார் என்று நான் கேட்கவில்லை. இருந்து கெடுத்தவளா இல்லாமல் கெடுத்தவளா என்று நான் கேட்கவில்லை. அடுத்து மற்றொருத்தியை நான் தாலி கட்டினால் அவளாவது தங்குவாளா?" என்று கேட்டான்.

"சட்டப்படி அவள் உன்மனைவி: அவள் இஷ்டப்படி இன்னொருவனுடன் இருந்து பார்க்கிறாள்; கட்டுப்படி இல்லை என்றால் தட்டுத் தடுமாறி உன்னிடம் வரவேண்டியவள் தானே?" என்று ஆறுதல் கூறினேன்.

"அது எப்படித் திரும்புவாள் என்று எதிர்பார்க்கிறீர்?" என்று கேட்டான்.

"ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள்; 91வது நாள் அவள் வந்து சேர்வாள்" என்று ஜோசியர் கூறினார்.

அன்று ஆறுதலாகச் சென்றான்; மறுநாளும் வந்து அறுத்தான்.

"உன்னை விட அவள் வசதி மிக்கவளா?"

"இருக்கலாம்; தெரியாது"

"அப்படியானால் மறந்து விடு" என்று அறிவுரை கூறினேன்.

"உங்களைக் கேட்கவில்லை. ஜோசியரைத்தான் கேட்கிறேன்" என்று திருத்தம் கூறினான்.

பண்ணையார் அவன் கிரகங்களை எண்ணினார். விண்வெளியே பயணம் செய்தார். சுக்கிரன் சனி குரு புதன் இவர்களைத் தேடிக் கண்டுபிடித்தார்; அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று வழிகாட்டி நூல் ஒன்றை வைத்துப் புரட்டிப் பார்த்துக் கண்டுபிடித்துச் சொன்னார்.

"சனி எட்டாம் திசையில் இருப்பதால் அவளும் உனக்கு எட்டாத தூரத்துக்குப் போய்விடுவாள்; உனக்குத் தாலி பாக்கியம் இல்லை; தனபாக்கியம்தான் உண்டு" என்று சொல்லிமுடித்தார்.

"ஐயா! அவள் பெயர் தனபாக்கியம். பேர் ராசி பார்த்து அவள் பெயர்ந்து திரும்புவாளா என்று பார்த்துச் சொல்லுங்கள்" என்று வேண்டிக்கொண்டான்.

"அவள் நல்லவள்தான்; கிரகதோஷம் அவளை ஆட்டிப் படைக்கிறது" என்றார்.

"உன்னை ஆட்டிப்படைக்காமல் இருக்க வேண்டும்; அதைப் பார்த்துச் சொல்லுங்கள்" என்றான்.

"தனபாக்கியம் என்ற பெயர் இருப்பதால் அவள் உன்னிடம் வர வாய்ப்பு இருக்கிறது. பிறகு நீ அவளைப்

பத்திரமாக வைத்துக் காப்பாற்ற வேண்டும்: அந்தப் பொறுப்பு உன் கையில்தான் இருக்கிறது" என்று கூறினார்.

"உன் பையிலும் இருக்கிறது." என்று பேசிச் சிரிக்க வைத்தேன்.

மலடி கரு உற்றது போலவும், குருடன் விழி பெற்றது போலவும், செத்தவன் உயிர் பெற்றது போலவும் நிதி நிறுவனங்களில் கட்டிய டெபாசிட்டுகள் ஒழுங்காக கைக்கு வந்தது போலவும் சென்றவள் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

எல்லாம் ஜோசியரின் கருணை என்று அவன் அவர் கணிப்புத் திறனைப் பாராட்டினான்.

"இவளா இவன் மனைவி" என்று ஆச்சரியத்தில் கேட்டு வைத்தேன்.

"ஏன் கேட்டீர்கள்?" என்றார்.

"அழகாக இருக்கிறாளே என்பதால்" என்றேன்.

"அழகாக இருக்கக்கூடாதா?" என்று கேட்டார்.

"இல்லை; அவள் திரும்பி வந்துவிட்டாளே. அதனால் தான் கேட்டேன்" என்றேன்.

பிரிந்தவர் கூடினால் பேசாது இருக்க முடியுமா?

அம்பு மழை தொடுத்தாள்.

"போனவள் திரும்பமாட்டாள் என்று நினைத்து விட்டாயா? புது ஜாதகம் பார்க்க வந்து விட்டாயா?" என்று விசாரணை நடத்தினாள்.

"உனக்குப் பாதகம் விளைவிக்க மாட்டேன். நீ போன இடத்தில் நிலையாக இருப்பாயா என்றுதான் விசாரித்தேன்." என்றான்.

"உனக்கு ஒரு பாடம் கற்றுத்தரத்தான் போனேன். உன் மூஞ்சிக்கு எவன் சட்டை செய்வான் என்று சொன்னாயே! அதுக்கு ஆள் இருக்குது என்று காட்டத்தான் போனேன்" என்றாள்.

"அவன் ஏன் உன்னை விட்டு விட்டான்?"

"அவனுக்கும் இதே பிரச்னைதான். அவன் மனைவி அவனைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்டு இருக்கிறாள். "உன் மூஞ்சிக்கு எவள் வருவாள் என்று. அதுக்கு ஆள் இருக்குது என்று காட்டத்தான் என்னை அழைத்துக் கொண்டு போனான். அவள் திருந்திவிட்டாள்; என்னைத் திருப்பிவிட்டான்" என்று விளக்கம் தந்தாள்.

"இனிமேல் ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி நீதிபதி போலப் பேசி அவர்கள் இருவரையும் விடுவித்தோம். "நன்றி" என்று சொல்லி அந்த நாயகன் எங்களை விட்டு நீங்கினான். இது சிரிப்பதற்கு ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியாக இருந்தது.

நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கூனியின் முதுகை இராமன் உண்டை வில்லால் அடிப்பான் என்று. சிறுவன் ஒருவன் பந்தடித்து முன்னால் இருந்த 'பல்பை' உடைப்பான் என்று.

இராமனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவன் நடுநடுங்கிவிட்டான்.

"ஏன் பயப்படுகிறாய்? மறுபடியும் உடைப்பதற்கு 'பல்பு' இல்லை என்றா? கவலைப்படாதே. புதிது ஒன்று மாட்டி வைக்கிறேன். நாளை வந்து உடை" என்று ஆறுதல் கூறி அனுப்பினார்.

இது மற்றோர் சுவை மிக்க நிகழ்ச்சியாக இருந்தது.

6

பிறைமதி ஒளிவிட வேண்டிய வானம் பண்ணையார் இல்லம் தான் என்று எனக்குப் பட்டது. படித்தவள் வேண்டும் என்று அவர் சொன்னாரே தவிர அவள் பட்டம் பெற்றவளா அதை விட்டவளா என்று திட்டவட்டமாக அவர் தீட்டிக் காட்டவில்லை.

படித்தால் அவள் நாலு காசு கொண்டு வந்து சேர்ப்பாளா அல்லது குணவதியாகக் குண்டுச் சட்டியில் குரிரை ஓட்டத் தேவையா என்பதை அவர் விளக்கவில்லை.

அவசரப்பட்டு நானும் ஆவேசப்படவில்லை. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு. நாக்கை அதன் போக்கில் விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது நாவலர் வள்ளுவர் நவின்று உரைப்பது நான் அறியாதது அல்ல. அந்தக் குறளே விசித்திரமானது. 'காக்க' என்று வரும் கா என்ற சொல்லை மீண்டும் மீண்டும் ஆளுவது அபாய அறிவிப்பாக இருக்கிறது.

"யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பது அந்தக் குறட்பா.

சோ என்றால் சோகம், சோர்வு என்ற பொருள் தருகிறது. இச்சொற்களில் கடைக் குறையோ இது என்று நடைமுறையில் எண்ணத் தோன்றுகிறது. சோ என்ற நடிகர் ஒருவர் எழுத்தாளராகவும் இருந்து சோர்வினைப் போக்கி வருகிறார் என்பதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

நகைச்சுவையாகப் பேசுவதில் நயத்தக்க சாதனை படைத்தவர் இந்த 'சோ'. தமிழில் நகைச் சுவை விருந்து நல்கிய நல்லோர்கள் இல்லாமல் இல்லை.

"எட்டே கால் லட்சணமே எமனேறும் பரியே" என்று அவ்வையார் யாரையோ விளித்தாராம்.

அவன் உச்சி குளிர்ந்து விட்டானாம்; எட்டும் காலும் கூடிய அளவு அழகும் பொலிவும் உடையவன் எனவும், எமன் ஏறும் வாகனம் எனவும் தன்னைச் சிறப்பித்ததாகக் கருதிக் கொண்டானாம். பிறகு தெரிந்தது; தான் அவலட்சணம் என்றும் எருமைக்கடா என்றும் இழித்துக் கூறி இருக்கிறார் என்பது.

கழகப் பதிப்பில் தமிழில் எண்கள் எழுதுவார்கள். எட்டு என்பதற்கு 'அ' என்றும் கால் என்பதற்கு 'வ' என்றும் அச்சிடுகிறார்கள். இது தமிழ் எண்கள் ஆக 'அவ' என்றால் எட்டே கால் என்பதை உணர்த்துகிறது. எமனேறும் வாகனம் எருமைக்கடா; நயமாகப் பேசுவதில் நாயகமாகவும் தமிழ்ப் புலவர்கள் விளங்கி இருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

'நா காக்க' என்பது இப்பொழுது அவசியம் ஆகி விட்டது. பழங்காலத்திலே போருக்குச் சென்றானாம் ஒரு தலைவன். வீட்டில் தலைவி இருக்கிறாள். அவன் நினைவுகள் இருபக்கம் இழுக்கப்படுகின்றன.

இரண்டுக்கும் நடுவில் அவன் மனம் அல்லல் உறுகிறது. 'தேய்புரிப் பழங்கயிறு போல' என் நெஞ்சு அழிந்து விடுமோ என்று அவன் கூறுகிறான். அது போன்ற நிலைமையாக என் நிலைமை ஆகிவிட்டது.

பிறை மதியை அவர் திருமகனுக்குப் பேசி முடிப்பதா என் அருமைமகன் வேலுச் சாமிக்குக் கட்டி வைப்பதா என்று இருபால் படாது என் நெஞ்சு அலைவுற்றது.

7

பிறையை அடிக்கடி பார்க்க முடிவது இல்லை; எப்பொழுதாவது தோன்றும்; மறையும். அவள் கையில் ஒரு கடிதம் வைத்திருந்தாள், முத்து முத்தாக எழுதி இருந்தது. கீழே 'முத்து' என்று பெயரிடப்பட்டு இருந்தது. அதைத் தவறிக் கீழே கத்தும் குயிலோசை பிறை கீழே போட்டுவிட்டாள்; அவள் குரல் கேட்பதற்கு இனிமையானது.

அதை எடுத்தேன்; கொடுத்தேன். "எடுக்கவோ உன் கையில் சேர்க்கவோ" என்றேன்..

அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்றேன்.

"பாரதக் கதை நினைவுக்கு வருகிறது. பானுமதியுடன் கர்ணன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தான். திடீர் என்று தன் கணவன் குருடன் மகன் துரியோதனன் வருவதைப் பார்த்து 'வெருட்டு' என்று எழுந்தாள். அவள் ஆட்டத்துக்கு அஞ்சி எழுந்தாள் என்று தேரோட்டி மகன் கர்ணன் அவள் முந்தானை முடிச்சை அவிழ்த்தான். அப்பொழுது அவள் மேகலை பொத்தென்று விழுந்தது.

துரியோதனன் கொஞ்சம் கூடச் சந்தேகப்படவில்லை. சேலையைத் தொட்டதும் வேலை எறிய வேண்டிய காளை அவன். என்ன சொன்னான் தெரியுமா? கர்ணா! எடுக்கவோ கோக்கவோ என்றான். அந்தச் சொற்களை நீங்கள் சொல்வது எனக்குச் சிரிப்பை உண்டாக்கியது" என்றாள்.

"இலக்கியத் தாக்கம்" என்றேன்.

"இது என் பிரிய நண்பர் முத்துவின் கடிதம். என் சோர்வு நண்பர்" என்றாள்.

எனக்கு விளங்கவில்லை இது புதுநட்பு; படிக்கும் இளைஞர்கள் அடக்கம் மீறி அடிக்கடி சந்தித்து அரட்டை அடித்து அதனால் 'பாவியத் தோழமை' பெறுவது உண்டு; துள்ளி எழும் இளமை; அதன் உரிமை அது.

'சோர்வு நண்பர்' என்ற புதிய சொல் எனக்குப் புதிரைத் தோற்றுவித்தது.

"தொழில் தேடுபடலத்தில் எழில் பெற அமைவது இந்தப் புதிய நட்பு" என்றாள்.

"உமக்குத் தெரியாது ஒவ்வொரு இன்டர்வியூவிலும் உள்ளே எங்கள் முதலாளிகளைச் சந்திக்கிறோமோ

இல்லையோ எம் தோழர்களைச் சந்திக்காமல், இருக்க மாட்டோம். எங்கள் அவலங்களைப் பரிமாறிக் கொள்வோம்.

"எங்கெங்கே போட்டீர்கள்? எங்கெங்கே இருந்து அழைப்பு இதழ்கள் வந்தன?" என்று விசாரிக்காமல் இருக்க மாட்டோம்.

"சில கவி அரங்குகளில் பட்டி மன்றங்களில் வருகிற வர்களே வந்து அறுப்பதைப் பார்த்திருப்பீர்கள்; அதைப் போன்று வந்தவர்களையே பார்த்து அலுத்துவிடுவோம். சில முகங்கள் மறைமுகங்கள் ஆகிவிடுவதும் உண்டு; பெண்கள் தொடர்ந்து வரமாட்டார்கள். அவர்கள் கதை முடிந்து சூதையாகி விடுவது உண்டு. அவர்கள் விலை போய் இருப்பார்கள் என்று முடிவு செய்து கொள்வோம்.

அவர்களும் மறக்காமல் மண இதழை அனுப்புவார்கள்; அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிக் கொண்டிருப்போம். ஜனத்தொகை குறைந்தது என்று மகிழ்ச்சி அடைகிறோம்; புரியவில்லையா? இன்டெர் வியூவுக்கு வருகிறவர்கள் எண்ணிக்கை குறைந்தது என்று ஆறுதல் அடைவோம்."

"முத்து உனக்குத் தெரியுமா?"

"அவர் எழுதின கடிதம் தான் இது."

"உங்களுக்குள் அஞ்சல் வழிக் கல்வி உண்டா?" என்று கேட்டேன்.

"சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அவசியம் குறித்து அடிக்கடி எழுதுவார். இளைஞர்களுக்கு இது தவிர வேறு வழி இல்லை" என்று அடிக்கடி கூறுவார்.

"பெண் இன்று ஆண்களைப் போல அவதிப்பட வேண்டி இருக்கிறது. முன் நாங்கள் வீட்டில் இருந்தோம்; அவர்கள் பொருள் ஈட்டி எங்களைப் போற்றி வந்தார்கள். 'மனைமாட்சி' என்று கூறி எங்களை இல்லத்து அரசி என்று புகழ்ந்தார்கள்; இன்று வினைமாட்சி தேடி இன்மைக்கு அரசி என்று அலைய வைக்கிறார்கள்.

சுதந்திரம் என்று பேசுவது எங்களுக்கு அல்ல; ஆண்களுக்கு நாங்கள் தருவது தான் சுதந்திரம். நாங்கள் எங்கள் உரிமைகளுக்காக அவர்களை வற்புறுத்துவது இல்லை. "நீ தான் தெய்வம்" என்று பூசித்து அவர்கள் தரும் வரங்களுக்காகக் காத்துக் கிடந்தோம். அது பழைய காலம். "தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள்" பெண் என்று கூறி எங்களை அடிமைப்படுத்தி வந்தார்கள். அந்த அடிமை நீங்கி விட்டது. எங்கள் தொழுகையில் அவர்களைச் சிக்க வைத்தோம்; அவர்கள் எங்கள் அழுகையில் அடிமைப் பட்டிருந்தனர்.

இன்று அவர்கள் ஏமாறுவது இல்லை; பொருள் ஈட்டுவதில் இருவர்க்கும் சம பங்கு உண்டு என்று வற்புறுத்தப் படுகிறது. எங்களையும் உழைக்கவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். 'படித்த பெண் வேண்டும்' என்று புதிய கோஷம் எழுந்து விட்டது. எதற்காக? அவள் சம்பாதிப்பாள்; வீண் சுமையாக வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்க மாட்டாள்.

'காதல் ஒருவனைக் கைப்பிடித்துக்
காரியம் யாவும் செய்து முடிப்போம்'

என்று பாடிய கவிஞர் அவர் கண்ட கனவு வேறு; நடைமுறை வேறு.

'கல்விக்கு உரியவனைக் கட்டி வைப்போம்
காரியம் யாவும் சாதித்து முடிப்போம்'

என்று இளைஞர்கள் இன்று சிந்து பைரவி பாடத் தொடங்கி விட்டனர்.

நாங்கள் ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு படிக்கவில்லை; எங்களுக்குள்தான் படிப்புப் போட்டி.

எங்களை மணம் செய்து கொள்வதால் நன்மை உண்டு. அவனோடு ஒட்டுவோம்; உறவு முறிந்தால் வெட்டிவிடும் இயல்பு எங்களில் பலருக்கு ஏற்படுகிறது.

படித்தவள் முதலில் கூட்டுக் குடும்பத்தை உடைக்கிறாள் என்ற கெட்ட பெயர் எங்களுக்குப் படிந்து விட்டது. முன்பு எல்லாம் சிலைகளை அலங்கரிப்பது போல் எங்களை அலங்கரித்துக் கலையழகு கண்டனர்; இப்பொழுது நாங்கள் அழகு அங்காடிகளுக்குச் சென்று நிலை குலைந்து அலங்கோலமாக நின்று அவர்களுக்குப் புதுமை தர வேண்டி இருக்கிறது.

எங்கே நாங்கள் மணமுறிவு ஏற்படுத்தி விடுகிறோமோ என்று மன முறிவுள் அரிப்புக் காண்கின்றனர். நித்திய கண்டம் பூரண ஆயுள் எங்கள் ஒப்பந்தங்கள்.

எந்தக் கணவனாவது எங்களைத் துணிந்து எங்கள் மேல் கை வைக்கமுடியுமா! அடிப்பது இருக்கட்டும் 'அடி' என்று கூறவும் ஒரு அடி எடுத்து முன் வரமாட்டான். 'அம்மா' என்று அழைக்கும் புதுமை வந்து விட்டது. தாய்க்கும்

தாரத்துக்கும் வித்தியாசம் இருந்தது; பேதமற்ற சமுதாயம் உருவாகிவிட்டது.

கணவன் அவனுக்கு நாங்கள் உடைமையாக இருந்தோம்; 'என் மனைவி' என்று சொல்லி அவன் தன்னோடு இணைத்துக் கொண்டிருந்தான்; இன்று 'எனக்கு மனைவி' என்று தான் சொல்ல முடிகிறது.

இன்று பாசத்தை விட மதிப்பும் மரியாதையும் மலிந்து விட்டன. இது தேய்வா வளர்ச்சியா என்று கூற இயல வில்லை" என்று தொடர்ந்து பேசினாள்.

"எனக்கு ஒரு சின்ன ஆசை உண்டு. என் கணவன் நன்றாகக் குடித்து விட்டு வரவேண்டும். அந்த மயக்கத்தோடு என்னைத் தேடி நயக்க வேண்டும். கோபம் வந்து என்னை அடித்துப் புரட்டவேண்டும். இந்த ஆசை படித்தவள் எனக்கு நிறைவேறுமா?"

"உன்னைத் தொடலாமா?" என்று அனுமதி கேட்கும் மதிநிறைந்த நன்னாள் ஆகிவிட்டது. இழுத்துப் போட்டு அடித்து நொறுக்கும் அழகினைப் படித்த பெண் இழந்து விட்டாள்.

'உடைமை' என்று கொள்ளும் அதில் உள்ள இறுக்கம் உரிமையில் இருப்பது இல்லை. எங்கள் உடைமைப் பார்வையிலும் அவர்கள் அவதிப்படமாட்டார்கள் என்பதை மறுக்கவில்லை. 'சந்தேகம்' என்பது எங்கள் மேல் வைத்த பாசத்தால் தான் ஏற்படுகிறது. அவர்கள் புனிதத்தில் நாங்கள் பெருமைப்படுகிறோம். பிறன் மனை நோக்காத பேராண்மை தன் கணவனுக்கு இருக்கிறது என்றால் பெண் பூரித்துப் போகிறாள்.

இன்று அவர்கள் பழகும் பழக்கம் வேலிகள் இடப்படும் கேலிக் கூத்துகள் ஆகிவிட்டன. 'தனிப்பட்ட சுதந்திரம்' என்று வேறுபட்டு இயங்குகின்றனர். என் குருதியில் பழைய உறுதிகள் நிலைத்து விட்டன. அவை சிதைந்து விடுமோ என்ற பதைப்பில் நான் அஞ்சுகின்றேன். புதுமை வேகத்தில் ஒரு பதுமையாக இருந்து என்னை அழித்துக் கொள்ள மாட்டேன். எதையும் ஆற அமரச் சிந்தித்தே என் வாழ்வை அமைத்துக் கொள்வேன்" என்று கூறினாள்.

"பண்ணை வீட்டாருக்கு உன்மேல் அபிப்பிராயம் உண்டாக்க முடியும்" என்று அறிவித்தேன்.

"அவசரப்பட வேண்டாம்" என்று என்னைத் தடுத்து நிறுத்தினாள்.

8

அவள் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தினாள். அவள் விழிப்பு என் உறக்கத்தைக் கலைத்தது; படித்தவள் என்றால் அவளைப் பற்றித் தவறாகக் கருதியது உண்டு. ஆங்கிலம் பேசுவது நாகரிகம் என்று தமிழை மறக்கும் தாய்மையைக் கண்டது உண்டு.

நடிகை நங்கையர் நடிப்பது தமிழில். அவர்கள் தனிப் பட்ட உரையாடல்கள் ஆங்கிலம். எல்லாம் கான்வென்ட்டு படிப்புகள். இந்த மின்னல்களைக் காணும் எனக்கு இந்த மண்ணில் பூக்கும் மல்லிகைகளைக் காணும்போது மகிழ்வு ஏற்படுகிறது. மண்வாசனை மாறவில்லை.

அவசரப்படவேண்டாம் என்று கூறியது அவள் எனக்கு இட்ட அறிவுரையாகப்பட்டது, நான் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை உணர்கிறேன். வயது ஆகிவிட்டால் பிறர் விவகாரங்களில் அக்கரை காட்ட வேண்டியுள்ளது. அதை மற்றவர்கள் எதிர் பார்க்கிறார்கள் வயது முதிர்வைத் தருகிறது. அதிர்வுகளை விலக்கி அணைப்பு களை ஏற்படுத்த முடிகிறது. மூத்தோர் சொல்வார்த்தை அமிழ்தம் என்று அறம் கற்றோர் சொல்லிக் கேள்விப்பட்டது உண்டு. எனினும் எதையும் சிந்தித்துக் கூறுவது தேவை என்று பட்டது. 'எண்ணித் துணிக கருமம்' என்று இந்த அவ்வைப் பாட்டி எனக்குத் திருக்குறள் போதித்தார்.

9

மிகவும் கனமான விஷயமாகப் பிறை மதி எனக்குப் பட்டாள். லேசாக என் மனத்தை ஆற்றிக் கொள்ள விரும்பினேன்.

டி.வி. சானல்கள் மாற்றிப் புதிய நிகழ்ச்சிக்குத் தாவுவதைப் போன்றிருந்தது கதை தொடரும் வனிதையின் வருகை.

நூல்களைப் படிப்பதை விட மாந்தர் உரைகளைக் கேட்பதில் ஒரு மயக்கம் ஏற்படுகிறது.

அவள் கொண்டு வருவது அதே பண்டப் பொருள் தான்; சொல்லவருவது மண்டிய புதிய செய்திகள்.

பிள்ளைகளைப் பற்றிக் கேட்டேன். அதில் அவளைக் கிள்ளுவதற்கு எதுவும் இல்லை என்பதால் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டது. தன்

கணவனைப் பற்றிப் பேசுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. கடல் கடந்து காசு ஈட்டச் சென்ற கணவனின் நிலை பற்றிப் பேசினாள். அரபு நாட்டுக்குச் சென்ற வரலாற்றில் பணம் கொடுக்கும் மரபு அடங்கி இருந்ததைச் சுட்டிக் காட்டினாள்.

"பணத்துக்கு இனி குறைவு இருக்காது" என்று தட்டிக் கொடுத்தேன்.

"அதற்கு வாங்கிய கடனே ஐம்பதினாயிரம். அதை அடைக்க முடியாமல் அவதிப்படுகிறோம்" என்று பதில் தந்தாள்.

எனக்கு இந்த அனுபவம் இல்லை; புதுமையாக இருந்தது.

"அவரை அனுப்ப ஏஜெண்டுக்கு ஐம்பதினாயிரம் தர வேண்டி இருந்தது" என்று விளக்கினாள்.

இடைத் தரகர்கள் அடிக்கும் கொள்ளை நெஞ்சை உலுக்கிவிட்டது.

"அங்கே அதிக சம்பளத்துக்கு என்று போகிறார்கள். அதில் பாதி இவர்களுக்குக் கொட்டி அழ வேண்டி இருக்கிறது; அதற்கு வாங்குகிற கடன் அது போடுகிற வட்டி அது குட்டி போட்டுக்கொண்டே போகிறது. அதற்கப்புறம் அவர் திரும்பி வந்து விடுவார். கடைசியில் ஒன்றும் இருக்காது" என்று விளக்கினாள்.

"பின் ஏன் இங்கு இருந்து அவரை அனுப்ப வேண்டும்?" என்று கேட்டேன்.

"அவரை வைத்துச் சமாளிக்க முடியவில்லை. செலவுக்கு நான் சம்பாதிப்பதையும் பங்கிட்டுக் கொள்கிறார்."

"இரண்டு பிள்ளைகள்; பெண் மூத்தவள். நன்றாகப் படிக்கிறாள். மற்றவன் பையன்; நன்றாக விளையாடுகிறான்" என்றாள்.

"அவனைப் படிக்கச் சொன்னால் டி.வி. வாங்கிக் கொடுத்தால்தான் படிப்பேன்" என்று அடம் பிடிக்கிறான். டி.வி. வாங்கிக் கொடுத்தால் எங்கே படிக்கப் போகிறான். அதைத்தான் பார்த்துக்கொண்டு இருப்பான்" என்றாள்.

"வீட்டிலாவது இருப்பான். இப்பொழுது அடுத்த வீடு; எதிர் வீடு என்று அலைபாய்ந்து கொண்டிருக்கிறான். அதுவாவது நிற்கும்" என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

"வண்ணமா சுண்ணமா?"

"கருப்பு வெள்ளைதான். வண்ணத்துக்கு எங்கே போவது? அவர் வரும்போது ஒன்று வாங்கி வரச் சொல்லலாம் என்று இருக்கிறேன். கொஞ்சம் கடன் அடையட்டும் என்று எதிர்பார்க்கிறேன்" என்றாள்.

"பெண்?"

"அவள் ஒழுங்காகப் படிக்கிறாள்; அடுத்த வருஷம் 'பிளஸ்டூ' டியூசன் வைத்தால் நன்றாக இருக்கும். பார்த்தியாருக்குக் கொடுத்துக் கட்டுப்படியாகவில்லை. இந்த விஷயத்தில் வைத்தியரும் வாத்தியாரும் ஒன்றாகி விட்டார்கள்.

"நம்ம வீட்டில் வந்து சொன்னால் நானூறு; அவர்கள் வீட்டில் படித்தால் வெறும் நூறு" என்று அவள் பேசியது புதிய புறநானூறாகப் பட்டது.

"எல்லாம் நூறாகவே இருக்கிறதே!" என்று சிரித்தோம்.

"எதற்காக அவர்களுக்கு இவ்வளவு தொகை?"

"அவர்கள் படித்துத்தானே சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்தக் கஷ்டத்துக்காகத்தான்" என்றான். படித்தது சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று நினைத்தேன். இப்பொழுது அவர்கள் படித்தால்தான் சொல்லித்தர முடிகிறது என்பது தெரிந்தது. பாடதிட்டங்கள் அப்படி என்று தெரிந்து கொண்டேன்.

"டியூஷன் வைக்காமல் படிக்க முடியாது" என்றாள்.

"அவர் ஒவ்வொரு முறையும் தவறாமல் எழுதுகிறார். பிள்ளைகளைப் படிக்கவை; எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை. நான் அனுப்புகிறேன் என்று எழுதிக் கொண்டே இருக்கிறார்" என்றாள்.

அதற்குள் என் மனைவி என் பேச்சில் வந்து கலந்து கொண்டாள்.

"காதில் மூக்கில் என்ன ஒன்றுமே காணோமே" என்று அவள் பார்வை செல்லும் இடம் அதைப் பற்றி விசாரித்தாள். சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"அவற்றை அடகு வைத்து விட்டேன். வட்டி முழுகிப் போகும்போது எப்படியாவது மீட்பேன்; மறுபடியும்

அவற்றை அனுப்பிப் பள்ளிக் கூடம் படிக்க வைப்பேன். இப்பொழுது பாடம் படித்துக் கொண்டிருக்கிறது" என்று விளக்கம் தந்தாள். கவிதைபோல் கழிவிரக்கம் காட்டியது.

அவள் சொல்லியது சோகம் பாடும் சோஷலிசக் கவிஞர்களின் கவிதையை ஒத்திருந்தது.

அவள் எதுவரை படித்திருக்கிறாள் என்று கேட்க விரும்பினேன்.

"முடிந்த வரை படித்தேன்" என்றாள்.

"அது எதுவரை?"

"தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்துக்கொண்டே வந்தேன். எத்தனை முறை எழுதினாலும் அவர்கள் கருணை காட்டமுடியாது என்பதைத் தெரிந்து கொண்டேன். ஒன்று தேறினால் மற்றொன்று கால் வாங்கிக் கொள்கிறது. அந்தக் கொடுப்பனை நமக்கு இல்லை என்று இந்த விற்பனைக்கு வந்து சேர்ந்தேன்" என்றாள்.

10

"ராதா' என்று சொல்லிப்பாரு; அதை திரும்பிப் படித்துப்பாரு 'தாரா' என்று வரும்" என்றேன்.

சொல்விளையாட்டா வேண்டிக் கிடக்குது என்று கூறித் தன் விளையாட்டைத் தொடங்கினாள்.

வாழ்க்கைச் சுவையில் ஒரு சுழிப்பு நிலை ஏற்பட்டு விடுகிறது. சந்தோஷத்தை உண்டாக்க முடியாத அலுப்பு சில சமயம் மனை வாழ்க்கையில் ஏற்பட்டு விடுகிறது. மாற்றம்

இல்லாத வாழ்க்கை; கடமைகளைத் தவிர வேறு உடைமைகளைக் காண முடியாத கட்டம்.

அவள் எனக்கு மணற்கேணியாக இருந்தாள். இப்பொழுது வறட்சிநிலை ஏற்பட்டுவிட்டது. காரணம் பையன். அவனுக்குக் கலியாணம் பண்ணிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை; வீடு என்றால் ஏதாவது புது நிகழ்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கவேண்டும். காலா காலத்திலே அவனுக்கு ஒரு கலியாணம் பண்ணி வைக்க வேண்டும் என்ற ஆசை; அது நிறைவேறாத நிராசை; அதைவிட என்னிடம் எது பேசுவது என்று தெரியாத ஒரு சூழ்நிலை; எப்பொழுதும் 'கடுகடுப்பு'. அன்பை மறந்து பல ஆண்டும் ஆகிவிட்டது போன்ற ஒரு வெறுப்பு. ஆசை முகம் மறந்து விட்ட துவேஷ நிலை.

மனைவி என்றால் ஏதாவது இதமாகப் பேசலாம் என்று போவேன்; மிகவும் பதமாகத்தான் பேசவேண்டி இருந்தது; அவள் கதமாகவே இருந்தாள். இது நிதமான நிகழ்ச்சியாக இருக்கும். அதனால் வீட்டில் எனக்கு இருப்புக் கொள்வது இல்லை.

எனக்கு எப்பொழுதும் ஏதாவது பேச வேண்டும்; வெறும் வாய் எனக்கும் பிடிக்காது; அவலை மென்று கொண்டே இருக்கவேண்டும்; அதனைக் கிண்டல் என்று சொன்னாலும் சரி; கிசுகிசுப்பு என்று முசுப்பினாலும் சரி; அளப்பு என்று நிறுவினாலும் சரி; என் நா அசைந்து கொண்டே இருக்கும். ஒரு சிலர் விரைவில் தாயுமானவர் ஆகிவிடுகின்றனர்; உண்பது உடுத்துவது அல்லாமல் வேறு

ஒன்றும் அறியாத நிலை. அந்த நிலைக்கு நான் செல்ல விரும்பவில்லை.

பண்ணையார் இல்லம் மணி அடித்தால் பள்ளிப் பிள்ளைகள் துள்ளி வருவது போல் ஏதோ இரைச்சலைப் பெற்றிருக்கும். பிறை வயசு பெண்; அவளிடம் வாய்தா வாங்கிக் கொண்டு தான் பேச முடியும்; தொடர்ந்து பேசிக் கொண்டு இருக்க முடியாது. அவளை ஏதாவது தூண்டி விட வேண்டும். தொடு மணற் கேணிபோல அவள் புதுமைக் கருத்துக்கள் என்னைச் சிந்திக்க வைக்கும். அவளை அதிகம் பார்ப்பது இல்லை; ஸ்கூட்டர் அவளை அலைக்கழிக்கும்.

பண்ணையாரைப் பற்றிப் புதிய வதந்தி பரவி ஒலித்தது. இன்றைய திரைப்பட மையப் பாத்திரமாக இயங்குகிறார் என்று கேள்விப்பட்டேன். கடத்தலில் தடம் புரண்டு அடிக்கடி இவர் வெளிநாடு சுற்றி வருவதாகக் கேள்வி. போதைப் பொருளில் அவர் ஏதோ சம்பாதிப்பதாகக் கேள்வி. அதை உறுதிப்படுத்த முடியாது. ஆனால் அவர் அடிக்கடி சைனா சென்று வருவது மட்டும் உறுதி. கேட்டால் அங்கே ஒரு நூல் நிலையம் இருக்கிறதாம். இங்கே கிடைக்காத அதியற்புதமான வானசாத்திர நூல்களும் கணித நூல்களும் உள்ளனவாம்; அது கூட ஒரு காலத்தில் இங்கு வந்த சீன யாத்திரிகர் இவான் சுவாங்க் என்பவர் எடுத்துச் சென்றாராம். அவற்றை வைத்துக் கொண்டு ஜோசியத்தில் அவர்கள் மிகவும் முன்னேறி இருக்கிறார்களாம். இதுவரை அவர்கள் வரவழைத்து இவர் தேவையைக் கேட்டு அறிந்து ஒரு புதுக் கருவி படைத்துக் கொண்டிருக்கிறார்களாம். இது அவர் சொன்ன தகவல்.

அதைக் கொண்டு ஒருவரின் ஆயுளைக் கணித்து அவர் என்று எப்பொழுது மரணம் அடைவார் என்று சரியாகச் சொல்லமுடியும் என்று கூறுகிறார்.

"அது எப்படி முடியும்?" என்று கேட்டேன்.

ஒருவன் பொய் சொல்வதும் கதை அளப்பதும் கண்டு பிடிக்கும் கருவி இப்பொழுது இல்லையா! அது போன்றது" என்று கூறுகிறார்.

"கெட்டிக்காரனாக இருந்தால் அந்தக் கருவியையும் ஏமாற்ற முடியும். சொன்னதை விடாமல் சாதித்தால் அது மெய் ஆகிவிடுகிறது" என்றேன்.

"கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்று கண்டு பிடிக்கும் திரைக் கருவி வந்து இருக்கிறதே" என்றார்.

"எக்ஸ்ரே எடுப்பது போன்ற எளிய கருவி அது; இது எப்படி முடியும்?" என்று கேட்டேன்.

இது கம்ப்யூட்டர் யுகம்; அதற்கு வேண்டிய செய்திகளைத் தந்தால் அது உடனே முடிவு கூறிவிடுமாம். Calculator போன்ற கருவிஅது.

ஒரு மனிதரின் மருத்துவ அறிக்கை, பழக்க வழக்கங்கள், வயது; தரும சிந்தனை; பிக்கல் பிடுங்கல்; மனைவிகள்; துணைவிகள்; பாலியல் இவற்றைக் குறித்துக் கொடுத்தால் அது கூட்டிக் கழித்து வாழ் நாள் இது என்று காட்டிவிடும். விஞ்ஞான வளர்ச்சி இது" என்றார்.

"இதன் விலை?"

"இருபது லட்சம்"

"இவ்வளவு பணம் கொடுத்து வாங்கி என்ன பயன்?"

"என் கடைசி மூச்சு எப்பொழுது நிற்கும் என்று கண்டுபிடித்து விடலாம்."

"ஒரு கயிறு கட்டிச் சுருக்குப் போட்டால் உடனே நின்றுவிடுகிறது" என்று கூறினேன்.

"என் சாதகம்' அப்படி; என் மகனுக்கு மணமாகிக் குழந்தை பிறந்த இரண்டாம் ஆண்டு நான் இறுதிப் பயணம் மேற்கொள்ள வேண்டி இருக்கும். அது உண்மையா இல்லையா என்று தெரிந்து கொள்ள முடியும்" என்றார்.

"இதற்கு இருபது லட்சமா?"

"அது இங்கே வரட்டும்; ஓகோ என்று உயர்ந்து விடலாம்; சதாகூட்டம்தான். கிழம் கட்டைகள் எல்லாம் இங்கு வந்து கூடாரம் அடிக்கும். நீ டிக்கட்டு போட்டு பிளாக்கில் விற்கலாம். உனக்கும் காசு சேர்க்க வழி பிறக்கும்" என்று கூறினார்.

முக்கியமாக ஆயுள் இன்சூரன்சு கம்பெனியில் இருந்து வருவார்கள்; நல்ல கிராக்கி. நீ போகப் போகப் பார்; என்னைப் பிடிக்க முடியாது" என்று கூறுகிறார்.

எனக்கும் அவர் வியாதி ஒட்டிக் கொண்டது. என் மனைவியிடம் பேச்சு வார்த்தை இல்லை. இனிமேல் நான் இருந்து என்ன வாரிக்கொள்ளப் போகிறேன். தெரிந்து கொண்டால் சட்டுபுட்டுன்னு வேலுவுக்கு ஒரு கலியாணம் பண்ணிட்டு சங்கரா என்று சொல்லி எங்காவது விழுந்து கிடக்கலாம்.

"நல்ல கருவிதான்" என்றேன்.

"ஆயுள் நீட்டிப்புக்கு வழி உண்டா" என்றேன்.

"உண்டு. சுடச்சுட அவரவர் மூத்திரம் காலையில் எழுந்ததும் குடிக்கவேண்டும்" என்றார்.

"இது எங்கே சொல்லி இருக்கிறது?"

"சித்தர்கள் அப்படிக் கூறி இருக்கிறார்கள்."

"வைத்தியர்கள் என்ன சொல்கிறார்கள்?"

"அவர்கள் வாய் திறப்பதில்லை" என்றார்.

"ஏன்?"

"பெரிய மனிதர்கள் பலர் மனம் புண்படும் என்பதால்" என்றார்.

"யோகிகள் எப்படிச் சாகிறார்கள் தெரியுமா?" என்று கேட்டேன்.

"மண்டை வெடித்து" என்றார்.

"அதாவது உள்ளே இருக்கும் குண்டலினி. அதை எழுப்பி மேலே நெற்றி நடுவே கொண்டு செல்வார்கள். பின் அவர்கள் கபாலம் வெடித்து உயிர் வெளியேறுகிறது."

"அது எங்கே போகிறது?"

"இறைவனோடு இரண்டறக் கலக்கிறது" என்றார்.

"இராம கிருஷ்ண பரமஹம்சர் எப்படி மரணம் அடைந்தார் தெரியுமா?"

"நெஞ்சில் புண்."

"ரமண மகரிஷி"

"கான்சர்."

"விவேகானந்தர்?"

"அவரும் அப்படித்தான் என்று கூறுகிறார்கள்."

"சிந்திக்கவேண்டியது" என்றேன்.

"சித்தர்கள் சிலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து இருக்கிறார்கள்" என்றார்.

"கி.பி. இரண்டாயிரம் வருகிறது; இரண்டாயிரம் ஆண்டுகள் மனிதன் சாதித்தவை பல; தனி மனிதன் அல்ல; மனிதன் அவர்கள் மூவாயிரம் ஆண்டு வாழ்ந்து சாதித்தது என்ன?"

"மரணத்தை வென்று இருக்கிறார்கள்."

"வெல்லவில்லை; தள்ளிப் போட்டு வந்திருக் கிறார்கள்."

"அதுவும் ஒரு சாதனை தானே."

"அவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது சாதனை அல்ல; அவர் எவற்றைச் செய்தார்; செய்தவை யாவை? அதுதான் கணக்கு வரும்" என்றேன். "உங்களுக்கு இந்தக் குறள் தெரியுமா?"

"தோன்றில் புகழொடு தோன்றுக; அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

"நாம் என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தியுங்கள், செயல்படுங்கள்; எத்தனை நாள் வாழப் போகிறோம் என்று

எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தேன்.

அவர் கேட்பதாக இல்லை.

11

வெளியூர் மாற்றப்பட்ட என் மகன் அடிக்கடி பணம் அனுப்பி வருகிறான். அதனால் வீட்டில் உபரிப் பணம் அபரிமிதமாகச் சேர்கிறது. காசும் பணமும் சேர்கின்றன. ஆசை மகன் அவன் ஒருவன்தான்; அதனால் அவனுக்கு ஒரு கால் கட்டுப் போட வேண்டும் என்று மருத்துவர்கள் நாங்கள் முடிவு செய்கிறோம்; அவன் உள்கட்டு என்ன என்று எங்களுக்கு எதுவும் பட்டென்று சொல்வது இல்லை. எந்தப் பெண் சொன்னாலும் அது ஏற்ற பெண் அல்ல என்று மறுத்துக்கொண்டே வருகிறான்.

எனக்கு ஒரு புதிய ஆசை; பிறை ஏன் என் வீட்டு மகாலட்சுமியாக வரக்கூடாது; மருமகள் என்று சொல்லத் தக்க அரிய குணங்கள் அவளிடம் வேண்டிய அளவு இருக்கின்றன என்பதில் தெளிவான எண்ண ஓட்டம் என்னுள் ஓடிக் கொண்டிருக்கிறது.

என்னுடைய வீட்டுக்காரிக்கு அலையோசை வேறு எங்கோ ஒலித்துக் கொண்டிருக்கிறது! அவள் படித்த பெண்; குடித்தனத்துக்கு ஆகாள்; தடித்தனம் இருக்கும் என்று மடத்தனமாக எண்ணுகிறாள். நிறம் இல்லை; அதனால் நம் தரத்துக்கு ஆகாள்; நிறம் மா; அது போதுமா என்று கேட்பாள்.

நிறத்தில் அவளுக்கு ஒரு வெறி இருந்தது. அது இந்த நாட்டின் வெறி; அதில் அவள் விதி விலக்கு அல்ல.

உன்னுடைய மகன் என்ன மன்மதனா? என்று கேட்டேன்.

"கருப்பு நிறம் தான்; ஆனால் விருப்பு அழகு அவனிடம் உள்ளது; உயரம்; அவனுக்குக் கியூவில் நிற்க அவன் வியூவில் பல பேர் இருக்கிறார்கள். பிறை படித்தவள்; அவளோடு பழகியவர் பலர் இருப்பார்கள்; அது மட்டும் அல்ல. முத்து என்பவன் யாரோ அவளுக்குத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறான்" என்றாள்.

"தொலைபேசி வசதி இல்லை; அதனால் எழுதிக் கொண்டிருப்பார்கள்" என்றேன்.

"அலை பாயும் வயசு. அடுக்கடுக்காக எழுதுகிறார்கள்" என்றாள்.

"அவர்கள் நட்பு மலையினும் மாணப் பெரிது ஆகி விட வாய்ப்பு உள்ளது" என்றேன்.

"எழுதுவது பெரிது அல்ல. பிறகு அவன் அச்சிட்டு அவளை நச்சரிப்பான்" என்றாள்.

"இது கதை; அதைக் கேட்க நமக்கு என்ன அருகதை இருக்கிறது?" என்றேன்.

"அவள் வாழ்க்கையை மாசாக்குவானே" என்றாள்.

வேலுவுக்குப் பெண் கொடுப்பதில் சிலர் தயங்கி வருவதைச் சுட்டிக் காட்டினேன். ஊர் ஊராக மாற்றிக்

கொண்டு வரும் அவன் பணி நிலை அவனுக்கு இடையூறாக இருப்பதைச் சுட்டிக் காட்டினேன்.

"இன்று டெல்லி பம்பாய் என்று போகத் தயாராக இருக்கிறார்கள். அவன் இருப்பது தர்மபுரிதானே?"

"தருமனுக்கு உரிய புரிதான்; எந்தத் திரௌபதியும் துணியமாட்டேன் என்கிறார்களே."

"காரணம்?" என்று கேட்டாள்.

"இது மெட்ரோ சேனல்; ஸ்டார் டி.வி. அவை அங்குப் பரவவில்லையே; மாமியார் இருந்தாலும் அவர்கள் கவலைப்படுவது இல்லை; மெட்ரோ இல்லாத வீட்டில் அடி எடுத்து வைக்க அவர்கள் வலது கால் இடம் அளிக்க வில்லையே" என்று சுட்டிக்காட்டினேன்.

இப்படி அவனுக்கு உரிய தர்ம சங்கடங்களை எடுத்துப் பேசி அதைப் பொருட்படுத்தாதவள் பிறை தான் என்று எடுத்துச் சொன்னேன்.

பிறை என்றுமே பிறையாக இருப்பது இல்லை; அது முழுமதியாக வளரும் என்றேன். அவள் படித்தவள்; பணம் படைப்பாள் என்று சுட்டிக் காட்டினேன்.

எங்கள் பேச்சுக்கு இடைவெளி ஏற்படுத்த என் பழைய நண்பன் இளையராஜா வந்து சேர்ந்தான்.

"ஹல்லோ ராஜா" என்று வரவேற்றேன்.

"பையனுக்குக் கலியாணம்" என்று சொல்லிப் பையில் நிறைய வைத்திருந்த அழைப்பிதழ்களில் ஒன்றை எடுத்து என் கையில் வைத்தான்.

"எப்படிக் கலியாணம் ஏற்பாடு ஆயிற்று? முன்பின் உறவா?"

"காதல் கலியாணம்" என்றான்.

அதைத் தெரிந்துகொள்ள ஆவேசம் ஏற்பட்டது.

"எப்படி?" என்றேன்.

"என் பையன் தவறாமல் எந்தப் படம் வந்தாலும் முதல் காட்சிக்குப் போவான்; முட்டி முரண்டி எப்படியாவது போய்ப்பார்த்து விட்டு வருவான்; அன்று டிக்கட்டு கிடைக்கவில்லை. தன் ஆர்வமும் முனைப்பும் களத்தில் போட்டுவிட்டு வெறுங்கையானாக வீடு திரும்புகிறான்; அப்பொழுது இந்தப் பெண் தான் வாங்கி வைத்த டிக்கட்டை அவனுக்குத் தந்து 'போய் வா வீரனே' என்று அனுப்பி வைத்தாள். காலத்தால் செய்த உதவி என்பதால் அவளை மறக்கவில்லை. அவளையே அவன் தேர்ந்து எடுத்து விட்டான்" என்று சுருக்கமாகக் கூறினான்.

"அப்படித்தான் கூடும் கலியாணம் எல்லாம்; நாம் எதிர்பார்ப்பது போல் நடப்பதில்லை" என்று வேற்றுப் பொருள் வைப்பு வைத்துப் பேசினேன்.

"கலியாணத்துக்குக் கட்டாயம் வரவேண்டும்" என்றார்.

அந்த அனுபவம் எங்களைத் தீவிரப்படுத்தியது; அப்படியே விட்டு வைத்தால் இவன் யாராவது ஒருத்திக்கு டிக்கட்டு வாங்கிக்கொடுத்து உதவி செய்வான் என்று என் மகனைப்பற்றி அறிவிப்புத் தந்தாள் அவனைப் பெற்ற தாய்.

அவர் சென்றதும் எதிர்பாராதபடி என் முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது.

பிரித்துப் பார்க்கிறேன்; அதில் பத்துக் கட்டளைகள் இருக்கின்றன.

"இந்தக் கடிதம் வந்த பத்தாம் நாள் உமக்கு அதிருஷ்ட தேவதை வந்து சேர்வாள் தபால் கடிதம் போல; ஆனால் ஒன்று நீ இதைப் பத்து நகல்கள் உன் கைப்பட எடுத்துப் பத்துப் பேருக்கு அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாவிட்டால் அஷ்டமத்துச் சரியன் உன்னை வந்து அடைக்கலம் புகும்."

என்ன செய்வது? இது ஒரு பைத்தியக்காரத்தனம் என்றாலும் 'ரிஸ்க்' எடுத்துக் கொள்ள என் மனைவி விரும்பவில்லை. பத்துக் கடிதங்கள் தானே! எழுதிவிடலாம். அதிருஷ்டம் வராவிட்டாலும் ஆபத்துக்கள் வராமல் தடுக்கலாம் என்று அறிவுரை கூறுகிறாள்.

அந்தப் பணியை அவளுக்கே விட்டு விட்டு அவளிடம் இருந்து தப்பித்து வெறியேறினேன்.

11

பண்ணையார் இல்லம் எனக்குப் பொழுது போக்கு இடம்; அவரிடம் ஏதாவது பேசுவேன்; இல்லாவிட்டாலும் சும்மா இருப்பேன். ஜோசியம் பார்க்கிறவர்கள் வருவதும் அவர்களுக்கு இவர் ஆறுதல் கூறுவதும் மாறுதலாக இருந்தன.

அவர் மேசைமேல் வார இதழ் ஒரு ஓரத்தில் இருந்தது; அட்டைப் படத்தில் 'தாடிக்காரரின் காதல்' என்று

போட்டிருந்தது. அது வேறு யாரும் இல்லை, என் நண்பன் எனக்கு அளித்த அழைப்பிதழ், இந்தத் திருமணம்தான்.

அதில் கவர் ஸ்டோரி உள்ளே தரப்பட்டிருந்தது. அவன் சொன்னது.

"நான் வழக்கமாக அந்தத் தியேட்டருக்குச் செல்வேன்; புதுப்படம் முதல் காட்சிக்கு முந்திக் கொள்வேன்; பெண்கள் வரிசையில் அவள் நின்று கொண்டு கைநீட்டுவாள்; வழக்கமாகப் பார்த்ததால் எங்களுக்குள் எங்களை அறியாமல் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. அது ஒரு புதிய வார்ப்பாக அமைந்து விட்டது. அவள் தான் வைத்திருந்த டிக்கட்டை எனக்குத் தந்தாள். எனக்கு அது மகத்தான தியாகம் என்று கொண்டேன். பணம்கொடுத்து விடலாம்; தான் பிடித்துக் கொள்ளும் குடையைத் தந்து விட்லாம். தனக்கு "என்று வாங்கி வைத்த டிக்கட்டைத் தருகிறாள் என்றால் அவள் தயாளகுணம் என்னைக் கவர்ந்து விட்டது. அவளுக்கும் என்னைப் பிடித்துவிட்டது" என்று கூறி இருந்தாள்.

"அவர் என்னைப் பார்த்தது முதல் என் மனம் என்னிடம் இல்லை; அவர் முகவரி தேடிக் கண்டு பிடித்துச் சொத்து சுகம் இவற்றை எல்லாம் தெளிவுபடுத்திக் கொண்டு அந்தக் குடிக்கு அவர் ஒரே மகன் ஒரே வாரிசு என்பதை உறுதி செய்து கொண்டு என் மனச் சம்மதத்தைத் தெரிவித்தேன்.

அவரை ஞானியாக ஆக்கிவிடாமல் போணியாக ஆக்குவேன் என்பதில் எனக்கு உறுதி இருக்கிறது" என்று அவள் அந்த இதழில் சொல்லி இருந்தாள்.

இது படிப்பதற்குச் சுவையாக இருந்தது. அதற்குள் பழைய பல்லவி அங்குப் பல்லிளித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவர்கள் பிணக்கு நீடித்தது.

"என்ன புதுப்பிரச்சனை?" என்று விசாரித்தோம்.

"அந்த ஏழு நாட்கள்" என்றாள்.

"அது பாக்கியராஜாவின் படமாயிற்றே" என்றேன்.

"அதுதான் எங்கள்புதுப் பிரச்சனை. அந்த ஏழு நாட்கள் நீ எப்படி எப்படி இருந்தாயோ யார் கண்டது; இராவணனை நம்ப முடியும்; உன்னை நம்ப முடியாது என்கிறார் அவர்."

"நீ என்ன சொன்னாய்?"

"தீக்குளிப்பேன் என்றேன்."

"எதற்கு?"

"உண்மையை நிலைநிறுத்த."

உடனே அந்தச் செய்தி எங்கும் பரவியது.

'மீண்டும் ஒரு சீதை' என்று பத்திரிகைகள் எழுத ஆரம்பித்து விட்டன.

பி.பி.சி ஒளிப்பதிவாளர்கள் அவள் படத்தை எடுத்துப் போட்டு 'பாரத தேசத்தில் பதிவிரதை' என்று காட்டி விளம்பரப்படுத்தி விட்டார்கள்.

விளம்பரம் முற்றியது; அவள் தன் முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை என்று அடம் பிடிக்தாள்.

அவன் வேறு வழி இல்லாமல் அவளை வழிக்குக் கொண்டுவரத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கே பிரிந்தவர்கள் கூடினார்கள். அவர்கள் சும்மா இருக்க முடியுமா! தொடர்ந்து சண்டை போட்டுக் கொண்டே இருந்தார்கள் என்று கேள்வி. இந்தச் செய்தி அங்குப் பேசப்பட்டது.

12

பிறை எனக்கு நல்ல செய்தி சொல்கிறாள் வேலை கிடைத்து விட்டது என்று.

"எதுவும் உடனே கிடைக்காது. இப்படித்தான் இதுவும்" என்று என் வாழ்த்தைக் கூறினேன்.

தரகர்கள் அவர் வீட்டு காஃபிக்கு வந்து கொண்டிருந்தனர். மீனாட்சிக்கு எப்பொழுது திருமணம் என்று பாண்டி நாட்டார் கேட்டுக்கொண்டிருந்தனர் 'படித்தவள்; சம்பாதிக்கிறாள்' என்று அவளைப் பற்றிப் பேச்சுப் பரவியது.

அவள் அடுத்த கட்டம் மணம்; என் பையன் அவளோடு பழகியவன்; அதனால் அவள் மீது நேசம் வைத்திருந்தான்; பாசம் வைக்கவேண்டும் என்று எதிர்பார்த்தான்; அம்மாவுக்கு எழுதி இருந்தான்.

"எதிர் வீட்டுக் கதிர் ஒளியை எனக்குப் பேசி முடி' என்று எழுதி இருந்தான். ராதாவின் போக்கில் ஒரு தெளிவு ஏற்பட்டது; பாதை புலப்பட்டது.

"படிக்கிறாள் சம்பாதிக்கிறாள்" என்று என்னிடம் படித்துப் படித்துச் சொல்கிறாள்.

என் மனம் ஊசல் ஆடியது. அவள் முத்துவுக்குத்தான் என்று உள்மனம் அறிவுறுத்தியது. அவன் செல்ல மகன்; அண்மையில் பழகியவன்; இளகியவன்; தோற்றமும் ஏற்றமும் உடையவன்; என் மகன் நல்லவன்; சராசரி; ஏதோ தேர் ஓடும்; கார் ஓடாது.

முத்துவின் மன நிலையை அறிய விரும்பினேன். அதற்குள் அவர்களுக்கு ஒருபெரிய சரிவு ஏற்பட்டுவிட்டது. இருபது லட்சம் நாசமாகி விட்டது. வாங்கி வந்த இயந்திரம் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு விட்டது.

"சாவைப்பற்றி முன் கூட்டி அறிந்தவர்கள் வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் சலனம் அற்றுச் செயல்பட்டனர். எதற்காக உழைப்பது என்று சோர்ந்து விட்டனர். இது சமூக எதிரி; வாழ்க்கைக்கு முரண் என்பதால் தடை செய்யப்பட்டு விட்டது.

இயந்திரம் துப்புத் துலக்க வந்தது. அது துப்புப் பிடித்துவிட்டது அவர் மனம் உடைந்துவிட்டார் "ஆயுள் நீட்டிப்புக்குத் தருண சிந்தனை செயல் இருந்தால் போதும்' என்றேன்.

"யார் சொன்னது" என்றார்.

"நம் அற நூல்கள்" என்றேன்.

"இது தெரிந்திருந்தால் இந்தக் கருவிக்கு நான் கருவியாகி இருக்கமாட்டேன்" என்று வருந்திக் கூறினார்.

அவருக்கு ஏற்பட்ட மனமாற்றத்தை அவர் அறையில் புதிதாக அவர் மாட்டிய பெரியார் படம் காட்டியது.

"நெறி முறை பிழைத்த யானோ அரசன் யானோ கள்வன்" என்று சிலப்பதிகாரம் படிக்க ஆரம்பித்தார்.

"பையன் மணம்" என்றேன்.

"என் செல்வம் என்னை விட்டு நீங்கி விட்டது. என் செல்வன் அவனும் என்னை விட்டுப் போய் விட்டால் என்ன செய்வது?" என்றார்.

"ஏன் இப்படி நினைக்கிறீர்கள்?"

"படித்த பெண் முதலில் இடித்துத் தள்ளுவது குடியிருந்த கோயில் தானே? பிறகு யார் எங்களுக்கு ஆதரவு."

"ஜோசியம் என்ன சொல்கிறது?" என்று கேட்டேன்.

"அதைத் தூக்கி எறிந்து விட்டேன். எனக்கு அதில் நம்பிக்கை இல்லை" என்றார்.

"பேரன் பிறந்தால் உமக்கு மரணம்" என்று சுட்டிக் காட்டினேன்.

"அதை வரவேற்கிறேன்" என்றார்.

"என் மகனுக்குக் கலியாணம் ஆகி அவனுக்கு அழகிய மகன் அவதரிக்கிறான் என்றால் அவனைப் பார்த்து விட்டு அகமகிழ்வோடு இந்த அகன்ற மாநிலத்தை விட்டுச் செல்லத் தயார்" என்றார்.

காலம் கடந்து விட்டது. இந்தச் சிந்தனை ஆரம்பத்தில் இருந்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றியது. அங்கு

ஜோசியம் கேட்க ஹாஸ்யர்கள் யாரும் வருவது இல்லை; தேர்வில் தோற்று விட்ட கட்சியின் வாக்குச் சாவடிப் பந்தல் போல் அவர் இல்லம் வெறிச்சோடியது.

13

பிறை முகிலில் இருந்து முகிழ்த்து வெளிப்பட்டாள். என் வீடு நோக்கி வந்தாள்; அவள் நடையில் வாழ்க்கை விடை தெரிந்தது; தெம்பும் தெம்பாங்கும் தமிழில் இசைத்தன. ஞானச் செருக்குக் கொண்டவள் போல் அவள் காணப் பட்டாள். முன்பெல்லாம் வேங்கடம் செல்லும் பக்தர்கள் முதல் மலை ஏறுவார்கள். அதற்குக் காளிகட்டம் என்று பெயர். முண்டியடித்து முட்டிபோட்டு முகடு ஏறி அங்கே அடைந்ததும் ஒரு பெருமூச்சு விடுவார்கள். காளி கட்டம் கடந்து விட்டோம். இன்னும் ஆறு மலைகள் இருக்கின்றன. அவை பெரிது அல்ல என்று பேசுவார்கள்.

பிறை காளிகட்டத்தை அடைந்து விட்டாள். வேலை கிடைத்து விட்டது.

'அங்கிள்' எனக்கு வேலை கிடைத்து விட்டது என்று நீட்டு ஓலையைக் கொண்டு வந்து காட்டினாள்.

நீட்டோலை வாசித்தேன்; நெடுமரமாக நின்று விட்டேன்.

"அதிர்ச்சியாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"எப்படி உன்னை வாழ்த்துவது என்று தெரியாமல் திகைக்கிறேன். தமிழில் சொல்தேடுகிறேன்" என்றேன்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு"

என்று பாடுங்கள் என்றார்.

எனக்குப் புரியவில்லை. "நாம் பிறந்த மண்ணை வாழ்த்துங்கள் என்னை வாழ்விக்க முன்வந்திருப்பதால்" என்றாள்.

"இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

"சாக்லேட் மென்று தின்ன வேண்டும்" என்றாள்.

"கடித்துத் தின்றால் தான் சுவை" என்று சொல்லி வாங்கிக் கொண்டேன்.

"நான் அல்லவா வாங்கித் தர்வேண்டும்" என்றேன்.

"நான் ஈட்டத் தொடங்கி விட்டேன். கூட்டல் தேவை இல்லை; வகுக்கத் தொடங்கி விட்டேன்" என்றாள்.

இந்த எதிர் வீட்டுப் பைங்கொடி எனக்கு எந்த வகையிலும் கடமைப் பட்டவள் அல்ல.

அவள் வெற்றி தோல்விகளை என்னோடு பங்கிட்டுக் கொள்கிறாள்.

அவளை இதே தெருவில் பல வருஷங்களாகப் பார்த்து வருகிறேன். அவள் தந்தையை விபத்தினால் வீட்டில் கொண்டு வந்து போட்டார்கள். வலிய அந்தத் துக்கம் விசாரிக்கச் சென்று இருக்கிறேன்; நாற்பது வயதில் இந்த நல்லுலகத்தை விட்டு நகர்ந்து விட்டார் என்றால் இதைவிட வேறு அதிர்ச்சி என்ன இருக்கும்? எனக்கு இளகிய மனம்

என்று பழகிய சிலர் பகர்வது உண்டு. அது உண்மையோ பொய்யோ தெரியாது. எடுக்கப் பிடிக்க வந்தவர்களுக்கு விபத்தின் வரலாறு சொல்லிக் கொண்டிருக்க நான் முன்னிருந்து தலைமை வகித்தேன். சாவு வீட்டில் வந்தவர்களுக்கு எப்படி இறந்தார் என்று சொல்லிக் கொண்டே இருக்கும் பொறுப்பு யாரையாவது சாரும்; அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதால் அவர்கள் குடும்பத்தோடு நெருக்கம் ஏற்பட்டது. கடைசி உறவினர் வந்து அழுது முடிக்கும் வரை அந்த உடல் அசைவது இல்லை என்று அடம் பிடித்தது. வந்தவர்களுக்கெல்லாம் நடந்த நிகழ்ச்சியைச் சொல்லி முடித்தேன். அதனால் அந்தப் பெண்ணின் தாய் என்னைச் சொந்த சகோதரனாக மதிக்கத் தொடங்கினாள்.

அதில் இருந்து ஏதாவது நல்லது நடப்பது நயப்பது ஏதாவது இருந்தால் விசாரிப்பது உண்டு. அவளைப் பெற்றெடுத்தவளுக்கு உற்ற துயரினை மறக்க, கற்ற இந்த மகள் தான் இருந்தாள். தான் படித்தால்தான் முன்னுக்கு வர முடியும் என்பதை நன்கு அறிந்தவளாகையால் கடுமை அவளிடம் அடிமைப்பட்டது.

என்னை எந்தச் சொல்லால் அழைப்பது? அவள் தேர்ந்து எடுத்த சொல் இந்த 'அங்கிள்' என்பது. அதில் ஒரு மரியாதை கலந்திருந்தது. என்னை மதிக்கும் உணர்வு பொருந்தி இருந்தது.

அவள் தனியார் நிறுவனத்தில் தக்க இடம் ஒன்று பிடித்ததை அறிந்தேன்.

"நீ ஏன் அரசு ஆட்சியில் மாட்சி பெறக் கூடாது?" என்று கேட்டேன்.

"இந்தச் சாதி என்ற நீதி எங்களை நுழைய முடியாதபடி சதி செய்கிறது. பிற்பட்டவள் என்று சொல்லிக் கொண்டு முற்பட்டுச் செல்ல விரும்பவில்லை" என்றாள்.

"அறிவில் போட்டியிட விரும்புகிறேன்; சலுகைச் சரிவில் தாழ்ந்து எழ விரும்பவில்லை" என்றாள்.

"சாதியைக் காட்டாமல் உன் திறமையை மட்டும் காட்டி அரசு பணியில் இடம் பெறலாமே" என்றேன்.

"என் தாய்க்கு நான் ஆதரவு. அவர்கள் இந்த வீட்டை விட்டு வெளியேற மாட்டார்கள். நான் தலயாத்திரை செல்ல அவர்கள் உடன்வரமாட்டார்கள்" என்று விளக்கினாள்.

"அதற்குக் காரணம்?..."

"என் தாய் இந்த வகையில் ஒரு பேய்; அப்பாவின் ஆவி இங்கேயே சுற்றிக் கொண்டிருப்பதாக நம்புகிறாள்; அவளுடன் எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பார்' என்றாள்.

"அவர் மனநிலை சரி இல்லையா? நீ அப்பாவின் ஆவியோடு பேசி இருக்கிறாயா?" என்று கேட்டேன்.

"பாவிகளோடு ஆவிகள் வந்து பேசமாட்டார்" என்று சோகங் கலந்த குரலில் தன் சோர்வினைத் தெரியப் படுத்தினாள்.

"நாளைக்கு ஒருவனைக் கட்டிக் கொண்டால் அந்தக் காளையின் பின் போக வேண்டியது தானே"

"கானகம் செல்ல நான் சனகன் மகள் அல்ல; வானகம் சென்ற என் தந்தையின் நினைவில் வாழும் என் தாயை விட்டு நான் பிரியமுடியாது" என்று கூறினாள்.

"வேலுச்சாமி எப்படி இருக்கிறார்?" என்று கேட்டாள்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று அதை எடுத்துக் கொண்டேன்.

அவள் ஏன் என்றும் இல்லாமல் இன்று அவன் முகவரியைக் கேட்கிறாள்?

அடுத்த பயணத்துக்கு அவள் அடி வைக்கிறாளா? புரியவில்லை.

"ஏன் உங்களுக்கு மகள் இல்லையா?" என்று கேட்டாள்.

ஒரு மகளை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளவேண்டும்" என்றேன்.

"அது யார்?"

"வரப்போகும் மருமகள்."

"அவள் உண்மையில் அதிருஷ்டசாலியாகத்தான் இருக்கவேண்டும்" என்றாள்.

"ஏன்? எப்படி?"

"உங்களை மாமனாராக அடைவதற்கு" என்றாள்.

14

"எத்தனையோ நற்சான்றுகள் பெற்றிருக்கிறேன்; விளையாடி அல்ல; எதுவும் செய்யாமல்; அதற்குப் பெயர் நல்லவர் என்பது; இப்பொழுது என் வருங்கால மருமகளிடம் அதே பட்டத்தைப் பெறுகிறேன். ஒருவரைத் தெரிந்து கொள்ள ஓரிரு சொற்கள் போதும். எனக்குத் திமிர் ஏறியதால் நிமிர்ந்து நடந்தேன்.

களத்தில் பண்ணையார் மகனைச் சந்திப்பது என்று முடிவுக்கு வந்தேன். அவனுக்கு மூலை முடுக்கில் கொஞ்சம் நஞ்சம் ஆசை ஏதாவது வைத்திருந்தால் அ'தை அழிப்பது என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தேன்.

பண்ணையார் சுதந்திரமான ஒரு தொழிலை நடத்தித் தன் மகனுக்கு ஒரு வாழ்வு அமைக்கத் திட்டமிட்டார், அரசுவேலை; அதை அடைய அரசியல் செல்வாக்குத் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள்; அதன் விலை இப்பொழுது கூடிக்கொண்டே போவதாகக் கேள்வி. வாங்க முடியாது என்று கைவிட்டுவிட்டார்.

சுயவேலைத் திட்டம் தவிர வேறு எந்தப் போக்கும் இல்லை; அதற்கு வெறும் பெருத்தனம் மட்டும் போதாது; மூலதனமும் தேவைப்பட்டது. அதனை மூளையில்லாமல் முடித்துவிட்டார். பிறருக்கு ஆருடம் சொல்லிக் கொண்டிருந்த அவர் தனக்குக் கணிக்கும் ஆற்றல் இழந்து விட்டார்.

எதிர்பாராமல் முத்துவின் தாய் சறுக்கிவிழுந்து கால் எலும்பை நொறுக்கிக்கொண்டாள். சாய்ந்து நடந்து தான்

ஓய்ந்து விட்டதைக் காட்டிக் கொண்டாள். சுவையாக இருந்த அவர்கள் வாழ்வு சுமையாக மாறியது. தன்னைத் தூக்கிவிடத் தன் மகனைத்தான் அவன் நம்ப வேண்டியதாயிற்று.

முத்து நின்று என்னிடம் அதிகம் பேசமாட்டான். வெட்டிப் பேச்சுப் பேசும் திண்ணை நான் என்பது அவன் முடிவு. என்னேடு சேர்ந்துதான் தன் தந்தை உள்ளதை ஓட்டப்பந்தயத்தில் ஒழித்து விட்டார் என்று அவன் தப்புக் கணக்குப் போட்டான். நான் சொல்லித்தான் அவர் அந்தக் கணிப்பொறி வாங்கினார் என்று கருதுகிறான். அவனுக்கு என்னைப் பற்றி விளக்க வாய்ப்பைத் தேடினேன்.

"பொறி இயல் படித்தும் நெறிப்படி ஏன் வேலை கிடைக்கவில்லை" என்று ஆரம்பித்தேன்.

"தொழிற்படிப்புக்கு வாய்ப்பு இருந்தது. அதுவும் அருகிவிட்டது" என்றான்.

"நீ வேறு தொழில்களுக்கு விண்ணப்பம் போட்டு வீணாக அலைவது ஏன்?" என்று கேட்டேன்.

"படிப்புக்கு ஏற்ற வேலை. என்று யாரும் காத்திருப்பது இல்லை. எது கிடைக்கிறதோ அதில்தாவிக்கொள்ள முயல்கிறோம்" என்றான்.

அவனைக் கொக்கிப்போட்டு வளைத்துப் போட்டேன்.

"உனக்குப் பிறை தெரியுமா?" என்றேன்.

"வான்பிறை எப்பொழுதாவது கண்ணுக்குத் தெரியும்" என்றான்.

பிறைமதி என்று விளக்கிவிட்டு அவளுக்கு வேலை கிடைத்துவிட்டது என்றேன்.

"தெரியும், எழுதி இருந்தாள்" என்றான்.

சுற்றி வளைக்க விரும்பவில்லை. சுழி முனைக்குவந்து நின்றேன்.

"அவளை என் மகன் வேலுச்சாமிக்கு மணம் முடிக்கலாம் என்று இருக்கிறேன்" என்றேன்.

"அவள் ஒப்புக் கொண்டாளா?" என்று கேட்டான்.

"முதன் முதலில் வேலுவைப் பற்றி இப்பொழுதுதான் விசாரித்தாள். என்னை மாமனாராக அடைய எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று சொன்னாள். நீ என்ன நினைக்கிறாய்?"

"வேலு அவளுக்குத் தெரியுமா?"

"எதிர் வீடுதானே; பழகியவர்கள்" என்றேன்.

"நல்ல பெண்; குடும்பத்துக்கு ஏற்றவள். தாய்ப்பாசம் நிறைந்தவள்; அம்மாவை விட்டு வெளியே போக மாட்டாள்" என்றான்.

"அதனால் என்ன? மாமியாரும் அங்கு இருப்பதால் எங்களுக்கு எந்தத் தடையும் இல்லை" என்றேன்.

"என் வாழ்த்துக்கள்" என்றான்.

"மண அழைப்பு அனுப்புவேன்; கட்டாயம் வந்துவிடு" என்றேன்.

"சொல்ல முடியாது; நான் இருக்க மாட்டேன்" என்றான்.

நான் பயந்து விட்டேன். இந்தப் பாவி ஏதாவது செய்து கொள்ளப் போகிறான் என்று பயந்து விட்டேன்.

"சவுதிக்குப் போவது என்று முடிவு செய்து விட்டேன்; இங்கே வேலை வாய்ப்பு இல்லை. குடும்பம் நலிந்து விட்டது; நான்தான் சம்பாதிக்க வேண்டும். என் பெற்றோர்கள் முதுமை அடைந்து விட்டார்கள்; அவர்களைக் காப்பாற்றுவது என் கடமை என்று நினைக்கிறேன். எனக்கு இங்கே எந்தப் பாசமும் இல்லை; யாருக்காக இங்கு இருக்கவேண்டும். இளமையில் பாடுபட்டால்தான் வளமாக வாழ இயலும்" என்று கூறினான்.

அவன் மனம் பிறழ்ந்து பேசுகிறானா? நிலை அறிந்து நெளிகிறானா? தெரியவில்லை.

"வாழ்த்தாவது அனுப்பிவை" என்று சொல்லி அவனிடமிருந்து விடை பெற்றேன்.

"பையனிடம் என்ன பேசிக் கொண்டிருந்தீர்" என்று பண்ணையார் என்னைக் கேட்டார்.

"ஏன் உங்களிடம் சொல்லவில்லையா! அரபு நாட்டுக்குப் போய் வேலை செய்யப் போகிறான் என்று நுவல்கிறான்".

"எனக்கு இதுவரை அவன் சொல்லவே இல்லையே"

"நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள் என்று அவன் சொல்லவில்லை"

"முதிர்ச்சி உடைய நான் அவனுக்கு எப்படி முட்டுக் கட்டையாக முடியும். என் தீவினைக்கு நான் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். பெரியோர்கள் வைத்த சொத்தைப் பூஜியம் ஆக்கிவிட்டேன்; அது குடும்பச் சொத்து; அதை எனக்குத் தொட உரிமை இல்லை. பெருமைக்குப் பாடுபட்டு அவனைச் சிறுமையில் நிறுத்தி வைத்து விட்டேன். நான் எந்த முகம்கொண்டு அவனைத் தடுத்து நிறுத்த முடியும்.

"அவனுக்கு ஒரு பெண்ணைத் தேடிக் காலில் கட்டுப் போட்டிருந்தால் அவன் அதை வெட்டிக் கொண்டு போய் இருக்க முடியாது. எந்தப் பெண்ணும் என் கண்ணில் தட்டுப்படவில்லை" என்று அவர் ஒரு முதிய கோவலனாகக் காட்சி அளித்தார்.

குன்றுபோன்ற சொத்தைக் குலைத்த நிலையில் அவர் எனக்கு ஒரு கோவலனாகக் காட்சி அளித்தார். அவனும் இப்படித்தான் கண்ணகிக்குத் தான் செய்த அநியாயத்தை அடுக்கிச் சொல்லிக் கடந்ததற்கு வருந்தினான்.

"சென்றது இனி மீளாது" என்று பாரதியின் பாஷையில் அவருக்கு ஆறுதல் கூறினேன்.

"படித்த பெண் என் எதிர் வீடு; அவளை முடித்துவிடலாம்" என்று கூறினேன்.

"மிக்க மகிழ்ச்சி. அவள் வேலைக்குப் போகிறாளா? வேண்டியதைச் சம்பாதிக்கிறாளா?" என்று கேட்டார்.

"நிரந்தரமான வேலை; சுதந்திரமான போக்கு; அவளை எங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது" என்றேன்.

அவர் முகத்தில் ஏமாற்றம் தென்பட்டது.

"யார்ருக்கு? உங்கள் பையனுக்கு முடித்து விட்டீரா?" என்று கேட்டார்.

"அநேகமாக முடிந்தது போல்தான் என்று அறிவித்தேன்.

15

வீட்டுக்குச் சென்றேன்; அவள் பாட்டுக்கு ஏதாவது பேசிக் கொண்டிருப்பாள்; அதைக் கேட்டுக் கொண்டு இருப்பேன்.

"எதிர் வீட்டுக்குப் போய் வந்தேன்" என்றாள்.

"பிறை அப்பாவுக்கு நினைவு நாளா?" என்றேன்.

"துணிந்து வேலுவுக்குப் பிறையைத் தரமுடியுமா" என்று வினவினேன்.

"தடை இல்லை" என்று விடைதந்தார்கள் என்றாள்.

இவ்வளவு எளிதாக எல்லாம் முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அதைவிடப் பிறை சிறிது நேரத்தில் என் வீட்டுக்கு வருவாள் என்று எதிர்பார்க்கவே இல்லை.

மருமகளே மணமாவதற்கு முன் வருவது சரியாகப் படவில்லை.

"அத்தை வந்தார்கள்; வேலுவுக்குச் சமைச்சிப்போட ஆள் இல்லை என்றார்கள்" என்றாள்.

"அதை அடிக்கடி சொல்கிறாள்; புதியது ஏதாவது?"

"நான் மணம் செய்து கொள்ளப் போவது இல்லை; இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும்" என்றாள்.

"மற்றொன்று என் தாயைவிட்டுப்பிரிய முடியாது; அவர்கள் இந்த வீட்டை விட்டு வெளியே போக மாட்டார்கள். நான் அவர்களை விட்டுப்போக முடியாது. இதை எடுத்து அவர்களிடம் சொன்னேன்" என்றாள்.

அவளுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக இதையும் சொல்லிவைத்தேன்.

"முத்து வர மூன்று ஆண்டுகள் ஆகும்; அவன் சவுதிக்குப்போகிறான்; இங்கு வேலை கிடைக்கவில்லை" என்றேன்.

"தெரியும் கேள்விப்பட்டேன்; இந்த நாட்டில் இளைஞர்களுக்கு வேலை இல்லை; எங்கள் எதிர்காலம் பாரத மண்ணில் இல்லை" என்றாள்.

"அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்திருந்தால் அவனை நீ மணந்து இருக்கலாம்; பண்ணையாருக்குச் சொல்லிஇருப்பேன்" என்று பற்று நீங்கிய நிலையில் அவளிடம் பேசினேன்.

இதை அவள் செவியில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

"என் தாய்தான் என் முதற்கடமை; அவளுக்காக நான் காலம் காலமாய் மணம் இல்லாமல் இருக்க முடியும்" என்றாள்.

வீடுமர் சபதம் போல இருந்தது.

"மற்றொன்று என் வேலையை விட்டு விட்டு மற்றவர்களைச் சார மாட்டேன்; கட்டியவன் கனக மாளிகையில் வைத்தாலும் பூசைக்குரிய மலர்களை நானே தேடிப் பறிப்பேன். தொழில் என் தெய்வம்" என்றாள்.

என்னை விட்டு அவள் விலகுவது போலத் தெரிந்தது.

"வேலுவை விசாரித்ததும் என்னைப் பாராட்டிப் பேசியதும் எந்த வித சார்பும் கொண்டவை அல்ல என்பதை என்னால் உணரமுடிந்தது.

அவசரப்பட்டு முத்துவிடம் நான் பேசி இருக்கக் கூடாது.

ஒரு வேளை அவன் அவளைக் காதலித்து இருக்கலாம்; அதை நான் கெடுத்து இருக்கக் கூடாது. என் மனசு என்னைச் சுட்டது.

வாய்விட்டு அவளிடம் கூறிவிட்டேன்.

"நான் ஒரு தவறு செய்து விட்டேன்; மன்னிக்க வேண்டும்" என்றேன்.

"எந்தத் தவறும் செய்யவில்லை; நீங்கள் முத்துவிடம் பேசியது எனக்குத் தெரியும்" என்றாள்.

எனக்கு அதிர்ச்சி தந்தது.

"அதனால்தானே அவன் மனம் முறிந்து வெளி நாடு செல்கிறான்" என்றேன்.

"அதற்காகத்தான் நான் இதை உங்களிடம் சொன்னேன்; நீங்கள் அவசரப்படுவீர்கள் என்பதுவும் தெரியும் முத்துவிடம் கூறுவீர்கள் என்பதுவும் தெரியும்.

என் காதலைவிட அவன் ஆண்மைதான் அவசியம்; பொருள் இல்லாதவர்க்குக் காதல் இல்லை. வினைதான் ஆடவர் உயிர்; ஆள்வினை தான் ஆடவரின் செயல்பாடு. முதலில் அவன் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். அவன் நெஞ்சு ஊசலாடிக் கொண்டிருந்தது. என்மேல் வைத்த விருப்பு அவனை அழுங்க வைத்தது. அதை மாற்றத்தான் உங்களைத் தூண்டினேன்" என்றாள்.

படித்தவள் அறிவுள்ளவள் என்பதை அறிந்தேன். நான் எவ்வளவு தூரம் எளிமையாகி விட்டேன் என்பதற்கு வருந்துகிறேன்.

16

பண்ணையார் வீடு சுருசுருப்பாக இயங்கியது. காரணம் முத்துவின் வெளி நாட்டுப் பயணம் என்பது அறிந்தேன்.

முதிய வயதில் அவர்களை விட்டு விட்டுக் கடல் கடந்து போகிறான்; துயரம் ஒரு புறம்; அவர்கள் வறுமை நீங்கி வளம்மிக்க வாழ்வு பெறுகிறார்கள் என்ற நம்பிக்கை மற்றொரு புறம்.

சென்னை மீனம்பாக்கத்தில் முன்று மணி நேரத்துக்கு முன் நாங்கள் அனைவரும் சென்றிருந்தோம், முத்துவின் தாய் சில முத்துகளை உதிர்த்தாள். அப்பா அவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டு பிரியா விடை தந்தார்.

நான் உணர்ச்சி வயப்பட்டேன்.

"உனக்குத் துரோகம் செய்து விட்டேன்" என்று கத்தினேன்.

"மெதுவாகச் செய்யுங்கள்" என்றான் அவன்; அதன் பொருள் விளங்கவில்லை.

எதிர்பார்க்கவில்லை; முத்துவும் எதிர்பார்க்கவில்லை.

அந்த நாட்டில் அவனுக்குப் பயன்படக் கூடிய வகையில் ஊறுகாய், சமையல் சரக்குகள், இனிப்புகள் இவற்றை எடுத்துக் கொண்டு பிறை வருவாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

முத்துவுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தாவிட்டாலும் வியப்பு ஏற்பட்டது.

"என் பெற்றோர்களை விட்டுச் செல்கிறேன். அவர்களைக் கவனித்துக் கொள்ள யாரும் விட்டுச் செல்லவில்லை. இதுதான் என் வருத்தம்" என்றான் அவன்.

"அவர்கள் என் பாதுகாப்பில் இருப்பார்கள். என் தாயும் உன் பெற்றோர்களும் என் கண்கள்" என்றாள்.

அவனுக்கே விளங்கவில்லை.

பொன்னொளிர் சரம் ஒன்று ஆரமாக அவனிடம் தந்தாள்.

அது அவள் வளைவில் அவள் கழுத்தில் முடிச்சாக அவன் கைப்பட இறுகியது.

"மூன்று ஆண்டுகள் காத்திருப்பேன்" என்றாள்.

மூன்று முடிச்சுகள் அவனுக்காகக் காத்துக் கிடந்தன.

கனைகள்

1

'கோபி' இவன் எதிர் வீட்டுப் பையன், வயது எட்டு இருக்கும்; எனக்குத் தெரியாது; நான் கேட்டது இல்லை; என்னைவிட அவன் இருபது வயது சின்னவன். இந்த வித்தியாசம் தவிர வேறு எந்த வித்தியாசத்தையும் அவனிடம் பார்ப்பது இல்லை; அவனும் வித்தியாசம் இல்லாமல் பழகுவான்.

கூப்பிட்டால் வருவான் கூப்பிட்ட குரலுக்கு; கூப்பிடாவிட்டால் வரமாட்டான். தேவை இல்லை என்று; ஓசியில் பேப்பர் வாங்கிக் காசினை மிச்சப்படுத்தும் பழக்கம் என்னிடம் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை; நமக்குத்தான் கஷ்டம்; திருப்பித் தரமுடியாது. அதை எங்கே வைத்தோம் என்று தெரியாது.

"கோபி! உங்கள் வீட்டிலிருந்து 'இந்து' பேப்பர் கொண்டு வந்துதரமுடியுமா?" என்பேன்.

"இதிலே என்ன விசேஷம் என்று கேட்பான்; நியூஸ் இருக்காது விளம்பரங்கள் இருக்கும்" என்பேன்.

'தினத்தந்தி' கேட்பேன்.

"இதிலே என்ன விசேஷம்" என்று கேட்பான்: "இதில் தினமும் ஒரு துணுக்கு வருகிறது. அது மட்டும் படித்துத் திருப்பித் தந்து விடுவேன்" என்பேன்.

சின்னப் பையன்; அதனால் சின்ன விஷயங்களைப் பேசி நாங்கள் எங்கள் சின்னாள் ஆகிய வாழ்நாளை நன்னாளாக்கிக் கொண்டிருந்தோம்.

சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுடையவர் மாந்தர் என்று பெரியவர்கள் பேசி இருக்கிறார்கள். அதனால் அதை நன்னாள் ஆக்க முயன்றேன், எங்கள் சிற்றறிவுக்கு எட்டிய சிறு விஷயங்கள் இவை.

அவன் இன்னும் எட்டுவயது கூடினால் மார்க்கண்டேயன் ஆவது உறுதி; அவன் வீட்டில் வீடியோவில் 'பதினாறு வயதில்' ஒரு படம் பார்த்து விட்டுவந்தான்.

"என்ன படம்?" என்றேன்.

"பதினாறு வயதில்" என்றான்.

"இந்த எட்டாவது வயதில் நீ" என்றேன்

"இந்த எட்டாவது வயதில் நீ ஏன் பதினாறு வயது பார்க்க வேண்டும்" என்று கேட்டேன்.

"ஸ்ரீதேவி அக்கா நடிக்கிறாள்; அதனால் அந்தப்படம் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்"

"எனக்கு ஸ்ரீதேவியையே பிடிக்கும்" என்றேன்.

"அப்படி எல்லாம் பேசக்கூடாது. தப்பு தப்பு" என்று சொல்லி அவன் தன் கன்னத்தில் இரண்டு தடவை அடித்துக்கொண்டான்.

"நான் செய்த தப்புக்கு நீ ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்?" என்றேன்.

"நடிகையைத் தரக்குறைவாகப் பேசக்கூடாது" என்றான்.

"கமல் அந்தப்படத்தில் நடிக்கிறார்" என்றான்.

"அவரை எனக்குத் தெரியுமே" என்றேன்.

"எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"எனக்கு அவரை நன்றாகத் தெரியும்; அவருக்கு என்னைத் தெரியாது. அவர் நடித்த படங்களை நான் விடாது பார்ப்பேன்; அவர் என்னைப் பார்க்க வாய்ப்புகள் இல்லை" என்றேன்.

"இவ்வளவுதானா?"

"அவர் அதில் சப்பாணி; அந்த நடிப்பே ஒரு தனிப் பாணி; சொந்தப் பெயர் கோபாலகிருஷ்ணன், அதைச் சொல்லிக் கூப்பிடாமல் சப்பாணி என்று கூப்பிட்டதால் கோபமாக அணுகிச் 'சப்பு' என்ற ஒன்று ரஜினிக்குத் தருகிறார்." என்றான்.

"அடிக்கலாமா?" என்றேன்.

"அடிக்கக்கூடாதுதான். பொம்மனாட்டிப் பேச்சுக் கேட்டு நடந்துகொண்டார்" என்றான்.

"அப்படியானால் அவன் ஒரு கம்மினாட்டி" என்றேன்.

"இது எங்கேயோ கேட்டமாதிரி இருக்கே" என்று தொடர்ந்தேன்.

"கம்முன்னா கம்மு கம்முன்னாட்டி கோ" என்று ஒப்பு வித்தான்.

கம்மனாட்டி என்றால் என்ன என்று ஆராய்ச்சி என்னுள் எழுந்தது.

"கோபி" என்று கூப்பிட்டேன்.

"இனிமேல் கோபி என்று என்னைக் கூப்பிட்டால் கெட்ட கோபம் வரும்" என்றான்.

"நல்ல கோபம் வர என்ன என்று கூப்பிட வேண்டும்" என்று கேட்டேன்.

"கோபமே வரக்கூடாது" என்றான்.

"ஏன்?"

"ஆறுவது சினம்? இது அவ்வையின் வாக்கு" என்றான்.

"பின் உன்னை எப்படித்தான் கூப்பிடுவது?"

"கோபால கிருஷ்ணன் இந்த முழுப் பெயரை வைத்துத் தான் கூப்பிடவேண்டும்; அப்படித்தான் பள்ளிக்கூடத்தில் கூப்பிடுகிறார்கள்" என்றான்.

"உங்களைப் போன்றவர்களால்தான் இந்தியாவின் பொருளாதாரமே விரயம் ஆகிறது. உன்வாழ்நாளில் உன் பெயர் எத்தனை தடவை எழுதுவாய், எண்ணிப்பார். எவ்வளவு மை ஆகும் என்று யோசித்துப்பார். கூப்பிட

எவ்வளவு மூச்சு குரல்வளை முயற்சி தேவைப்படும் என்று கூட்டிப்பார். என்னைப்போல் சின்னதாக ஒரு பெயர் வைத்துக்கொண்டால் எழுத்து மிச்சம், அதனால்தான் கோபி என்று கூப்பிடுகிறேன்" என்றேன்.

"கோபி என்றால் முன்கோபி, கோபக்காரன் என்று பொருள்படுமே" என்றான்.

"பாபி என்று வைத்துக்கொள், இந்திப் பெயர் வைப்பதுதானே இன்றைய மந்திகளுக்கு நாகரிகம்" என்று கூறினேன்.

"பாபி என்றால் தமிழில் பாபம் செய்பவன் என்று பொருளாகிவிடும்" என்றான்.

"கோபி, பீபி, பேபி என்று எத்தனையோ பி இருக்கின்றது. ஏதாவது சொல். அதை வைத்துக்கொள்" என்றேன்.

"கோபி என்றே கூப்பிட்டுக் கொள்ளுங்கள்".

"சரி நீ கம்முன்னா கம் கம்முனாட்டி கோ" என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே வீட்டுக்குள் போய் விட்டான்.

2

ஆழ்ந்து யோசித்துக் கொண்டு. இருந்தேன். என்னைக் கம்மினாட்டி என்ற சொல் ஆட்டிப்படைத்துக்கொண்டு இருந்தது இந்தச் சொல் எந்த மொழிச்சொல்? எப்படித் தமிழில் புகுந்தது? இயற் சொல், திரி சொல், திசைச் சொல்,

வட சொல் என்று நான்கு சொற்கள் தமிழில் இடம் பெற்றிருக்கின்றன என்று நற்றமிழ்ப் புலவர்கள் நவின்றுள்ளனர். இச்சொல் யாதோ எப்படிவந்தது என்று கதிகலங்கி உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தேன்.

என் சிந்தனையைக் கலைக்க என்று பிறந்த சீர் இளமைத் திறம் வாய்ந்த என் பேச்சுத் துணைவி என்னை ஏச்சுக்கு அழைத்தாள்.

"என்ன எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை" என்று கேட்டாள்.

"கந்தகோட்டமாகிய சந்தத் தமிழில் ஒரு ஓட்டை விழுந்துவிட்டது. எப்படியோ அந்நியக் கலப்புத் தமிழின் தூய்மையைக் கெடுத்துவிட்டது. கதிகலங்கி நிற்கிறேன்" என்றேன்.

'இதுவா! இதுக்கா மண்டையை உடைத்துக் கொள்கிறீர்கள்?"

"என்ன பயன்? அதன் உள்ளே ஒன்றுமில்லையே என்ன செய்வது" என்று உரை தந்தேன்.

"அறுவை வருவார்; இன்று ஞாயிற்றுக் கிழமை; எட்டு முப்பதுக்கு வந்துவிடுவார். அவரிடம் உங்கள் வேதனையைக் கூறினால் அவர் சாதனை ஏதாவது செய்வார்" என்று கூறினாள்.

என் நண்பன் அவளுக்கு அறுவையாகப் பட்டான். நான் அவன் வரும் தெருவை எதிர் நோக்கினேன்.

அவன் ஒவ்வொரு ஞாயிறும் நகைச் சுவை நிகழ்ச்சி போல் வந்து சேர்ந்து விடுவான். அவனை நினைக்கும்போது 'இன்ப மயமே' வருவது போன்று இருக்கும். ஏதாவது கோமாளித்தனமான செய்திகளைக் கொண்டு வருவான். அதனால் அவனை 'இன்பமயம்' என்றே பெயரிட்டு அழைத்தோம். தொலைக் காட்சியில் சில வாரங்களில் நிகழ்ச்சிகள் தடைப்பட்டு விடுவதும் உண்டு; அவன் வருகை தடைப்பட்டதே இல்லை.

அவன் சரியாக எட்டு முப்பதுக்கு வந்துவிடுவான், என்பது என் வீட்டுக்காரி ஆனந்திக்குத் தெரியும். அவன் வந்து வராததற்கு முன் ஒரு கோப்பையிலே கொண்டு வந்து வைத்தாள். அதை நாங்கள் இரண்டு கப்புகளில் ஊற்றிக்கொண்டு குடிப்பது வழக்கம்.

"டீயா? காப்பியா?" என்று கேட்டான்.

"குடித்துப் பார்த்துப் பிறகுதான் சொல்லமுடியும்" என்றேன்.

"அதாவது சொல்லமுடியுமா?" என்றான்.

'மீடியம்' என்று ஆனந்தி பதில் சொன்னாள்.

"இரண்டும் கலந்த கலவை; எதுவேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு குடிக்கலாம்" என்றாள்.

"அவரவர் விருப்பப்படி இது சுவைதரும்" என்றாள்.

இந்த நிகழ்ச்சியே சுவைமிக்கதாக இருந்தது.

"நான் Hot drink குடிப்பது இல்லை என்று என் நாயகிக்குச் சூள் உரைத்துத் தந்துவிட்டேன்" என்று கூறினான்.

ஒரு திருநீலகண்ட நாயனாரை நினைவு படுத்தினான்.

"தீண்டேல் எம்மைத் திருநீல கண்டம் ஆணை" என்று கூறியதால் அந்த நாயனார் எந்தப் பெண்ணையும் தொடுவதை நிறுத்திவிட்டாராம்.

இந்த 'அறுவை' தான் தந்த சூள்உரைக்குக் கட்டுப்பட்டுச் சூடாக இருக்கும் 'பானம்' எதையும் பருகுவது இல்லையாம்.

ஆனந்தன் சட்டம் படித்தவன்; அதையே தொழிலாகக் கொண்டு நீதி மன்றம் ஏறித் தனக்கு நிதி கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறான்; நீதிப் பிழைப்புத் தக்க நிதிநிலையைத் தரவில்லை; அது அவன் வாழ்க்கை நியதியாக இருந்தது.

"டீ காப்பி இவை hotdrinks என்று நான் சொல்கிறேன்" என்கிறான்.

"தமிழில் பேசியிருந்தால் இந்தச் சிக்கலே வந்திருக்காது" என்றேன்.

"மேல் முறையீடு செய்து இருக்கிறேன். இன்னும் தீர்ப்பு வழங்கவில்லை. பிறகு தான் குடிக்க முடியும்" என்றான்.

'மிளகு ரசம்' கொண்டு வந்து வைத்தாள்; அது சூடு ஆறுகிற வரை பொறுத்து இருந்தான்;

வாய் வைத்துக் குடித்தான்.

"மிகவும் சுவைக்கிறது" என்றான்.

"என்னடா உனக்கு உடம்பு" என்றேன்.

"நஞ்சை நண்பர் தந்தால் அதை உண்பதுதான் நாகரிகம்" என்றான். பாரதியும் வள்ளுவரும் அவன் உள்ளிருந்து பேசினார்கள்.

"டேய் என் மனைவி இன்னைக்கு ஹல்லோன்னு கூப்பிட்டாள்; எனக்கு என்னமோ போல் ஆகிவிட்டது. இவளா என் மனைவி என்ற வினா எழுந்தது" என்று கூறினான்.

"இதிலே என்னடா அதிசயம்? ஆங்கிலத்திலே உன்னை அழைத்திருக்கிறாள்" என்றேன்.

'இது வரை என்னை 'தே' என்று தான் அழைப்பாள்; 'கழுதை' என்று சொல்வது போல் அது இருக்கும். 'தே உங்களைத்தான்' என்று கூப்பிடுவாள்; இன்னைக்கு ஹல்லோ என்று கூப்பிட்டாள்' என்றான்.

"காரணம்".

"ஆபீசு லேடி யாரோ என்னைக் கூப்பிட்டு இருக்கிறாள். 'ஹல்லோ ஆனந்த்' என்று அழைத்திருக்கிறாள்; அது கேட்க இனிதாக இருந்திருக்கிறது. காப்பி அடித்துவிட்டாள்.

"தினமும் அவளைக் கூப்பிடச் சொல். உன்னைச் சேர்த்துக் கட்டிக் கொள்வாள்" என்றேன்.

"முயற்சி செய்கிறேன்" என்றான்.

உடனே என் மனைவி மீது பாய்ந்தேன்.

"தே உன்னைத் தான்" என்றேன்.

"என்ன அத்தான்" என்றாள்.

"தே ஹல்லோ என்பதை விட அத்தான் என்பது ரொம்பவும் பிரியமான சொல்லாக இருக்கிறது. இதை அவளுக்குச் சொல்லிக் கொடு" என்றேன்.

"உனக்குத் தெரியுமா இந்தக் கல்லூரிப் பெண்கள் திருக்குறளையே மாற்றிச் சொல்கிறார்களாம்.

"அறத்தான் வருவது இன்பம்' என்பதை மாற்றி 'அத்தான் வருவதே இன்பம்' என்று சொல்லிச் சிலுக்கு மொழி பேசுகிறார்களாம்" என்றான்.

"றகரம் வல்லினம்; அதனால் அதை விட்டு விட்டு இருக்கிறார்கள்" என்றேன்.

"காரணம்?"

"அவர்கள் மெல்லினம்" என்றேன்.

அவனிடம் என் பிரச்சனையை எடுத்துக் கூறினேன்.

"கம்மினாட்டி என்றால் என்ன? இது என்னுடைய பிரச்சனை" என்றேன்.

"யாராவது உன்னை அப்படி அழைத்தார்களா?" என்றான்.

"அழைத்திருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது; அவனைப் 'பிடி பிடி என்று பிடித்து உலுக்கி மரியாதையா இந்தச் சொல்லுக்குப் பொருள் சொல்லிவிட்டு

மறு வேலை பார் என்று சொல்லி இருப்பேன்; இதை நானே சொல்லிவிட்டேன்; அது தான் பிரச்சனை" என்றேன்.

"பொம்மனாட்டி பேச்சைக் கேட்டு நடப்பவன் ஒரு கம்மனாட்டி" என்று நானே சொல்லி விட்டேன்.

"டேய் நீ பொல்லாதவன்; என்னையே நீ தாக்கி இருக்கிறேன்னு நினைக்கிறேன்" என்றான்.

"நானும் விதி விலக்கல்ல" என்று அறுதல் கூறினேன்.

3

என் பழைய தமிழாசிரியரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தெருவிலே போன வம்பை வீட்டுக்கு வரவழைத்தேன். அவர் தான் தமிழாசிரியர் என்பதை எளிதில் கண்டு பிடித்து விட்டேன். பழைய குடையை அவர் தவிர யார் வெய்யிலில் பிடித்துக் கொண்டு போவார்கள்; பழைய குடை இருக்கட்டும்; அவரைத் தவிர வேறு யார் இந்தக் கால்த்தில் தெருவில் பட்டப் பகலில் குடை பிடிக்கப் போகிறார்கள்; அவரேதான்; புலவர் குப்புசாமியேதான்.

வந்தவுடன் "என்னாடா கம்மினாட்டி! எப்படி இருக்கிறே" என்று என்னை விசாரித்தார்.

சரியாக என்னிடம் மாட்டிக் கொண்டார். அவரை விடுவதாக இல்லை.

அவர் எப்படி என்னைக் கம்மினாட்டி என்று சொல்லலாம்; அவர் வாபஸ் வாங்கித் தீர வேண்டும். அதாவது அதற்கு விளக்கம் சொல்லி ஆக வேண்டும். அவரை விடுவதாக இல்லை.

"ஐயா தமிழ்ச் சான்றோரே! ஐயம் திரிபு அறக் கற்ற மெய்ஞ்ஞானியே! ஐந்து இலக்கணமும் அறிந்த அறிஞர் பெருமகனே! என்னை நீர் கம்மினாட்டி என்று எப்படி அழைக்கலாம்; இது தருமமோ? நியாயம்தானா?" என்று கேட்டேன்.

"இதற்கு இலக்கியச் சான்றும், புராணக் கதைச் சார்பும் சமயச் சார்பும் உள்ளன. சுந்தரர் பெருமான் இறைவனைப் 'பித்தா' என்று அழைத்தார். அவ்வாறு அழைக்கலாமா? பித்தன் என்பது இழி மொழி அன்றோ? இறைவன் என்ன சொன்னார்? என்னைப் பித்தன் என்றே அழை; என் சித்தம் மகிழ்வேன்" என்று கூறினார்.

"இது யாது காரணம் பற்றிக் கூறியது? அன்பும் நெருக்கமும் உடையவரை இழிசொல் கொண்டு உரைப்பது பழிச் சொல் ஆகாது; விழி முன்று படைத்தவனே வழிகாட்டி உள்ளான்".

"நீ என் மாணவன்; ஒரு நாள் பழகினும் நம் கேண்மை நிலைத்து நிற்கும்' நீ அன்றும் என் மாணவன்; இன்றும் அதே நிலைதான்; நாளையும் அஃதே" என்று விளக்கம் தந்தார்.

அவர் கூற்றிலிருந்து அது தரக்குறைவான சொல் என்பது அறிய முடிந்தது.

"இதற்குப் பொருள் கூற இயலுமா?"

"என்னைச் சிக்கலில் சிக்க வைத்துவிடாதே! எந்த இலக்கியச் சான்றும் இதற்குக் கூற இயலாது. நிகண்டுகள் கற்கண்டுகள் ஒன்றும் விளக்கம் தரும் நிலையில் இல்லை.

என்னை மன்னித்து விடு; என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்" என்றார்.

அவரை விடுவதாக இல்லை 'சுமார்' என்பதற்காக வாவது பொருள் சொல்லி விட்டுச் செல்லுங்கள் என்றேன்.

'சுமார் முப்பது ஆண்டுகளாக நான் தமிழ் பயிலு கிறேன். எனினும் இச் சொல்லுக்குப் பொருள் அறிந்திலேன்" என்று கூறிவிட்டுக் கழற்றிக் கொள்ள முயன்றார்.

பாத்திரம் அறிந்து பிச்சைபோடும் பழக்கம் உடைய என் துணைவி அவர் ஆத்திரம் அறிந்து காஃபி கொண்டு வந்தாள். அவர் காஃபி என்றால் உயிர்; வந்தால் கேட்டு வாங்கிச் சாப்பிடாமல் போகமாட்டார். அன்று தானாக வந்து அவர் முன் அது அமர்ந்தது.

"காஃபி சூடாக இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

" 'Hot drink' உங்களுக்குப் பிடிக்குமா" என்று கேட்டேன்.

"தமிழில் பேசு தம்பி; அது எனக்கு அமிழ்தம் ஆகும்"

"பத்திரிகைச் செய்தி சுடச்சுட இருக்க வேண்டும். பதில்கள் சுடச்சுடத் தரவேண்டும். தோசை சுடச்சுடத் தர வேண்டும்" என்று சொற்பொருள் பின் வர அவர் பதில் கூறினார்.

வைத்த காஃபியை 'மடமட' என்று குடித்து முடித்தார்.

மறுபடியும் கம்மினாட்டியைக் கொண்டு வந்து முன் நிறுத்தினேன்.

அது ஒரு பொம்மனாட்டி என்று பதில் சொன்னார்.

"எப்படி?"

"ஆட்டி என்பது பெண்பால் சொல்" என்றார். "அதற்கு எடுத்துக்காட்டு பெண்டாட்டி; வெள்ளாட்டி" என்றார்.

"பாம்பாட்டி" என்ன பால்?" என்று கேட்டேன்.

அவர் திக்குமுக்கு ஆடினார். அவர் புலமை அவரைக் கைவிட்டு விட்டது.

"இப்பொழுது என்னசெய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்றேன்.

"பிழை இல்லாமல் எழுதுவது எப்படி என்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

"முதலில் எழுதுவது எப்படி. என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்றேன்.

"புலவர்கள் எழுதுவது இல்லை; பிறர் பிழைகளைக் காண்பவர்தான் புலவர்கள்" என்று விளக்கம் தந்தார்.

"உங்களுக்கு அரசு பரிசு கொடுத்தார்கள்" என்று கேள்விப்படுகிறேன்.

"என் தமிழ்ப்பணிக்கு"

"அது என்ன என்று கூற முடியுமா?"

"ானக்கே தெரியாதே" என்று கூறி முடித்தார்.

4

புலவர் வருகை புதுமை தந்தது. என் மனைவியின் கையில் நாடகத்துக்கு டிக்கட் வாங்கி வைத்துக் கொண்டு என்னைப் புறப்படத் தூண்டினாள்.

"என்ன நாடகம்?"

"தமிழ் நாடகம்?"

"தலைப்பு ஆங்கிலத்தில் இருக்கிறதே"

"அப்படித்தான் இருக்கும்; நாடகத் தலைப்புக்கள் தமிழில் இருந்தால் கலெக்ஷன் கம்மியாகிவிடுகிறதாம்; புராணக்கதை என்று தவறாக நினைத்து விடுகிறார்களாம்."

"பொத்தானைச் சரியாக மாட்டுங்கள். இவர்தானா உன் அத்தான் என்றால் உங்களை ஒப்புக் கொள்ள முடியாமல் போகும்".

"பொத்தானுக்கும் அத்தானுக்கும் என்ன தொடர்பு?"

"அது தான் தமிழ்; பொத்தான் கூடப் போடத் தெரியாதவர் இவராடி உன் வீட்டுக்காரர் என்று கேலி பேசுவார்கள்"

"நாடகத்திலே என்ன கதையாம்?"

"கதையே இருக்காது; கதை இருந்தால் சிரிக்க வாய்ப்பு ஏற்படாது. அது மவுன ராகமாக மாறிவிடும்"

"சிரிக்க ஒரு வாய்ப்பு; வீட்டிலே சிரிக்க முடிவதில்லை. அதனால் நாடகம் பார்க்க வருகிறார்கள்"

"சிரிப்பதற்கா ஒரு நாடகம்?"

"பின் அழுவதற்காகவா போவார்கள்; கொஞ்சம் நேரம் அவன் அவன் தன் பெண்டாட்டியையும், அவள் அவள் தன் புருஷனையும் மறந்து சிரிப்பதற்கு ஒரு வாய்ப்பு; அவ்வளவு தான்" என்றாள்.

அழுவதா சிரிப்பதா என்று தோன்றவில்லை.

"நாடகம் சமூக நாடகமா? குடும்ப நாடகமா" என்று கேட்டு வைத்தேன்.

"நடிகர்கள் நடத்தும் நாடகம்; அது சமூகமா குடும்பமா எனக்குத் தெரியாது" என்றாள்.

"இரண்டுக்கும் வேறுபாடு?"

"குடும்ப நாடகம் கலியாணத்திலே முடியும். சமூகம் விவாகரத்திலே முடியும். இதுதான் வித்தியாசம்"

"விவாகரத்தை ஏன் விரும்புகிறார்கள்"

"சும்மா ஒரு மாற்றம் தான்"

அதற்கு மேல் அதைப்பற்றி மாற்றுப் பேசுவதற்கு நான் தயாராக இல்லை.

"சரி புறப்படு" என்றேன்.

"புடவை என்று எடுத்துக் கட்டிக் கொள்ள ஒன்றுகூடச் சரியாக இல்லை. எல்லாம் கிழவிகள் ஆகிவிட்டன. அது அது காஞ்சிபுரம் பெனாரஸ் என்று பெயர்கள் சொல்லிக் கொண்டு இருக்கின்றன" என்றாள்.

"கவலைப்படாதே புதுசா பாண்ட்டு தைச்சி வைச்சிருக்கேன்; அது உனக்கும் சரிப் போகும்; கவலைப் படாதே மாட்டிக்கோ" என்றேன்.

உடனே புறப்பட்டாள்.

"ஆனந்தனையும் வரச் சொல்லி இருக்கலாமே" என்றேன்.

"அவர் மனைவி அவரை அனுப்ப மாட்டாள்; அவளும் விட்டு வரமாட்டாள்"

"காரணம்?"

"இப்பத்தானே கலியாணம் ஆச்சு"

"ஆனால் என்ன? கடன் எப்பவோ தீர்ந்து போய் இருக்குமே."

"மர மண்டைன்னா உங்களைத்தான் சொல்லணும் திரும்பிப் பார்" என்றாள்.

திரும்பிப் பார்த்தேன்; யாரும் தொடரவில்லை.

"கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பாருங்கள்" என்று சொன்னாள்.

"எல்லாம் மறந்துவிடுகிறது"

"உங்களுக்கு நல்லது எல்லாம் மறந்து விடும்" என்று சிரித்துக் கொண்டே ஸ்கூட்டரின் பின் அது கீழே விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

5

கோபி சைக்கிள் வாங்கிய புதுசு; அதனால் அவனுக்கு அதன் மீது மவுசு; பூ வைத்து அழகு பார்க்காத குறைதான்; அதைத் துடைத்துக் கொண்டே இருப்பான். "படிப்பைக் கெடுப்பதற்கு டிவி.க்கு அடுத்தது இந்தச் சைக்கிள்தான்" என்று பாட்டி முறையிடுவாள்.

அவன் சைக்கிளில் 'பெல்' இல்லாமல் இருந்தது.

"ஏன்'டா பெல் எடுத்து விட்டாய்?" என்றேன்.

"பேரீச்சம்பழம் அதுக்குக் கிடைத்தது. யாரோ அதைப் பயன்படுத்திக் கொண்டார்" என்றான்.

"வேறு ஒன்று மாட்டுவது தானே!"

"அது இருந்தால் அதன் சப்தம் கேட்டு வண்டி முன் குறுக்கே விழுந்து சாலை மறியல் செய்து விடுகிறார்கள்".

"மணி இல்லாவிட்டால் போலீசு பிடிக்குமே"

"உண்மைதான்; Money இல்லாவிட்டால்தான் கேசு எழுதுவார்கள்; பெல் இல்லாவிட்டால் கவலைப்பட மாட்டார்கள்" என்கிறான்.

"இது என்னடா கெட்ட பழக்கம்"

"தொட்டில் பழக்கம் இனித் தொடர்வது தானே. சுடுகாட்டுக்குப் போனால் கூட அங்கேயும் அவன் கையில் ஏதாவது இருக்கிறதா என்று பிரித்துப்பார்க்காமல் இருக்க மாட்டார்கள்" என்று கூறிச் சிரிக்கிறான்.

ஒரு கிழவி இருக்கிறாள்; காது கேட்காது; மணிசப்தம் கேட்டதும் ஓடி வந்து விழுவாள்; எழுவாள்; கைதொழுவாள்; வாய் விட்டு அழுவாள்; மழுவாள் படை ஏந்திய பரசுராமனைப்போல் இராமனைச் சந்திப்பாள்.

பல் செட்டைக் கழற்றிக் கையில் காட்டுவாள்; என் பல் முப்பத்திரண்டும் சேர்ந்து வந்து விட்டது. என்ன சொல்கிறாய். பல் இல்லாவிட்டால் யார் என்னைச் சட்டை செய்வார்கள்; என் வாலிபமே பறி போய் விட்டது என்று கத்துவாள். சத்தம் செய்யாமல் பத்து ரூபாய் நீட்டுவேன்; அப்பொழுது மறுபடியும் அதை வாயில் வைத்து மாட்டுவாள்; இப்படி இவள் பலரை வாட்டுவாள்; இது அன்றாட நிகழ்ச்சி" என்றான்.

"அசல் பல் எங்கே என்று கேட்டேன்; அடகு வைத்து விட்டேன் என்றாள்" என்று கூறினான்.

எனக்குப் புரியவில்லை; பல்லை எப்படி அடகு வைக்க முடியும்? புதுப் பிரச்சனையை எனக்குத் தந்து விட்டான்.

கிழவியின் பல்லை வைத்துக் கொண்டு எந்த மார்வாடி பணம் கொடுத்திருப்பான்.

ஏற்கனவே 'கம்மினாட்டி' என்ற சொல் அதற்கு இன்னும் பொருள் காண முடியாமல் திசை எட்டும் திரிகிறேன்; அதோடு மற்றொன்று. இதற்கு என்ன கருத்து? என் தலையைப் பிய்த்துக் கொள்கிறேன். மயிர் முடிதான் மிச்சம்.

"ஆதிமூலம் என்று அழைத்த கஜேந்திரன் தனக்கு அடைக்கலம் தந்தான்; நீ இறைவனை வேண்டு; தியானம்

செய்; பக்தர்களுக்கு அருள் செய்வான் அவனை வணங்கு; ஓலமிடு" என்று அறிவுரை கூறினாள்.

என் செய்வது ஆபத்துப் பாந்தவன்; அனாதை ரக்ஷகன்; அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன்; லட்சுமி கடாட்சம் பெற்ற ஆதி நாராயணன். அவன் கமலத் திருவடிகளில் விழுந்து வணங்கினேன். அவன்தான் எனக்கு அருள் செய்ய வேண்டும். அவன்தாளை வணங்கினால்தான் மனக்கவலை மாற்ற முடியும் என்று தமிழ் மறை நூல் சொல்கிறது. அதைப் பின்பற்றினேன்.

பல் விழுந்துவிட்டது என்றுதானே சொல்ல வேண்டும். அடகு வைத்து விட்டாள் என்று ஏன் கூறவேண்டும்; அந்தக் கிழவியைத் தேடிக் கண்டுபிடிப்பதைத் தவிர வேறு வழியே தெரியவில்லை.

நான் என்ன கல்லூரிப் படிப்புத்தானே. மகா கவி கம்பருக்கே ஒரு சோதனை ஏற்பட்டு விட்டது என்று படித்து இருக்கிறேன்.

சாயுங்காலம்; வயல் வெளியே காற்று வாங்கச் சென்றார்; அப்பொழுது மின் விசிறி கண்டு பிடிக்காத காலம்; காற்று வெளியே சென்று வாங்கிதான் வரவேண்டி இருந்தது.

சலசலத்த நீர் ஓட்டம்; வாய்க்கால் வழி ஓடி அங்கே; நெல்லுக்கு நீர் பாய்ந்து கொண்டிருந்தது ஏற்றப்பாட்டுப் பாடினான் ஓர் ஏர்உழவன்; "மூங்கில் இலை மேலே" என்று பாடிவிட்டான். அடுத்தவன் அதைப்பாடி முடிக்கவேண்டும். பொழுது சாய்ந்து விட்டது. முதியோர் கல்விக்கு ஒரு முத்துச் சாமி வந்து காத்திருப்பார் போல இருந்தது. கீழே இறக்கி விட்டான்.

மறுநாள் அவர்கள் பணி தொடங்குவதற்கு முன் கம்பர் அந்தப் பணியில் அங்குப் போய்ச் சேர்ந்தார்.

மற்றவன் பாடத் தொடங்கினான்.

"வாங்கும் கதிரோனே" என்று முடித்தான்.

"மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே"

என்று பாடி முடித்தானாம்.

மூங்கில் இலைமேல் பனிநீர் இரவில் வந்து தங்குகிறது. பொழுதுவிடிகிறது; சூரியன் தோன்றியதும் அதன் கிரகங்கள் பட்டு அவை சுண்டிவிடுகின்றன.

இதை அந்த ஏடு அறியாத பாட்டாளி பாடினான்; கம்பர் வியந்தார். அந்தக் கவிதைக்கு ஆசான் யார்? எப்படி இவர்கள் பாடினார்கள்? கவிஞர்கள் என்றா பிறக்கிறார்கள்; அவர்கள் கற்றுப் பாடுவது இல்லை; கண்டு பாடுகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ந்தாராம்.

'ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்ற பழமொழியே உண்டாகி விட்டதாம். அதாவது அதற்கு நிகரான பாட்டு எங்கும் யாரும் பாடமுடியாது என்ற சொல் வழக்கு உண்டாகிவிட்டது.

ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி மூன்று கேள்விகள் வைத்திருந்தாள். அந்த மூன்று கேள்விகளைக் கேட்டுச் சரியாகச் சொல்லாதவர்கள் தலைகளை வெட்டச் செய்தாளாம்; அவற்றை மதில்களில் மாட்டி வைத்தாளாம்.

அந்த மாதிரி இந்த இரண்டு கேள்விகளுக்கு விடை சொல்லாதவர்களை இரண்டு குட்டுகள் தலையில் வைக்க வேண்டும் என்ற அரிப்பு இருந்து கொண்டே வந்தது.

அந்தக் கிழவிக்குப் பயந்தே பெல்லைக் கழற்றி வைத்துவிட்டேன் என்று மாற்று மணியின் கதையை ஆற்றி உரைத்தான் கோபி.

கோபியின் பாட்டி வந்து வெளியே நின்று கொண்டு 'புது' சைக்கிள்; கீழே போட்டு உடைக்கப் போறே, பத்திரம்" என்று கத்தினாள்.

"என்ன பாட்டி சைக்கிள்தானா முக்கியம்? பையன் உங்களுக்கு ஒரு பாக்கியம் அல்லவா?" என்று கேட்டேன்.

"பையன் எனக்கு முக்கியம்; அவனுக்குச் சைக்கிள் முக்கியம்; அதைச் சொன்னால்தான் அவன் கவனிப்பான்" என்று விளக்கினாள்.

"அண்ணனுக்கு அண்ணிமேலே ஆசை; அவளுக்குத் தான் வளர்க்கும் கழுதைமேலே ஆசை; கழுதைக்குக் குட்டிச் சுவர்மேலே ஆசை" என்ற பழமொழியை எங்கேயோ கேட்டது போல இருந்தது.

பழமொழியை மாற்றிவிட்டேன் என்று நினைக் கிறீர்களா! சாதிப் பேர் சொல்வது சட்டப்படி குற்றம்; அதைத் தவிர்க்கிறேன்; அவ்வளவுதான்.

6

என் சின்ன வயசு; இந்த மாதிரி கட்டுப்பாடுகள் இல்லாத காலம்; டியூஷன் என்பதே கண்டு பிடிக்காத காலம்.

கோபியை அடக்கி மடக்கிப் பட்டியில் அடைப்பதே இந்த டியூஷன் மாஸ்டர்கள்தான்.

எங்கள் காலத்திலே நாங்கள் எங்கே படிப்பதைப் பற்றிக் கவலைப் பட்டோம். படிப்புதான் எங்களைப் பற்றிக் கவலைப்பட்டது.

இப்பொழுது காற்றாடி விடக்கூடத் தடை; அது யார் கழுத்தையோ அறுத்து விட்டதாம். அந்தக் காலத்திலே தெருவிலே கோலி விளையாடுவோம்; பம்பரம் சுற்றுவோம்; 'சடுகுடு' ஆடுவோம்; கில்லி விளையாடுவோம். அதெல்லாம் இப்பொழுது எங்கே பார்க்கமுடிகிறது. பணக்காரப் பிள்ளைகள் சிலர் கிரிக்கெட்டு ஆடுகிறார்கள்.

திடீர் என்று ஒரு செய்தி. புருஷன் தன் மனைவி கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டுப் போலீசுலே சரண் அடைகிறான் அப்பத்தான் கொலைன்னா என்ன என்று கேள்விப் பட்டேன்.

அன்றைக்குப் பள்ளிக்கூடம் போகவே இல்லை; புத்தகக் கட்டு எங்கே வைத்தேன் என்று மறந்தே விட்டேன். இருபது வருஷம் ஆகிறது; டெய்லர் கடையில் வைத்துவிட்டேன்; இப்பொழுது போகிறேன். அவர் மகன் என்னிடம் எடுத்துத் தருகிறான் சார் உங்க பேரு போட்டிருக்கு என்று எடுத்துக் கொடுக்கிறான். மலரும் நினைவுகளை அந்தப் புத்தகங்கள் ஏற்படுத்துகின்றன.

பிற்காலத்தில் 'அன்னா கரீனா' கதை படித்தேன். டால்ஸ்டாய் எழுதியது. அதைப் படித்ததும் அந்தக் கொலை எவ்வளவு முட்டாள்தனம் என்று தெரிந்தது; தெரியுது.

நல்ல அழகான குடும்பம்; பூவுக்குக் குரங்கைத்தான் பிடிக்குமாம், அது தன்னைப் பிய்த்துப் போடுவதால்; அழகு பார்த்துக் கொண்டிருப்பவனைப் பெண் நேசிப்பது இல்லை; அலங்கோலப்படுத்தி அனுபவிப்பவனைத்தான் அவளுக்குப் பிடிக்கும். அன்னாகரீனா தன் கணவன் கண்ணியமானவன்; மதிப்புக்கு உகந்தவன்; கவுரவமான மனிதன். அவளை எட்டி உதைக்கும் ஆண்மை தட்டிக் கேட்கும் தறுகண்மை அவனிடம் இல்லை. படிப்பு; இல்லாத பிடிப்பு; அவன் தன் மனைவியைக் கவனிப்பு வைக்க மறந்தான்; இத்தனைக்கும் அவள் ஐந்து வயது சிறுமியின் தாய்; அவளுக்கு எந்தக் குறையும் இல்லை.

இளைஞன் ஒருவன் அவளுக்கு வளைஞன் ஆனான்; வயது வேறு பாட்டைக் காட்டியது. அக்காவின் சொக்காயைக் கிழித்துப் பார்ப்பதில் அவன் கணக்காக இருந்தான். சின்னத்தனத்தின் சிருங்காரத்தை அவள் விரும்பி அவனை அவள் ரீங்காரமிட்டாள்.

மது உண்ட வண்டு; மலரின் வண்ணத்தைக் கண்டு மயங்கவில்லை; குடித்தபின் அது போதை தெளிந்து தன் பழைய பாதை நோக்கிப் பயணம் செய்தது. அவன் அவளோடு ஓட்டவில்லை.

வீட்டுக்கு வரத் தயங்கினாள். தான் ஆதிக்கம் செய்த வீடுதான் என்றாலும் ஒவ்வொன்றும் தன்னைத் தீண்டத் தகாதவளாக ஒதுக்குவது போலக் காட்டியது; கணவன் அவள் திரும்பி வந்ததையும் கவனிக்கவில்லை; தன் தொழில் கணக்கின் எழிலில் அழுந்திக் கிடந்தான். தான் சாக்ஸ் போட்ட சிறுமியின் சீறடிகள் வண்ணச் சித்திரம் எங்கோ

சிலம்பிட்டு நடந்து சென்று விட்டது. அது விட்டுச் சென்ற செருப்பு. அதை விரும்பி எடுத்து முத்தமிட்டுக் கண்ணீரால் குளிப்பாட்டினாள்.

அவன் அவனைக் கண்டித்து இருந்தால் அவள் ஆறி இருந்திருப்பாள். அழகிய மகளும் பழகக் கிடைக்கவில்லை.

சூடு தணிவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. பீட்டர்ஸ் பர்க் ரயில் நிலையத்தில் நிற்கிறாள்; மனிதர்கள் சுருசுருப்பாக இயங்கிக் கொண்டே இருக்கிறார்கள் மூட்டை முடிச்சுகளைத் தயாராக எடுத்து வைக்கிறார்கள்; வண்டியில் ஏறுவதற்கு; தனக்கு வேண்டியவர்கள் வருகைக்காகப் பூச் செண்டு தாங்கி நிற்கிறார்கள். மற்றவர்கள் வண்டியில் வருபவர்களுக்காகக் காத்து நிற்கின்றனர். இவள் ஒருத்தி மட்டும் தான் வண்டிக்காகக் காத்து நின்றாள்.

பெருமூச்சு விட்டுக் கொண்டு பேரிரைச்சலோடு வந்த பெரிய இயந்திர உருளைகள் உருளும் தண்டவாளத்தில் பாய்கிறாள். ரயில்வண்டி நிலையம் புகுகிறது. அவள் திசுக்கள் பிசுபிசுத்துக் கிசுகிசுத்தன; அவள் அங்கங்கள் ஒருகாலத்தில் தங்கம்போல் தளதளத்து ஒளி செய்தன; இன்று பங்கப்பட்டுப் பல துண்டுகளாகச் சிதைந்தன; அவளுக்காக அவள் குருதி மட்டும் சோகத்தைக் கக்கிக் காட்டியது.

இந்தக் கதை உலக மகா காவியம் ஆகிவிட்டது, ஒரு சிறந்த கலைஞன் தீட்டியதால்.

சின்ன வயதில் நான் கண்ட காட்சி நிகழ்ச்சி இன்று உலக மகா கதை ஆகவில்லை; அதை எந்தப் பேனாவும் எடுத்து எழுதவில்லை; அவர்களுக்கு இது புதுமையாகப்

படவில்லை; என் பிஞ்சு உள்ளத்தில் நஞ்சு; அது மிஞ்சிக் கிடக்கிறது;

மகாகவிஞன் படைத்த பாத்திரம். கரீனா கணவன் அவளைப் பற்றிச் சிறிதும் அக்கரை காட்டவில்லை. அது அவள் தவறு என்று சுட்டவும் இல்லை; மன்னித்தேன் என்று இரக்கமும் காட்டவில்லை.

மனைவி, ஒருவனின் உடைமை அல்ல; அவளைத் தொடும் உரிமை உண்டே தவிரக் கண்டிக்கும் உரிமை தனக்கு இருப்பதாகக் கருதவில்லை. சாவது அவள் உரிமை; அதைத் தடுக்கத் தான் யார் என்று விலகி நின்றான்.

இவளை விட்டுவைத்தால் தொடர்ந்து சோரம் போவாள். இவளைப் பிறன் ஓரம் கட்டுவான். காலம் காலமாகப் பழகிப் போன உடைமை/ பற்றி அவளைக் கொலை செய்யும் அதிகாரம் தனக்கு இருக்கிறது என்று நம்புகிறான். பையன் தவறு செய்தால் தந்தை அடித்துத் திருத்துகிறார்; இதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கொலை செய்தான்; அவன் செயல் அந்த வட்டாரம் முழுவதும் பேசப்பட்டது.

இந்தக் கொலையை அவன் செய்தது நியாயமா? அது அவசியமா? அவள் அவன் உடைமையா? அவன் இழந்தது என்ன? 'மானம்' என்பது பெருமை; அது தாழ்ந்து விட்டால் உயிர் வாழாமை என்பர் வள்ளுவர். அது அவள் சொந்தப் பிரச்சனை; அதில் இவன் தலையிட்டது சரியா? இது மூன்றாவது வினா?

உண்மையில் ஆயிரம் தலைவாங்கிய சிந்தாமணியின் நிலையை நான் அடைந்து விட்டேன். ஒன்று மொழி வழக்குப்

பற்றியது; மற்றொன்று தெரிந்த சொல்தான் என்றாலும் பொருள் விளக்கம் கிடைக்கவில்லை. மூன்றாவது பட்டால் தான் தெரியும் அது வரை இதற்குப் பதில் கூற முடியாது. எந்தப் பெண்ணையும் கெடுக்கும் வாய்ப்பு ஏற்படாமல் போய்விட்டது. காரணம் அவசரப்பட்டுக் கலியாணம் செய்து கொண்டேன். என்னைப் போல் துர்பாக்கியம் பலருக்கு உண்டு. அவர்கள் பின்னால் சரிப்படுத்திக் கொள்கிறார்கள். பார்க்கலாம். சொல்ல முடியாது; தப்பித்துக் கொண்டேன் என்று எப்படிச் சொல்ல முடியும்.

7

என் மனைவிக்கும் எனக்கும் எப்படியோ நெருக்கம் குறைய ஆரம்பித்தது. நான் பொத்தானை எப்படி மாட்டினாலும் அதைப் பற்றி அவள் கண்டிப்பதை நிறுத்திக் கொண்டாள். என்னைத் திருத்த முடியாது என்பதனாலேயா அவள் பார்வை மாறிவிட்டது என்பதனாலேயா தெரியவில்லை.

நான் சந்தோஷமாகப் பொழுது போவதற்கு என் மனைவியைவிட ஆனந்தனே எனக்குத் தேவைப்பட்டான். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்று விட்டு விடுகிறார்கள். சனியன்! அது சில சமயம் மிக மெதுவாக நகர்வதைக் கண்டால் எரிச்சல்தான் ஏற்படுகிறது. அவளுக்கு என்ன ஞாயிறு ஆனாலும் ஒன்றுதான்; வெள்ளிக்கிழமை ஆனாலும் ஒன்றுதான்; அதே அடுப்புதான்; அதே சமையல்தான்; ஒரு நாளும் அவள் முழு விடுதலை எடுக்க முடியாது இறுமாப்பு. 'கணவன் மனைவி' என்ன உறவோ; படுபோர்; நாங்கள் பேசுவதற்கு என்ன இருக்கிறது யோகிகள் அவர்கள்

வாழ்க்கை அதைவிடப் படுபோர்; அவர்கள் தம்மைப் பற்றியே எண்ணித் தியானத்தில் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள்? அவள் என் வீட்டைத் தட்டுவாள்; நான் அவள் வீட்டைத் தட்டுவேன்; கொஞ்சம் பேச்சு செல்லும்; அதற்கப்புறம்.

வீடு என்றாலே யாராவது வரவேண்டும் போகவேண்டும்; அவர்களிடம் நம்மைப்பற்றிப் பேசமுடியும். அவர்களைப்பற்றி நாம் சில கேட்கலாம். அதுவும் ஆனந்தன் எல்.கே.ஜி; ரைம்கள் நிறையக் கற்று வருவான் ஏதாவது கேட்டால் அழகாக ஒப்புவிப்பான்; அவன் வரும் நேரம் ஒன்பது; அதுவும் வந்து விட்டது. அவனும் உள்ளே நுழைந்துவிட்டான். புதுமாப்பிள்ளை கூடுதல் கவர்ச்சி.

வரும்போதே தன் மனைவி ஷோபனாவின் பிரலாபத்தைக் கூறாமல் இருக்கமாட்டான். தாங்கள் இருவரும் காதற்பறவைகள் என்று ஓதுவதை விடமாட்டான்.

"இன்று என்ன உறுதி செய்து விட்டு வந்தாய். மூன்றுக்குமேல் இட்டிலி தின்பதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்து விட்டு வந்தாயா?" என்று கேட்டேன்.

"ஒன்றுக்கு மேல் இரண்டாவது தொடுவது இல்லை; என்று வாக்கு அளித்துவிட்டேன்" என்றான்.

"ஒன்று யார்?"

"அது என் மனைவி சோபனா!

"புதுசு; அப்படித்தான் இருக்கும் மவுசு"

"இன்னொன்று வந்தால் என்ன செய்வாய்?"

"இது ரொம்பவும் சின்ன விஷயம்; புதிய அவளிடத்தில் ஒரு உறுதி வாங்கிக் கொண்டால் போகுது; நீ யாரிடமும் இதைப் பற்றிப் பேசாதே" என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

"உன் மீது நம்பிக்கை வைத்துத் தானே சத்தியம் கேட்டு வாங்கினாள்"

"நம்பிக்கை இருந்தால் சத்தியம் எதற்கு? உறுதிகள் எதற்கு? என்னமோ கேட்டால் சரி என்றேன். காசா பணமா நகையா புடவையா, வெறும் வாய்ச் சொல்தானே".

"அதனால் உனக்கு என்ன நன்மை?"

"அவள் இராமாயணக் காலட்சேபம கேட்டுவிட்டு வந்தாள். அங்கே இராமசாமி சாத்திரிகள்; அவருக்கு ஒரு 'குஷி' கிளம்பிவிட்டது. இராமன் கதையை நடத்தினார்.

கோயிலுக்குப் போகிறேன் என்று போனவள் இந்தக் கோமாளித்தனமான பேச்சைக் கேட்டு ஏமாளியாகி விட்டாள்; எங்குப் பார்த்தாலும் பச்சைக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இச்சைபிறந்தது. கொச்சைத் தமிழ் அதனால் அவர் சிரிக்க வைத்தார்.

சீதையின் அசோகவனம் என்பதைப் பற்றிச் சித்திரித்துப் பேசினார். வல்லிய இடையை உடைய அரக்கிமார் மத்தியில் மெல்லிய இடையை உடைய சீதை புலிக் கூட்டத்திலே அகப்பட்ட இளமான் பிணைபோல இருந்தாளாம்.

சீதை எப்பொழுது குளிப்பாள்; இடையே இல்லாத அவள் எப்படி நடக்கிறாள் என்று காண அந்த அரக்கியர்

ஆவலோடு இருந்தனர். அவள் குளிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லையாம். அவள் விட்ட கண்ணீர் அவள் மேனியை நனைத்ததாம். போகட்டும் அவள் மெல்லிய புடவையை உலர்த்தத் தானே வேண்டும் என்று எதிர் பார்த்தார்களாம். உடம்பு வெப்பம் தந்தது. அதைச் செப்பம் செய்ததாம்; அவனை நினைத்து விட்ட பெருமூச்சு அடையு முடியாத வேதனை ஒரே சூட்டை உண்டாக்கி விட்டதாம். புடவை தானாகக் காய்ந்து விட்டதாம்.

இப்படிச் சொன்னால் யார் தான் கேட்காதிருக்க முடியும். அனுமன் மோதிரம் தந்தானாம்; அய்யோ இது அரக்கர் நகருக்கு வந்து பழுதுபட்டு விட்டதே என்பதால் அழுது கண்ணீர் வடித்துக் கலசம் ஆட்டினாளாம்.

அதைத் தன் மார்பில் வைத்து அணைத்தாளாம்; அது உருகி விட்டது. மறுபடியும் கண்ணீர்பட்டது; இறுகிவிட்ட தாம்.

அனுமனைச் சந்தித்த சீதை பழைய செய்திகளை எல்லாம் எழுதி வைத்த ஏட்டில் இருந்து வரிசைப்படுத்தி வகைப்படுத்தி மிகைப்படுத்தாமல் கூறினாளாம்.

வந்து என்னைக் கைப்பிடித்த அந்தப் புது நாளில் இந்த இப் பிறவிகளில் இரண்டு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று வரம் தந்தானாம். அதைப் போய் அவன் செவியில் செப்புவாய் என்று கூறினாளாம்.

ஏன்? அதை மறந்து காட்டு வழியில் ஏதாவது மேட்டுக் குடி மகள் கிடைத்தால் அவள் பேச்சைக் கேட்டுக் கிறு கிறுத்து அவளைக் காதலிக்கிறேன் என்று உளறிவிடப் போகிறான் என்று அறிவுறுத்தினாளாம்.

"அதை அப்படியே கேட்டு வந்து அந்த வேகத்தில் 'இந்தச் 'சிகப்புவரம்' நீ தரமுடியுமா'? என்று கேட்டாள் என்னை."

"அது என்னடா இது சிகப்பு வரம்?"

"செவ்வரம் என்று கேட்டிருக்கிறாள். அதற்கு அவளுக்குப் பொருள் தெரியாமல் உளருகிறாள்"

"செவ்வரம் என்றால் என்ன?"

"செம்மை உடைய வரம் என்பது பொருள். அதை அவள் 'சிகப்பு' வரம் என்கிறாள்."

"வரத்துக்குக் கூட நிறம் தீட்டப்பட்டு விட்டது"

"காசா பணமா? நாலுவார்த்தை. அதற்குக் கூடவா பஞ்சம்?" அவள் கெஞ்சிக் கேட்கும் போது வஞ்சகம் கொள்ளவில்லை."

"அந்தச் சீதைக்குத்தான் தேவையில்லாத அவநம்பிக்கை உண்டாயிற்று. இராமனை நம்பாமல் போய் விட்டாள். சோபனா படித்தவள். அவளும் புத்திகெட்டு விட்டாளே" என்று கேட்டேன்.

அவன் அப்படியே அதிர்ந்து போனான். ஏன்? அவன் மனைவியைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு அல்ல; சீதையைப் பற்றி இதுவரை யாரும் இந்தக் கேள்வியைக் கேட்டது இல்லை. அதனால் அவன் அசந்து விட்டான்.

என் மனைவியிடம் இதைப் பற்றிச் சொன்னேன்.

"அதுக்குத் தான் இந்தப் பழைய இலக்கியங்களைப் புரட்டக் கூடாது" என்று கூறினாள்.

எனக்கும் இது அதிர்ச்சியைத் தந்தது. இதைக் கேட்டுவிட்டு ஆண்கள் இராமச்சந்திர மூர்த்திகளாகத்தான் இருக்கவேண்டும் என்ற இறுக்கம் ஏற்படுகிறது. போகட்டும். இன்னொரு பெண்ணைத் தொடாமல் இருக்கலாம் (பஸ் நெருக்கடி தவிர்க்க முடியாத இடம்) கிடக்கட்டும்.

சிந்தையாலும் தொடக் கூடாது என்றால் மற்றவர்கள் எவ்வளவு வருத்தப்படுவார்கள். சிந்தித்துப்பார்க்க வேண்டிய விஷயம். "ஒருவனுக்கு ஒருத்தி" என்பதே எத்தனை நாள் தாக்குப் பிடிக்கிறது பார்க்கலாம்; 'அழகு' பலருக்கும் உரியது; உடம்பு வேண்டுமானால் ஒருவனே உரிமை கொண்டாடலாம். பெண்கள் இதை விரும்ப மாட்டார்கள். கட்டியவன் ஒருவனுக்காக மட்டும் அவர்கள் உடுத்துவது இல்லை. மற்றைய பெண்கள் மெச்சிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆண்களும் பாராட்டவேண்டும் என்று விழைகிறார்கள். முக்காடு இட்டு மூடி வைத்துத் தெருவில் முட்டாமல் சென்றது பழைய காலம். இந்த எண்ணங்கள் எனக்குள் தோன்றின. அரபு நாட்டிலும் விழிப்பு ஏற்பட்டுவிட்டது. மேற்கே இருந்து தோன்றும் சூரியன் புதிய ஒளியை வீசிக்கொண்டு இருக்கிறான்.

என் நண்பன் ஒரு அப்பாவி என்பதைப் புரிந்து கொண்ட என் துணைவி அவன் வருகையை வெறுப்பதை விட்டாள்; புது வகை நேசம் உருவாகிவிட்டது. அறிவாளியைவிட அப்பாவிக்கு வரவேற்பு மிகுதி எனத் தெரிந்தது.

கோமாளித்தனமும் எனக்கும் தேவைப்பட்டது; அதை அவன் நிறைவேற்றிக் கொடுத்தான்.

மாதர் சங்கத்துக்கு மகளிர் செல்வதா? சத் கதா காலட் சேபங்களுக்குச் செல்வதா? என்று ஒரு விவாதத்தை எழுப்பி வைத்தேன். அது தீராத பேச்சாக நீண்டு கொண்டே சென்றது.

அவன் மனைவி சத் கதா காலட்சேபங்களுக்கு மரியாதை தந்தாள்; அதை மிகவும் விரும்பினாள். கேட்பதற்குச் சுவையாகவும், இனிமையாகவும், ஆறுதலாக வும், மாறுதலைத் தருவதாகவும், கதை ஆர்வம் ஊட்டுவ தாகவும், பலமுறை அதே கதையைக் கூறுவதால் பதிவதாகவும் இருந்தன என்றாள்.

மாதர் சங்கத்தில் பழகுவதால் மனித நேயம் வளர்கிறது; புதுமை அறிய முடிகிறது. புதுப்புதுச் செய்களை அறிந்து கொள்ள முடிகிறது. எதுவும் கற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் ஊறுகாயில் உப்பு எந்த அளவு போடுவது என்பதாவது அறிய முடிகிறது. குடும்பப் பெண் என்று முத்திரை குத்தி வைத்து நித்திரை செய்விக்க முடியாது. வடக்கே இமயமலை தெற்கே குமரிமுனை இதற்கு இடைப்பட்ட நில எல்லை; அதில் வாழும் பாரதப் பெண் என்ற பெரிய மாறுதல். இது மாதர் சங்கம் தருகிறது. இது என் மனைவியின் வாதம்.

இரண்டுமே கூடாது என்பது என் பிடிவாதம். அவர்கள் எப்படியாவது போகட்டும். நமக்கு ஏன் இந்த வீண் வாதம்? அவர்கள் நம்மை அறுக்காமல் இருக்க வேண்டுமானால் வெளியே அனுப்புவது அவ்வப் பொழுது என்பதுதான் உத்தமமாகப் பட்டது. பழமையும் புதுமையும் அறியப் பராசக்தி கோயிலும் பராசக்தி படமும் இரண்டும்

தேவை என்றேன். மகாசக்திகள் இருவரும் நண்பர்கள் ஆயினர். மாதர் சங்கத்துக்குத் தொடர்ந்து அழைத்துச் செல்வதாக என் மனைவி சோபனாவுக்கு அழைப்பு விடுத்தாள். புதுமண வாழ்வில் ஒரு சிறு சிதைவுக்கு அது அடிகோலியது; மெல்ல மெல்லக் கணவனின் பிடிப்பு அவளை விட்டு அகலத் தொடங்கியது. அவனுக்கும் புது உறவுகள் வளர வாய்ப்புகள் ஏற்பட்டன.

8

ஆனந்தன், வரும்போது எல்லாம் ஏதாவது புதுப் பிரச்சனை உடன் கொண்டு வந்தான்.

"ஆனந்தன் இப்பொழுது என்ன உறுதி சொல்லிவிட்டு வந்தாய்?"

அவளை வீட்டில் காண முடிவது இல்லை என்பதுதான் அவன் பிரச்சனை.

"காரணம்?"

"அவள் சங்கச் செயலாளர்; நாடக டைரக்டர்; கதை வசனம் எல்லாம் அவள்தான்"

"இதை எல்லாம் எப்படி அவள் கற்றுக் கொண்டாள்"

"அதுதான் பெண்; கட்டுப் பெட்டியாக இருந்தவள்தான்: வாய்ப்புக் கிடைக்கிறது; அவள் இறக்கைகள் கொண்டு பறக்கிறாள்"

"உன் நிலைமை?"

"என்னை அம்போ என்று விட்டு விட்டாள்"

"அவளோடு எப்பொழுதுதான் கண்டு பேசமுடிகிறது?"

"வீடு வர ஒன்பது ஆகிறது. சில சமயம் நானே சமைத்து வைப்பேன்; அவள் தானே போட்டுக் கொள்வாள்" என்று விளக்கினான்.

ஆனந்தன் வீட்டில் தங்குவது குறைந்து விட்டது. பொழுது போக அவன் இங்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தான். என் மனைவிக்கும் சலிப்பு ஏற்படவில்லை.

9

என் மனைவி மாதர் சங்கம் செல்வதைக் குறைத்துச் கொண்டாள். கோயிலுக்கு அதிகம் செல்லத் தொடங்கினாள். புதுமையாக இருந்தது. காற்று இடம் மாறி வீசுவதைக் கண்டு வியப்பு அடைந்தேன்.

"ஏன் கோயிலுக்கு அதிகம் செல்கிறாய்?" என்று துணிந்து கேட்டேன்.

நாற்பதுக்கு வர வேண்டிய ஆசாரம் இவளை இப்பொழுது பற்றுவது ஏன் என்ற விசாரம் எனக்கு ஏற்பட்டது.

"மனம் சரியாக இல்லை. அதற்கு மார்க்கம் கோயில் என்றுதான் தோன்றுகிறது" என்றாள்.

"ஞானியாக மாற வேண்டிய காரணம்?"

"என் மனசு வருந்துகிறது; உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன்" என்றாள்.

ஈட்டிக் கொண்டு பாய்ச்சினாள். அவள் தவறு செய்வாள் என்று நான் எண்ணியதே இல்லை; அழகு அப்படி அபரிமிதமாக இல்லை. பொதுவாக அவள் என்னைத் தவிர மற்றவர்களைக் கவர்ந்தது இல்லை; அதிலே எனக்கு ஒரு மனநிறைவு.

"கெட்டு விட்ட பால் கொட்டிவிடவேண்டியதுதான் நெஞ்சில் ஒரு முள்ளாக அது தைக்கிறது. எனக்கு விடுதலை இல்லை" என்றாள். காரணம் சமூகம் என்னை மன்னிக்காது

"இரண்டே வழிகள் உள்ளன. ஒன்று நைந்து நைந்து மாள்வது அல்லது உண்மையை ஒப்புக்கொண்டு உம் கையால் சாவது" என்று கூறினாள்.

"நீ எதை விரும்புகிறாய்?"

"உம் கையால் நான் சாகவேண்டும்" என்றாள்.

இந்த வீட்டில் இப்படி ஒரு மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

குற்றவாளி யார்? என்று கேட்டு அவள் மனத்தை நோகவைக்க விரும்பவில்லை.

"எனக்கு ஒரு வாரம் அவகாசம் கொடு; முடிவு சொல்கிறேன்" என்றேன்.

"தவறு செய்த எனக்கு விவாகரத்து மட்டும் வேண்டாம்; யாரும் என்னை நம்பமாட்டார்கள். ஒன்று நீர் என்னைக் கொலை செய்துவிட வேண்டும், அல்லது நான் தூக்குக் கயிற்றில் மாட்டிக்கொண்டு சாகவேண்டும்; அந்தக் கயிறு உங்களால் மாட்டப்படவேண்டும்" என்று வேண்டிக்

கொண்டாள்; என் நண்பன் என்னிடம் வருவதைக் குறைத்துக் கொண்டான். என் வாழ்வு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு வாரம் நாங்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

சின்ன வயதில் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த பருவம். அன்று நடந்த கொலை; அவள் இறந்தது; கணவன் சிறைத் தண்டனை ஏற்றது; அதன்பின் விடுதலை அடைந்தது. அன்னாகரீனா நாவல் வந்து என் மனத்தைக் கலைத்தது. அவள் ஒரு அன்னாகரினாவாகக் காணப்பட்டாள்.

10

சிரித்துக் கொண்டே இருந்த என் வாழ்க்கையில் சிந்தனைகளைப் புகுத்திவிட்டாள். நான் ஒரு எந்திர மனிதனாக இருந்திருந்தால் உடனே தொடர்ந்து செயல்பட்டு இருப்பேன். 'நெஞ்சில் ஒரு முள்' என்ற நூலைப் படித்து இருக்கிறேன். அது என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து கிடந்தது. எவ்வளவு பெரிய அறிஞர் ஆசாரக் கோவைக்கு அடிமையாகிப் பெண்ணை அடிமை செய்யும் ஆதிக்கமான நூலை எழுதி விட்டார் என்று வருந்தியது உண்டு. அந்த முள் என் நெஞ்சைத் தைத்தது. அதனால் பாதிக்கப்பட்டவன் நான்.

என் அறிவு புரட்சி செய்து கொண்டே இருந்தது. அது இன்று என்னைக் காத்தது. அந்தக் கீழ்மைக்கு நான் செல்லத் தேவை இல்லை என்பதை உணர்ந்தேன். நம்முடைய ஆசாரங்களையும் மதிப்பீடுகளையும் அலசி ஆராயும் காலம் வந்து விட்டது. அறிஞர்கள் என்றால் சுயமாகச் சிந்தித்து

எழுத வேண்டும். திருக்குறளை ஒப்புவித்து அதற்கு விளக்கங்களைத்தர எழுத்தைப் பயன்படுத்திவிடுவதால் வரும் விளைவு இது என்று எண்ணி வருந்தியது உண்டு. இதனையும் அழிவு இலக்கியங்களில் ஒன்றாகக் கருதியது உண்டு. நீதிபோதனை என்ற பெயரில் பெண்களின் சுதந்திரத்தைக் கண்டிப்பது, அதற்காக அவர்களைத் தண்டிப்பது இவை இரண்டும் தவறு என்ற கருத்து அடிப்படையில் என்னுள் ஊறிக் கிடந்தது.

இப்பொழுது என் துணைவி துணிந்து தன்னைக் கொலை செய்து விடு என்கிறாள். அவசரப்படவில்லை. ஆவேசப்படவில்லை. இனிமேல்தான் என் சிந்தனைகளுக்குச் சுருசுருப்புப் பிடிக்கிறது.

"நீ என்னைக் கொலை செய்துவிடு" என்று மிக எளிதில் கூறிவிட்டாள். பேனா எடுத்துப் பழகிய கை இது; கத்தி எடுக்கத் தெரியாது. மானம் உள்ளவன் என்று பேசுவார்கள். நிதானம் இழந்துவிட்டான் என்று ஏசாமல் இருப்பார்களா?

அவள் தற்கொலை செய்துகொள்ள நான் கயிறு எடுத்துக்கொடுக்க வேண்டுமாம். ஏன்? கொலைக்குற்றம் என்னைச் சாராமல் இருப்பதற்கு. அவள் பதிபக்தி இந்த அளவுக்கு எனக்கு உதவி செய்ய நினைக்கிறது.

அவள் தற்கொலை செய்துகொண்டால் உலகம் என்ன சொல்லும்? என்னைக் கொடுமைக்காரன் என்று கூறும். சட்டம் வரதட்சணை கேட்டேன் என்று உள்ளே தள்ளி விசாரிக்கும்.

இன்று பாரதம் கொலையை ஒரு கலாச்சாரமாகக் கொண்டிருக்கிறது. கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்கோர்

கூறுவதுபோல் கொலைகளின் எண்ணிக்கைகள் தாள்களில் வெளிவருகின்றன. யார் யாரைக்கொலை செய்வது ஏன் கொலை செய்வது என்று காரணமே இல்லாமல் போய்விட்டது. அதுமாதிரி இன்று வெடி வைக்கும் எந்திரக் கூட்டுக் கொலைகளைத் திட்டமிடுகின்றனர். நகரங்கள் அதிர்கின்றன.

கொலை என்பது காட்டுமிராண்டித்தனம்: வலிய மிருகம் எளியதைக் கொன்றது. வலியவன் எதிரியைக் கொன்றான்; இவள் எனக்கு எதிரியா? பகையா? ஆசாரத்துக்கு மாறுபட்டவளாக மாறி இருக்கலாம்; அதற்கு எதிரியாக இருக்கலாம். எனக்கு எதிரி அல்ல.

மனைவி ஒருவனுடைய உடைமை என்று கருதப்படுகிறது. அவள் மற்றவனுக்கு உரிமையாகி விடுகிறாள் என்பதை இவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவளைக் கொலை செய்து விடுகிறான். அதனால் என்ன நன்மை? உடைமையையே இழக்கிறான். அதுவும் நியாயமாகப்படவில்லை;

ரயில் தடம்புரண்டால் அதை நிமிர்த்தி மறுபடியும் ஓடச் செய்வதுதான் புத்திசாலித்தனம். அந்த வண்டியைத் தூக்கி யாரும் எறிந்து விடுவது இல்லை.

மறுபடியும் நினைத்துப் பார்க்கிறேன். சின்ன வயதில் பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போட்டுவிட்டு வேடிக்கை பார்க்கச் சென்ற கொலை நிகழ்ச்சியை. அவன் காவல் நிலையத்தில் சரண் அடைந்தான். சட்டம் அவனுக்குப் பாதுகாப்புத் தராமல் அவனை வெளியேவிட்டால் அவனை

மற்றவர்கள் பழிதீர்ப்பது உறுதி. அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்தார்கள்.

அவன் விடுதலை பெற்று வெளியே வந்திருந்தான். அவனை வழியில் சந்தித்தேன்.

"இவனா கொலையாளி?"

அப்பாவியாக இருக்கிறான்.

இவன் எப்படிக் கொலை செய்தான்? சாதுவான மாடுதான்; மிரண்டு குத்திவிடுகிறது.

"நீ கொலை செய்துவிட்டு ஆயுள் தண்டனை அடையவில்லையா?" என்று கேட்டுவிட்டேன்.

"அன்று எனக்கு மன்னிக்கும் மனப்பக்குவம் இல்லை; அவளையும் வாழவிட்டிருப்பேன்; நானும் வாழ்ந்திருப்பேன். அவள் எனக்காக வாழ்ந்தாள்; எனக்காகத் தன் உழைப்பை எல்லாம் தந்தாள்; சுகம் தந்தாள்; என் கனவுகள் கற்பனைகள் எல்லாம் அவள்தான்.

உணர்ச்சி வசப்பட்டு அவள் உயிரைப் போக்கினேன்; அதற்கு உரிய தண்டனை அனுபவித்துவிட்டேன்.

அந்தக் கொடுமை மிக்க சிறையில் அவள் உருவம்தவிர வேறு எந்த வடிவமும் என் நினைவுக்கு வராது. அவளோடு நான் கழித்த இன்ப நாட்கள் அந்த நினைவுகள் என்னைப் புரட்டி எடுத்துவிடும். திடீர் என்று அவள் செய்த தவறு முன் வந்து நிற்கும். நான் கொலைகாரனாக மாறிய கொடூரம் நினைவிற்கு வரும். அப்புறம் அடங்கிவிடுவேன். எவ்வளவு

பெரிய தவறு செய்துவிட்டேன் என்று வருந்துவேன். அவள் செய்த தவறை மறந்து விட்டேன்.

காலம் காலமாக இது மாபெரும் தவறு என்று பிரச்சாரம் செய்தார்களே அவர்கள் தாம் குற்றுவாளிகள் என உணர்கிறேன். ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி அவர்கள் தவறுவது மனித இயல்பு. உணர்வுகள் அவர்களை மயக்கிவிடும்; இதைப் பெரிதுபடுத்தாதே என்று எந்த மடையனாவது இது வரை எழுதி வைத்தானா!

"எங்கள் சிறையில் இதைத் தான் பேசுவோம். நமக்கு அறிவு தந்த நீதி நூல்கள் தவறு செய்து விட்டன என்றுதான் பேசிக் கொள்வோம்" என்றான்.

"அவை தவறு செய்யவில்லை. அதை எழுதிய காலம் வேறு; இன்றைய மனிதன் வாழும் சூழ்நிலை வேறு" என்று அவனைச் சமாதானம் செய்து அனுப்பினேன்.

"நாளடைவில் அவள் படத்தை மாட்டி வைத்துச் சிறையில் வழிபடுவேன்; அவள் எனக்குத் தெய்வமாக மாறிவிட்டாள். என் மனம் திருந்தி விட்டது அவள் தவறு செய்யவே இல்லை. மானிட இயல் இது என்று உணராத நான் தான் தவறு செய்து விட்டேன்" என்று கூறி வருந்தினான்.

அவனுடைய சந்திப்பு எனக்கு ஒரு படிப்பினை. என் அறிவு தெளிவு பெற்றது. அன்னாகரினாவின் கதை உலகுக்கே ஒரு படிப்பினை. பெண் சாகக் கூடாது. இந்தப் பழைய ஆசார நீதிகள் சாகவேண்டும் என்றுதான் தோன்றியது. அவை செத்துக் கொண்டுதான் இருக்கின்றன. யாரும் இனித் தடுத்து நிறுத்த முடியாது என்பதை உணரும் வாய்ப்புகளைப் பெற்று வருகிறேன்.

11

அன்று வந்த சோபனா வேறு; இன்று ஆனந்தனோடு என் வீட்டுக்கு வருகிற சோபனா வேறு. பெரிய மாற்றம். அன்று சம்பிரதாயங்கள் சார்ந்த கட்டுப் பெட்டியாகப் பாரதப் பழம்காலச்சாரத்தின் பிரதிநிதியாகக் காட்சி அளித்தாள்.

என் மனைவிதான் அவளை மாதர் சங்கத்தில் சேர்த்தாள். கலை, நாட்டியம், இசை இந்த நுண்கலைகளில் தேர்ந்தவளாக மாறி விட்டாள். மாதர் சங்கத்து ஆண்டு விழாவில் மகத்தான நாடகம் ஒன்று நடைபெற்றது. அதற்கு எனக்கும் அழைப்புத் தந்திருந்தனர். ஆனந்தனும் வந்திருந்தான்.

ஆனந்தியின் கணவன் நான் என்று அறிமுகப்படுத்தப் பட்டேன். நாடகத்துக்குத் தலைமை தாங்கும்படி சொல்லி இருந்தார்கள். பொதுவாக டைரக்டர்களைக் கொண்டுதான் அவர்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். அதனால் திரைப்படத்தில் நுழைய வாய்ப்பு உண்டு என்பதால், சோபனாவுக்கு நான் தலைமைதாங்க வேண்டும் என்பது விருப்பம். அதை என்னால் தள்ள முடியவில்லை. ஆனந்தனும் ஆனந்தியும் கீழே பக்கத்துப் பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருந்தனர்; அவர்கள் தம்பதிகள் போல் எனக்குக் காட்சி அளித்தனர். எனக்கு எதிர்ப்போ வெறுப்போ தோன்றவில்லை. என் மனம் பண்பட்டுவிட்டதை உணர்ந்தேன். புண்பட்ட மனம் எப்பொழுதோ ஆறிவிட்டது.

அன்று மேடையில் மாதர் சங்கத்தைப் பாராட்டிப் பேசினேன். பெண்களைக் குடும்பத்துக்குள் அடக்கி

அவர்களைச் சமூக எல்லைக்குப் போகாமல் தடுத்து வந்தோம். அவர்கள் பழைய கலாச்சாரங்களையே போதித்துக் கொண்டு கொஞ்சம்கூட மாறாமல் இருக்கக் கோயில்களுக்கு மட்டும் அனுப்பி வைத்தோம். அங்கே சத் காலட்சேபங்கள் கேட்க வைத்தோம்.

பெண் என்றால் அவள் சாவித்திரியாகத்தான் இருக்க முடியும்; சீதை கண்ணகி இவர்கள்தாம் பெருமை மிக்கவர்கள் என்று பதிய வைத்தோம்.

இன்று பெண் கம்ப்யூட்டர் யுகத்தில் கால் வைக்கிறாள். ஆண்களோடு பழகும் வாய்ப்புகள் மிகுதி; கலாச்சாரங்கள் மாறிக் கொண்டு வருகின்றன. பெண் அவள் அழகு ஒருவனுக்குத்தான் சொந்தம் என்று கருதப்பட்டது. இன்று அது பலருக்கும் உரிமை ஆகிறது. அது கலை வடிவில் இருக்கலாம்; காட்சி வடிவில் நிற்கலாம்; சிரிப்பு வடிவில் மாறலாம்; அறிவு வகையில் விளங்கலாம்; அவள் கலகலப்பாக வாழும் காலம் வந்து விட்டது என்று பாராட்டிப் பேசினேன்; அதற்கு நன்றி கூற இருவரும் என் வீட்டுக்கு வந்தனர்.

"நீர் மிகவும் சிறப்பாக நடித்தீர்" என்று பாராட்டினேன்.

காஃபி சூடாக என் மனைவி கொண்டு வந்து வைத்தாள்.

"இப்பொழுது Hot drinks" என்றேன்.

"எல்லாம் பழகி விட்டது" என்றான்.

"எப்படி" என்றேன்.

"கிளப்புகளுக்குப் போகிறேன்" என்றான்.

"ரொம்பவும் முன்னேற்றம்தான்."

"சோபனாதான் என்னை அனுப்பி வைக்கிறாள்; அவள் அதிகம் வீட்டில் தங்குவது இல்லை. வீட்டில் போர் அடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டாம். கிளப்புக்குப் போய்ப் பொழுது போக்கிவிட்டுவா என்று அனுப்பிவிடுகிறாள்" என்றான்.

"அங்கே குடிக்கிறார்களாமே."

"அதுக்குத்தானே போகிறோம்; கம்பெனி கிடைக்கிறது."

"இன்னும் வேறு சில விஷயங்கள் கேள்விப்படுகிறேன்."

அவன் சிரித்தான்; பதில் சொல்ல வில்லை.

"என் நடிப்பைக் கண்டு பலர் திரைப்படத்துக்குக் கூப்பிடுகிறார்கள்; மறுத்துவிட்டேன்" என்றான்.

எனக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இருந்தது. அது ஆனந்தன் முடிவு செய்ய வேண்டியது என்று பேசாமல் இருந்து விட்டேன்.

12

தமிழாசிரியரைச் சந்தித்தேன். ஓர் அறிஞரோடு பேசுவதில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

"அறிவுப்பசி எது வரை இருக்கும்? என்று கேட்டேன்.

"அதற்கு எல்லையே கிடையாது" என்றார்.

அதற்குச் சான்றாக அவர் கற்றிருந்த பண்டைத் தமிழ் நூலில் இருந்து பாட்டு ஒன்றை அவிழ்த்து விட்டார். அதன் கருத்து இது தான்.

"கற்றது கைம் மண்ணளவு; கல்லாதது உலகு அளவு; என்று உற்ற கலை மடந்தை ஓதுகிறாள். அதனால் கல்விக்குக் கரையே இல்லை; நமக்குத்தான் அதன் மீது அக்கரை இருப்பது இல்லை; நம் வாழ்நாள் முழுவதும் போதாது" என்று கூறினார்.

"நாள் எல்லாம் கற்றுக்கொண்டிருந்தால் நம் வேலை செய்ய ஆள் ஏது? அது தவிர வேறு நாம் ஏதும் செய்ய முடியாதே" என்றேன்.

"எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் மோன நிலையை விட்டு நீங்காது என்பர். அது போல எந்தத் தொழிலைச் செய்தாலும் ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும்" என்றார்.

"சதா ஒருவன் படித்துக் கொண்டிருந்தால் அவன் பைத்தியம் பிடித்து மனநோய் மருத்துவ மனை அடைந்து விடுவான்" என்றேன்.

"நூல் பல கற்றாலும் தன் நுண்ணறிவே மிகும்; நூல் பல கற்பதால் மட்டும் பயனில்லை; வாழ்க்கையை நுணுகி ஆராய வேண்டும்" என்றார்.

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

அதற்குக் கால் குறள் ஒப்புவித்தார்; இரண்டே சொற்கள்; "எண்ணித் துணிக" என்றார்.

"இது திருக்குறள்; அதனால் உரை தேவை" என்றேன்.

"எந்தச் செய்தியாயினும் நிகழ்ச்சியாயினும் நீயே அதைப் பற்றி நினைத்துப்பார்; ஏன் அவ்வாறு நிகழ்ந்தது. நாம் அந்தச் சூழ்நிலையில் எவ்வாறு நடந்திருப்போம்; அதற்கு மன இயல் மட்டுமா காரணம்? உடற்கூறு எந்த அளவு பொறுப்பு ஆகிறது; பருவ நிலை, சூழ்நிலை எல்லாம் ஆராய வேண்டும். நூல் அளவு மட்டும் பயன் தராது; நுண்ணறிவும் துணை செய்ய வேண்டும்" என்றார்.

"ஐயா நான் சிந்தித்துப் பார்க்கிறேன்."

"கற்றதனால் என்ன பயன் கடவுளைத் தொழா விட்டால் என்ற ஒரு குறள் எனக்குக் குழப்பத்தைத் தருகிறது" என்றேன்.

"கல்வி தந்தால் அறியாமை நீங்குகிறது. அதற்குப் பின் தெளிந்த ஞானம் பிறக்கிறது. ஞானம் வந்த பிறகு மூட பக்தி எதற்காக" என்று கேட்டேன்.

கல்வி கற்பதால் நீ இறைப் பொருள் ஒன்று உண்டு என்று அறிந்திருக்க வேண்டும். அப்படி அறிந்திருக்க வேண்டிய நீயே கடவுளைத் தொழாதிருப்பது தவறு அல்லவா? கல்வியின் பயனே அறிவுடைமை; அறிவின் பயன் ஆண்டவனை உணர்தல்" என்று விளக்கினார்.

"கற்பவை என்பவை யாவை? அவர் எதனைக் கூறுகிறார்?"

"அறம் பொருள் இன்பம் வீடு இந்த நான்கு பற்றிய அறிவு தரும் நூல்கள்" என்றார்.

என் முன் அறையில் பிரேம் போட்ட படம் ஒன்று மாட்டி இருந்தேன். தூக்குக்குச் சென்ற பகத்சிங்க் படம் அது.

"இவர் யார்?" என்று கேட்டார்.

"இவர் கொலையாளி அல்லவா" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன்.

"இவர் படத்தை மாட்டி வைத்து இருக்கிறாயே!" என்று கேட்டார்.

"தியாகி; அந்நியனைத் துணிந்து கொன்ற புரட்சியாளர்" என்றேன்.

"கொலை செய்தவர்தானே."

"தேசம் போற்றும் மாவீரன்" என்றேன்.

"போற்றத்தக்க பண்பு யாது?" என்று கேட்டார்.

"கொலை" என்றேன்.

"அது தூற்றத் தக்கது; காந்தி ஒருவர்தான் மகத்தான செயல் செய்தவர்."

"எல்லோரும் எப்படிக் காந்தியாக முடியும்" என்று கேட்டேன்.

"நீ கூறும் மாவீரர்கள் அவர்கள்தாம் துப்பாக்கிக் கலாச்சாரம் புகுத்தியவர்கள். அன்று அவர்கள் செய்வது சரி என்று நினைத்தார்கள். நாட்டுப் பற்றுக் காரணம் என்று கூறலாம். என்றாலும் துப்பாக்கிக் கலாச்சாரத்துக்கு வித்திட்டவர்கள் இம்மும் மூர்த்திகள்தாம் என்றார்.

"இன்று பயங்கரவாதமாக மாறி விட்டது" என்று கூறினார். அந்தப் படத்தில் மூவர் இருந்தனர். பகத்சிங்க், ராஜகுரு; சுகதேவ். தமிழ் ஆசிரியர் இப்படிச் சிந்திப்பார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

இன்னொரு புதிய படம் மாட்டி வைத்திருந்தேன்.

நான் வைத்திருக்கும் புதிய படத்தின் மீது அவர் பார்வை சென்றது.

"இவர் யார்? ஞானி போல இருக்கிறாரே" என்று கேட்டார்.

"என் பாலிய அறிமுகம்; கொலை செய்து விட்டார்; மனம் திருந்தி ஞானியாகி விட்டார்" என்றேன்.

"உனக்குக் கொலையாளிகளைத் தவிர வேறு யாருமே கிடைக்கவில்லையா?"

"நாம் கொலை செய்யாமல் இருக்க இவர்கள் தேவைப்படுகிறார்கள். எவ்வளவு பெரிய உயர்ந்த லட்சியம் ஆனாலும் சரி; அதற்காகக் கொலை செய்வது அறியாமை; கொடுமை; பிரித்த உயிரை நம்மால் சேர்க்க முடியாது என்ற பேருண்மையை நினைவில் நிறுத்த இவர்கள் தேவைப் படுகிறார்கள்" என்றேன்.

"இவர் என்ன செய்கிறார்?"

"பிச்சை எடுக்கிறார்; யாரிடமாவது பேசிக் காசு பெறுகிறார். தான் ஒரு கொலையாளி என்கிறார். அவர்கள் மறுப்புக் கூறுவது இல்லை"

"அச்சம் காரணமா?"

"அவன் மறுபடியும் கொலை செய்து விட வாய்ப்புத் தராமல் இருக்க.

இவர்கள் குறையே அவசரப்பட்டுத் தன்னை இழந்து விடுவார்கள். அதனால் தவறு செய்ய வாய்ப்பு ஏற்பட்டு விடும். மற்றவர்கள் இதை அனுசரித்துக் கொண்டு வேண்டிய பொருள் உதவி செய்து அனுப்பி விடுகிறார்கள்.

"உனக்கு ஏன் இந்தப் படங்கள்?" என்று கேட்டார்.

ஒன்று நாட்டுப் பற்றை உண்டாக்குகிறது; மற்றொன்று வீட்டுப் பற்றைக் காக்கிறது."

அவருக்குப் புரியவில்லை; நானும் விளக்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை.

என் மனைவி காஃபி கொண்டு வந்து கொடுத்தார். அதைக்குடித்து முடிப்பதற்குள் எதிர் வீட்டுக் கோபி வந்து சேர்ந்தான். வரும்போதே ஏதாவது பிரச்சனையோடு வருவது வழக்கம்.

"எங்கே வந்தாய்?" என்று கேட்டேன்.

"என் டியூஷன் மாஸ்டருக்குத் தெரியவில்லை; அவருக்குத் தமிழ் தெரியாதாம்."

"தாய்மொழி தமிழ்தானே"

"அதனால் தான் அதைச் சரிவரக் கற்கவில்லையாம். தமிழாசிரியரைக் கேட்டுத் தெரிந்து கொள் என்று சொல்லி விட்டார். குடையும் செருப்பும் இங்கே உள் நுழைவதைக் கண்டு ஓடோடி வந்தேன்" என்றான்.

"ஆசாரம் என்றால் என்ன?" என்ற வினாவைக் கேட்டு விட்டான்.

இவ்வளவு புத்திசாலியாக இருப்பான் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

"இந்தச் சொல் எங்கே வருகிறது?" என்று கேட்டேன்.

"ஆசாரக் கோவை" என்று சட்டென்று ஆசிரியர் உடைத்து விட்டார்.

"எங்கள் தமிழ் நூல் பாடம் இது" என்றான்.

"கலாச்சாரம்" என்றால் என்ன என்ற விரிவான பொருளையும் கேட்டேன்.

"ஆசாரம் என்பது பொதுவாக நம் முன்னோர்கள் அறிவித்த நெறிமுறைகள். அவர்களை ஆசாரியர்கள் என்று அழைத்தார்கள். அவர்கள் வகுத்துக் கொடுத்த நெறி வகைகள்; அதன்படிதான் மக்கள் பொதுவாக இயங்கி வருகிறார்கள்.

சில சமயம் உண்மையை விட்டு விட்டுச் சடங்குகளை மட்டும் பிடித்துக் கொண்டு இவைதாம் ஆசாரங்கள் என்று தொடர்வதும் உண்டு; உண்மை எது போலி எது என்று தெரியாமல் போவது உண்டு.

கலாச்சாரம் என்பது கலைகள் மூலமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டவை.

தனிப்பட்டவர் பின்பற்றிய நெறிகள் கலைகள் மூலமாகப் பிறருக்கு அறிவிக்கப்பட்டு அவை ஆசாரங்கள்

என்று முத்திரை குத்தப்பட்டு விடுகின்றன. அவை கலாச்சாரம் என்று கூறப்பட்டு விடுகின்றன.

கோபிக்குக் கோபம் வந்து விட்டது. "நான் கேட்டதற்கு விளக்கம் தராமல் எதையோ உளறுகிறீரே! எனக்கு அந்தச் சொல்லுக்கு நேர்ப் பொருள் வேண்டும்" என்று கத்தினான்.

"இது ஆசாரம் அல்ல; பொறுமையைக் கடைப் பிடிப்பது ஆசாரம் ஆகும்" என்றார். "நல்லவற்றைக் கடைப்பிடித்தல் என்பது இதன் நேர்ப் பொருள்" என்றார்.

"பொதுவாகப் பழமை நல்லது என்று கருதப்படுகிறது, காலம் காலமாகத் தொடர்ந்து வருவதால் அவற்றையே 'ஆசாரம்' என்று கூறும் வழக்கம் வந்து விட்டது" என்றார்.

13

ஷோபனா நாடகம் நடித்ததும் அவள் புது உலகத்தில் காலடி எடுத்து வைத்தவள் ஆனாள். 'கலை உலகம்' என்று அதற்குப் பெயர் கொடுக்க ஆரம்பித்தார்கள். அவள் காலடிகள் மண்ணில் படிய மறுத்துவிட்டன. இறக்கைகள் முளைத்துவிட்டன. அவள் பறக்கத் தயாராக இருந்தாள்.

அவள் வீட்டில் ஒரு விருந்து தந்தாள். பத்திரிகையாளர் வந்து அவளை நச்சரித்தார்கள். அவளைத் திரை உலகம் அழைத்தது. அதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்தாள்; அதைப் பற்றித் தவறான கருத்துக்கள் பல கேட்டு இருந்தாள். அதனால் 'குடும்பம்' சிதைந்துவிடும் என்று கருதினாள், அவள் தன் கணவனை நேசித்தாள்.

இளமை முதற்கொண்டு அவள் பரத நாட்டியம் பயின்று இருந்தாள். அவள் உடல் அதற்காகவே வளைந்து கொடுத்தது; விழிகள் அகலமாக இருந்தன. இடை அளவாக இருந்தது.

பட முதலாளிகள் கேட்டுக் கொண்டார்கள். அவளுக்கு மணம் ஆகவில்லை என்று தெரிவிக்கவேண்டும் என்று. அப்படி ஒரு இன்டெர்வியூ கொடுத்தால்தான் மார்க்கட்டு சூடு ஏறும் என்று கூறினார்கள்.

ஆரம்பமே பொய்யில் தொடங்க வேண்டி இருந்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் அவன் துணிந்து நின்றான். எப்படியும் அவள் திரையில் சேர்ந்ததும் தாம் விலகத்தான் போகிறோம்; இப்பொழுதே விலகி நின்றால் போகிறது என்று ஒப்புதல் அளித்தான்.

பெயர் மாற்றத் தேவை இல்லை என்றார்கள். முன் கூட்டியே தக்க பெயர் வைத்திருந்தார்கள்; ஆனந்தனின் நிலைமை பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது.

முதலில் அவளை நடிக்க அனுப்புவதா இல்லையா என்று யோசித்துக் கொண்டிருந்தான். ஒழுங்காகக் கோயிலுக்குப் போய்வந்தவளை மாதர் சங்கத்தில் சேர்த்தது தவறாகப் போய்விட்டது. இன்று மற்றவர்கள் தூண்டுதலால் தன் திறமையை உணரத் தொடங்கிவிட்டாள்; மற்றவர்கள் வலை வீசுகிறார்கள்; அவளை இழக்க வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்தான்.

நீதிமன்றத்தில் தொழிலுக்குச் சென்றால் அங்கே அவன் தோழர்கள் இவனைப் பாராட்ட ஆரம்பித்தார்கள்.

பத்திரிகைகளின் பேட்டிகள்; அவை தரும் ஆரூடம்; அவர்கள் வெளியிட்ட நாடகப் போட்டோக்கள்.

"உனக்கு என்னப்பா! நீ மட்டும் தாஜா செய்தால் போதும் உன் வாழ்க்கை மஜாதான்"

என்று நெருங்கிய நண்பர்கள் பேச்சு உரிமை எடுத்துக் கொண்டார்கள்.

அவன் என்னிடம் வந்து முறையிட்டான்.

"அப்படித்தான் சொல்வார்கள். அவள் வளர்ச்சிக்கு நீ தடையாக இருக்காதே. இத்தகைய வாய்ப்பு எல்லார்க்கும் கிடைக்காது. கிடைப்பதைத் தவறவிடுவது அறியாமை. பெண்களை இனிப் பூட்டி வைக்கமுடியாது. பூட்டி வைத்தவர்கள் தோற்றுவிட்டார்கள்.

"எண்ணித் துணிக" என்று என் ஆசிரியர் சுற்றுத் தந்த குறளை ஒப்புவித்தேன்.

ஆனந்தனை அவள் பொருட்படுத்தவில்லை. அவன் இருப்பதையே இருட்டடிப்புச் செய்து நட்சத்திர உலகில் அவள் புகுந்து விட்டாள்.

14

ஷோபனா பிரபல நட்சத்திரம் ஆனாள். ஆரம்பத்தில் அவள் குணச்சித்திர நடிகையாக நடிக்கவே ஒப்புக் கொண்டாள். அவள் கவர்ச்சி மிக்க தோற்றம் அவளை மலையாளப் படத்துக்கும் தெலுங்குப் படத்துக்கும் இழுத்தது. அந்த உலகில் கவர்ச்சி நடிப்புக்காக மதிப்பு மிக்கு இருந்தது. ஆடைகளை விலக்கிக் கொண்டாள். அணைப்புகள்

மிகுதிக்கு இடம் தந்தாள். அவள் காலடியில் கோடிகள் வந்து விழுந்தன.

ஸ்ரீதேவியை அவள் உதறித் தள்ளவில்லை. பூதேவி அவளைப் பூமேல் வைத்துப் பூசை செய்தாள். அவள் இல்லாத பத்திரிகைகள் இல்லை; அவள் நடிக்காத படங்கள் அதிகம் விலைபோகவில்லை.

நண்பன் ஆனந்தன் கூர்க்காவின் காவலில் அந்தஸ்தின் எல்லையில் பசும் புல்தரை முன் இட்ட நாற்காலியில் உட்கார்ந்து அவள் கவர்ச்சிப் படங்களைக் கண்காணித்துக் கொண்டு ஆல்பத்தைப் புரட்டிக்கொண்டு இருந்தான்.

"இந்தப் படங்களைப் பார்க்கிறாயே! உன்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? எப்படி நீ அவளோடு விரும்பி வாழ முடிகிறது?" என்று கேட்டு வைத்தேன்.

"இதனால் பெருமை அடைகிறேன்; அழகு அவளிடம் தழைத்துக் கிடக்கிறது. அதை ரகசியமாக எனக்குமட்டும் என்று மூடி வைக்க முடியாது. பெண்களுக்கும் அழகை மற்றவர்கள் ரசிக்க வேண்டும் என்ற ஆசை வளர்ந்து விட்டது; அதை இனித் தடுக்க முடியாது.

இந்த ஆண்கள் எந்த உரிமைகளை அடைகிறார்களோ அவ்வாறே பெண்கள் அடைகிறார்கள்; அவர்களைத் தடுக்க முடியாது.

ஆசாரங்கள் என்று பேசப்படுபவை வெறும் தளைகள். அவை களைகள் ஆகிவிட்டன.

மனைவி என்பவள் நம் வாழ்க்கைத் துணைவி; அவள் நமக்குக் குழந்தைகளின் தாயாகிறாள்; நமக்குள் உள்ள உறவுகள் பாசபந்தங்கள் இதற்குமேல் நாம் எதிர்பார்ப்பது வீண் சுமை; யாவரும் யாரையும் அடிமைப்படுத்த முடியாது. சின்னச் சின்ன விஷயங்களை மிகைப்படுத்திக்கொண்டு வாழ்வை நாசப்படுத்திக்கொண்டவர்கள் பலபேர்; வீண் பெருமைதான் காரணம்.

நான் என்ற முனைப்புதான் நம்மை அழிக்கக் காரணம் ஆகின்றது.

இந்தப் பழைய புராணக் குப்பைகள் அடிமைத் தளைகள் அவை அழிந்துவிட்டன. நாம் மீண்டும் புதுப்பிக்க முனைந்தால் தோல்விதான் காண்போம். அவள் தனிப்பட்ட தவறுகள் அவள் உரிமைகள். அவற்றைத் தவறுகள் என்று கருதுவதே நாம் செய்யும் தவறுகள்" என்று விளக்கினான்.

வீட்டுக்கு வந்தேன். என் மனைவியைப் பார்க்கிறேன். அவள் எனக்கு அழகாக விளங்கினாள். "என்ன விசேஷம்?" என்றேன்.

"நான் குழந்தைக்குத் தாய் என்று பெண் மருத்துவர்கள் கூறுகிறார்கள்" என்றாள்.

என் மகிழ்ச்சிக்கு அளவு இல்லை:

"இயற்கை வலிமை உடையது; அது வென்று விட்டது" என்றாள்.

"இந்த உண்மையை அறியும் மனிதனும் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான்" என்று சிரித்துக் கொண்டு என் மகிழ்ச்சியை அவளோடு பங்கிட்டுக் கொண்டேன்.

மனை நலம்

1

மாலி அவன் என் பாலிய நண்பன்: ஏதாவது கிறுக்கிக் கொண்டே இருப்பான். அந்தக் கிறுக்கல் அவனை ஓர் ஓவியன் ஆக்கியது. அவன் திருமணத்துக்குப் போய் இருந்தேன்; அது திருத்தணியில் நடந்தது. சாப்பாட்டுக்கு ஒரே நெருக்கடி; பிச்சைக்காரர்கள் வருவார்கள் அங்கே அடிக்கடி; அதனால் ஏற்பட்டது அடிதடி. பிச்சைக்காரர் களோடு போட்டி போட்டுக்கொண்டு லட்சாதிபதிகள் இடம் பிடித்தனர். பசி இருவரையும் சம பந்திப்படுத்தியது. என் சட்டையை ஒரு பிச்சைக்காரன் கிழிக்கப் போய் அது தாறுமாறாகச் சிதைய என்னைப் பைத்தியக் காரன் என்று நாலுபேர் வெளியே தள்ளப் பரிதாபத்துக்குரிய நிலையில் மாலி வெளியேவந்து காப்பாற்றினான். இன்னும் அதை நான் மறக்கவே இல்லை; அந்தத் திருமணத்தையும் மறக்கவே இல்லை.

அப்பொழுது பார்த்தது; பிறகு சந்திக்கவே இல்லை. சந்தித்தால் அதைப்பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. சரியான கலியாணம்; இந்த ஜென்மத்துக்கு மறக்க முடியாது.

அவன் தன் மனைவியை ஒரு திருமணத்துக்கு ஆள்வார் பேட்டைக்கு அழைத்து வந்தான். சந்தோஷமான திருமணம்; எந்தத் தோஷமும் இல்லாமல் வாத்திய கோஷத்தோடு நடைபெற்றது. பாடியவை பழையபாட்டு எனினும் முப்பதை எட்டாத இளம் வாலிபர்கள் பாடினார்கள். கிள்ளை மொழி பேசும் வள்ளைக் கொடிக் காதினர் பள்ளுப்பாட்டுப் பாடியதால் அந்தத் துள்ளும் இசையில் வந்திருந்தவர்கள் நெஞ்சை அள்ளப் பறி கொடுத்தனர். உயிர் ஒட்டமுள்ளவர்கள் பாடிய உருக்கமான பாட்டு; ஆகையால் கூட்டத்தில் நெருக்கடி ஏற்பட்டது; நகல் ஆயினும் அசலை ஓர் அசப்பு அசத்திவிட்டது.

மணப்பெண் கூடுதலான அழகோடு அமர்ந்திருந்தாள். தி. நகர் கடை பட்டுப்புடவைகள் இவளை அலங்கரித்தன. அவனும் அவளுக்கு இணையாக மேல் நாட்டுப் பாணியில் கோட்டும், அதற்கு ஏற்றபடி சூட்டும், காலுக்குப் பூட்டும் மாட்டிக் கொண்டு ஒரு நாள் கூத்துக்குத் தயாராகி ஒத்திகை இல்லாமலேயே அவளுடன் ஒப்புக்கொண்டு இருந்தான். முன் நாள் மாலை வரவேற்பு; மறுநாள் காலை திருக்கூத்து. இந்த வரவேற்பு என்பது யாருக்கு? எதுக்கு? என்பது எனக்கு இன்னும் விளங்க வில்லை. அவரவர்கள் அட்டைப் பெட்டிகளைக் கைக் குழந்தைகளைப் போலத் தாங்கி வந்தனர். அவற்றை அவர்கள் வாங்கிப் பக்கத்தில் படுக்க வைத்தனர். அடுக்கி வைத்த அட்டைப்பெட்டிகள் மணப் பரிசுகள் என்று பெரிசுபடுத்தப்பட்டன; சிலர் நோட்டுகளை உறையுள் வைத்துப் பூட்டி அதன்மேல் கொடுக்கின்றவரின் பெயரை நாட்டித் தந்தனர்.

டி.வி. பெட்டிகள் மூலைக்கு ஒன்று எதிர்த்துக் கொண்டு காசெட்டுகளில் பதிவாகும் படங்களைப் பரப்பி வைத்தன. 'கட் அவுட்' அங்கு அங்கு வைத்ததுபோல் ஜோடிப் புறாக்களைக் காட்டிக் காட்டிக் காட்சிப் பொருள் ஆக்கினர். ஒரே சமயத்தில் மணத் தம்பதியர் படங்களை எல்லாப் பெட்டிகளிலும் காண முடிந்தது. நீண்ட காலம் பழகியவர்களைப்போல அவர்கள் குழைந்து பேசினர். வந்தவர்களை அறிமுகப்படுத்தி அடையாளம் காட்டிக் கொண்டு இருந்தனர்.

கூட்டத்தில் கூடி நின்று அவரவர்கள் தம் பாட்டுக்கு ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். பல நாள் பார்க்க முடியாத உறவு முகங்களை அங்குக் காண முடிந்தது. பத்து வருஷத்துக்கு முன் சொந்தப் பல்லில் சிரித்தவர்கள் கட்டிய பல்லைக் கொண்டு இளிக்க நேர்ந்த மாறுதல்களைக் காண முடிந்தது.

ஒரு சிலர் ஒதுக்குப் புறமாகப் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தனர். சரியாகச் சொன்னால் காதைக் கடித்துக் கொண்டிருந்தனர் என்பது பொருத்தமாகும். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்ன நினைக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக ஏதோ கட்டுக்கதை ஒன்று அவர்கள் கவித்துவம் செய்கிறார்கள் எனத் தீர்மானிக்க முடிந்தது. காதலித்தவனை அவள் கைவிட்டுப் பெற்றோர்கள் கைகாட்டுபவனுக்குக் கழுத்தை நீட்டுகிறாள் என்று காற்றோட்டமாக அவர்கள் பேச்சோட்டம் இருந்தது. காதலுக்கு அவள் பாதகம் செய்துவிட்டாள் என்பது அவள் மீது சார்த்தப்பட்ட குற்றச் சாட்டாக இருந்தது.

அவள் சுத்தமாக இல்லை என்று இவர்கள் சத்தமாகவே பேசினர், நகம் பட்ட கனியாம்; எச்சில்பட்ட மிச்சிலாம்; கடித்துவிட்ட காயாம்; படுத்துவிட்ட பாயாம்; மடுத்து விட்ட மழையாம்; இப்படி விருப்பப்பட்ட உவமைகள் உருவகங்கள் அந்தப் பசும் பயிருக்குக் கூறப்பட்டன.

பெண்ணைப்பற்றிக் கண்ணியக் குறைவாகப் பேசுவதைக் கண்டிக்க நேர்ந்தது. ஓரம் பேசுவது சாரம் அற்றது என்று வாரம் பேசினேன். ஓட்டை வாயைச் சாட்டை கொண்டு அடிக்கத் தோன்றியது. விருந்து உண்ணவந்த இடத்தில் மருந்து பற்றிப்பேசுவது நோயின் சின்னம்; தாறுமாறாக உளறுவது அறியாமையின் பின்னம் என்று சுட்டிக்காட்டினேன். வந்தவர்கள் என்னை நொந்தவர்களாக நடந்து கொண்டனர். சிந்தனை அற்ற பேச்சு சீறத்தக்கது என்பது என சிற்றமாக இருந்தது.

மாலி என் பாலிய நண்பன்; அழைப்பின் பேரில் அங்கு வந்திருந்தான்; விழைந்து வந்து அங்கு அவன் பத்தினியும் வந்திருந்தாள்; திருத்தணி மலைமேல் முருகா அவர்கள் திருமணத்தில் சோற்றுக்கும் திண்டாடிய நினைவு கண்ண தாசனின் பசுமையான நினைவுகளாகப் பளிச்சிட்டன.

மணநாள் பார்த்த அவன் மனைவி மல்லிகை; இன்று இங்குப் பார்க்கிறேன். அந்த அல்லி மலர் அவலத்தைக் காட்டியது; சோகம் அவர்கள் சுக ஈனத்துக்குச் சான்று பகர்ந்தது, பாசி படர்ந்த குளம்; அதன் தூசுக்குக் காரணம் யாது? இச்சை கொள்வதற்கு மாறாக அவன் பச்சைக் கொடுமை இழைக்கின்றானா? கொண்டுவந்தால்தான்

பெண்டு என்று இந்த மண்டு அவளை வண்டுபோல் துளைக்கின்றானா. அவள் பருத்த உருவம் புதிய கருத்தைத் தோற்றுவித்தது. குண்டாக இருக்கிறாளே உண்டாகி இருக்கிறாளா என்று கண்டதும் அவனிடம் கேட்ட முதற்கேள்வியாக முந்திக் கொண்டது. அவளை அன்று பார்த்தது; ஏறக்குறைய இடைவேளை இரண்டு வருஷங்கள் முந்நூற்று அறுபது நாள் என்று நினைக்கிறேன். இன்னும் ஒரு வாரம் போனால் மூன்று ஆண்டுகள் ஆகும். சோற்றுக்குப் பட்டபாடு நேற்றுக்கும் நினைத்தாலும் ஆற்றவே முடியாது என்று கூறலாம்.

அவன் தன் மனைவியைத் தனியாக உட்காரவைத்து விட்டு இனிமையாகப் பேச என்னிடம் வந்தான். அவனை ஒருமையில் அழைத்துப் பழக்கம்; அவள் முன்னால் அப்படிப் பேசினால் அவன் பெருமை குறையும். அதனால் அவன் என்னோடு கட்டிப்புரள அவள் தட்டியாகத் தடையாவாள் என்பதால் அந்த மட்டி என்னிடம் தனியே வந்து சேர்ந்தான்.

"என்னடா மாலி எப்படி இருக்கிறாய்" என்று கேட்பது வழக்கம்; அவனை மதிக்கவேண்டிய கட்டாயம்; அங்கு அவளோடு வந்திருப்பதால் மாற்றிக் கொண்டேன். "என்னப்பா மாலி என்ன செய்கிறாய்?" என்று விசாரித்தேன்.

"நல்ல ஜோலியில்தான் இருக்கிறேன்; வார இதழில் வண்ண ஓவியனாக இருக்கிறேன்" என்று விளம்பினான்.

"சொல்லவில்லையே" என்று கேட்டேன்.

"பத்திரிகை படிப்பீர் என்று எதிர்பார்த்தேன்" என்றான்.

"உன் மனைவி உண்டாகி இருக்கிறாளா?" என்று வினவினேன்.

"குண்டாகி இருக்கிறாள்; அது அவள் உண்டு ஆவதால் விளையும் விளைவு" என்றான்.

"சாப்பிட்டால் குண்டாகி விடுவார்களா" என்று கேட்டேன்.

"சாப்பிடாமல் இருந்தாலும் குண்டு ஆவது உண்டு சந்தோஷம் மிகுதியால்" என்று விளக்கம் சொன்னான்.

"குழந்தை?"

"பிறந்தது; இறந்தது" என்றான்.

"கறந்தது கொட்டி விட்டீர்கள், கலயம் காலியாகி விட்டது."

"அதிர்ச்சிதான்; அதிலிருந்து இன்னும் அவள் எழவில்லை." என்றான்.

"முகத்தில் தெரிகிறது" என்றேன்.

"முகத்தில் மாறாது; அவள் எந்தத் திருமணத்துக்கு வந்தாலும் அழுது விடுவாள். சிரித்துக்கொண்டே அழுவாள், பார்க்கச் சகிக்காது; குழந்தை இருந்தால் அது வளர்ந்தால் இந்த மாதிரி மணமேடை ஏறுமே என்ற ஏக்கம் அவளைத் தாக்கிக் கொண்டே இருக்கும்."

"அதை மாற்ற வழி இல்லையா" என்றேன்.

"புத்தர் பின்பற்றிய பாதை; சாவு, அழிவு, துயரம் இந்தமாதிரி நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றால் மாறுதல்

ஏற்படும் என்று ஆறுதல் கூறுகிறார்கள் மனோநிலை மருத்துவர்" என்றான்.

"நீர்க்குமிழி வாழ்க்கை என்ற ஞானம் வந்துவிட்டால் பின் நமக்குத் துன்பம் இல்லை" என்று என் கருத்தைக் கூறினேன்.

2

உச்சி மீது வான் இடிப்பது போன்று பாண்டுவாத்தியங்கள் முழங்கிய அந்தத் திருமணத்துக்கு வந்த பிரமுகர்கள் வாழ்த்து மடல்களை வாசித்து அளித்தனர். நூல் வெளியீட்டாளர்கள் சிலர் தம்மிடம் விலை போகாத நூல்களைத் தேர்ந்து எடுத்து வந்து மணமகனுக்குப் பரிசுகள் என்று கொண்டுவந்து குவித்தனர். அதைக் காசாக்க முடியாமல் கொடுத்தவர்கள் தன் பெயரை எழுதி மாசுபடுத்தி விட்டனர். வாசித்த மடல்கள் மணவாழ்வின் மாண்பினைப் பேசும் அறத்தின் பால்களாக இருந்தன.

பேசுகிறவர்கள் ஒவ்வொருவரும் "குழந்தைகளைப் பெறாதீர்; இந்த நாட்டுக்கு நீங்கள் நன்மை செய்வதாக இருந்தால் குழந்தைகளைப் பெற்றுப் போடாதீர். இந்த மண் தாங்காது" என்று பண்படப் பேசிப் பலர் மனம் புண்படுத்தினர்.

ஒன்றும் அறியாத சிறுமி ஒருத்தி இதைக் கேட்டு விட்டுத் தன் தாயிடம் சந்தேகம் கேட்கிறாள்.

"இவர்கள் கலியாணம் பண்ணிக் கொள்வதே குழந்தைகளைப் பெறவா! அதற்கு இவர்கள் என்னசெய்வார்கள்?" என்று சந்தேகம் கேட்க ஆரம்பித்தாள்.

பக்கத்தில் இருந்த அப்பா அவள் கேட்பது என்ன என்று தெரியாமல் "என்னமோ கேட்கிறாளே, அதைச் சொல்லிக்கொடு" என்று பரிந்துரை பேசினார்.

"இந்த மாதிரிபேசும் இடங்களுக்குச் சிறுவர்களை அழைத்து வரக்கூடாது" என்று அந்த அம்மையார் முடிவு செய்தார்கள்.

மாலியின் வாய்ப்பு வந்தது.

"மணம் என்பது உயிரினங்களின் தேவையை நிறைவு செய்கிறது. மிருக உணர்வுகளுக்கு வழிவகை செய்யும் நாகரிக அமைப்பு" என்று பேசினான்.

இவ்வளவு பச்சையாகப் பேசுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. தன் இச்சையாகச் சிலகருத்துகளைச் சேர்த்தான்.

"காதலித்தவரையே கலியாணம் செய்து கொள்வதுதான் காரிகையர்க்கு வகுத்துரைத்த நெறி; உடல் உறவு ஒருமுறை ஏற்பட்டு விட்டாலும், தான் விரும்பிக் கெட்டு விட்டாலும், மற்றவர் வலியக் கெடுத்தாலும் அவனையே அவள் மணம் செய்து கொள்வதுதான் பாரதப் பண்பாடு; இதிலிருந்து மாறாத மனநிலை தேவைப்படுகிறது.

பாகவதத்தில் ஒரு கதை; சம்பாவதியின் மகன் சாம்பன்; அவன் ஜாம்பவானின் பெயரன்; கண்ணனின் காதல் மகன்; மிடுக்கும் துடுக்கும் நிறைந்தவன்; அவனை ஒடுக்குவார் இல்லை; தடுப்பார் இல்லை; ஆதலின் துரியனின் மகள் இலக்கணை என்பவளை இரதத்தில் ஏற்றிக் கொண்டு துவாரகை சென்றான்; அவள் விருப்பத்தைப் பற்றிக்

கவலைப்படாமல் அவள் வாழ்வில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணிவிட்டான். துரியன் இதைத் தரிக்காமல் கன்னன் வீடுமர் முதலிய வீரர்களை உடன் அழைத்துச் சென்று அவளை மீட்டுவந்தான்; அவனைச் சிறையில் மாட்டிவைத்தான். இறுதியில் என்ன ஆயிற்று? கெடுத்தவனுக்கு அவள் மனைவியாவாள்" என்று பாரதப் பெருமக்கள் பஞ்சாயத்துக் கூறினர். அந்தப் பஞ்சரத்தினக் கிளி பார்த்தசாரதியின் மருமகள் ஆயினாள்; இது பண்டைய வரலாறு" என்று எடுத்துக் கூறினான்.

"இன்றைய இயலுக்குவருவோம், அருமையான தமிழ்ப் படம் "புதியபாதை"; அவன் காசுக்காக ஒரு வேசியின் சொற்கேட்டு மணமகளை வலியக் கெடுத்து வாலிப முறுக்கை அவளிடம் காட்டுகிறான். அவள் என்ன செய்கிறாள்? பேசி முடித்த மணத்தை ஏசிவிட்டுக் கொஞ்சமும் கூசாமல் தன்னைத் தொட்டவனையே தொடர்கிறாள்.

"அவன் தன் ஊர் பேர் சொல்லமுடியாத அனாதை. காசு தந்தால் தன் வாழ்க்கையை மாசுபடுத்திக்கொள்ளத் தயங்காதவன்; என்றாலும் அவனையே நாடினாள். ஏன்? பாலியல் புனிதமானது; அதைப் போற்றுவது கற்பியல்; அது அற்புதமானது; காதல் வாழ்க என்று வாழ்த்துவோம்; கை கொட்டிப்பாடுவோம்" என்று மேசையைத் தட்டிப் பேசினான்.

காதலுக்காக ஏங்கும் இளங் கன்னியர் சிலர் இதை வரவேற்றுக் கைதட்டினர்; காளையர் பலர் கூத்து ஆடினர்.

மணமகளின் முகம் சுளித்தது. பேச்சாளன் மனம் களித்தது.

"பாலியலுக்கும் மணவாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எது முதல் எது தொடர்ச்சி என்ற பேதம் இல்லை; ஆனால் ஒன்றை ஒன்று தொடர்வதுதான் வாழ்வு நெறி; இதை அறிக" என்று பேசி முடித்தான்.

காதலுக்காகச் சமாதி எழுப்பிக் கொண்டவர்களின் சரிதங்களை இன்றும் கவிதை எழுதுபவர்கள் பாராயணம் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை மறக்க முடியாது; மறுக்கவும் முடியாது.

லைலா மஜ்னு, அம்பிகாபதி அமராபதி, தேவதாஸ், ரோமியோ ஜூலியட் இந்த உலக மகா காவியங்கள் இதைத்தான் உணர்த்துகின்றன. இதை மறந்துவிட்டதால் தான் இன்று ஊழல்கள் பெருகிவிட்டன. அமைதி அழிந்து விட்டது; அங்கங்கே வெடிகள் வைத்து இடிபாடுகள் உண்டாக்குகின்றனர். மனிதநேயம் வளர வேண்டுமானால் காதல் நேயம் அதற்கு முதற்படி; இதைப்படி; அதன்படி நடந்து கொள்வதுதான் மேற்படி" என்று படிப்படியாகத் தன் கருத்துகளை அடுக்கிச் சென்றான்.

காதலித்தவனைப் "போய்வா மகனே" என்று அவனிடம் வாய் சாலாக்குப் பேசி அனுப்பிவிட்டு மற்றொருவனைக் கைப்பிடிக்கும் கயமை நீண்டநாள் நிற்காது. உண்மை ஒருநாள் தலை காட்டாமல் போகாது; அப்பொழுது பவுர்ணமியில் அகப்பட்ட கள்வன் நிலைதான் ஆகும். தப்ப முடியாது; சமுதாயம் ஒப்புக்கொள்ளாது; நெல்

சாவியாவது உறுதி" என்று பேசினான். தலைவரின் கட்டுப்பாடு இல்லாத பேச்சாக அது இருந்தது.

இவன் ஏன் இப்படிப் பேச வேண்டும்? காதலுக்கு இவன் காவியம் பாட அவசியம் என்ன? அதை வைத்துப் பிழைப்பு நடத்தும் கவிஞர்களின் சிஷ்யனா இவன்? காதலைத் தவிர வேறு எழுதத் தெரியாத கவிஞர் பரம்பரையில் வந்த ஓவியனா இவன்? காதல் என்பது எழுத்தில் புகுத்தப்படும் மயக்கம்; போதை என்றும் கூறலாம்; அதை இவன் சிறப்பித்துப் பேசியதால் கைதட்டல் வாங்க முடிந்தது.

"அஞ்சலை கந்தசாமி திருமணம் எத்தகையது என்பது எனக்குத் தெரியாது; என்றாலும் அவர்கள் கருத்து ஒருமித்துக் கவின் பெறும் வாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்து கிறேன்" என்று கற்றவனைப் போலச் சொல்லடுக்குகள் தொடர மேடைவசனம் பேசிக் கைதட்டலைப் பெற்றான்.

இவன் ஏன் பொருத்தமில்லாத செய்திகளை இங்கே அர்த்தமில்லாமல் அளக்கிறான் என்பது விளங்கவில்லை? அவன் பேச்சை நான் வெறுத்தேன்; அவன் கீழே இறங்கியதும் மறுத்தேன்.

அவன் மேடையில் இருந்து இறங்கி வந்து என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

"ஏன்'பா கண்டபடி பேசி விட்டாயே" என்று கேட்டேன்.

"உள்ளபடிதான் பேசினேன். இவள் காதலித்தது ஒருவனை; மணம் செய்து கொள்வது மற்றொருவனை. அதை

அவள் உணரவேண்டும். அவனும் அறிய வேண்டும் என்றுதான் பேசினேன்" என்றான்.

"அது தவறு அல்லவா? மேடையில் நீ அவளைக் காட்டிக் கொடுக்கலாமா?" என்று கேட்டேன்.

"பெயரைச் சொல்லிப் பேசவில்லையே; பேச்சு உரிமை உண்டு. நான் ஒரு கலைஞன்; கவிதை நயம்படப் பேசுவது என் கைவந்த கலை; அதனை நா நயம்பட வெளிப் படுத்தினேன்" என்றான்.

"நீ ஓவியன்; மவுனம் உன் மொழி; உன் கவனம் இப்படித் திசை திரும்பக் கூடாது" என்றேன்.

"கைதட்டல் வாங்கி விட்டேன் அதனால் நான் கவிஞன்" என்றான்.

"ஓசைமட்டும் போதாது; யோசனையும் இருக்க வேண்டும்" என்றேன்.

அவன் சிரித்தான். அவளைப்பற்றி இவன் தெரிந்து வைத்துத் தாக்கினான் என்பது மட்டும் தெரிந்தது.

நான் அவனோடு பேசி அவனைத் திருத்த முயன்றேன்.

"காதலித்து மணம் செய்து கொள்வது காவிய நெறி; அது போற்றத் தக்கதுதான். அந்த உரிமை எல்லாப் பெண்களுக்கும் வாய்க்கும் என்று கூற முடியாது; பெரியவர்கள் முன்னிருந்து பேசி நிச்சயிப்பதுதான் இன்றைய நடைமுறை; இது இரண்டாவது; அவள் ஏற்கனவே காதலித்து இருக்கலாம்; பின் தெளிவு பெற்று இருக்கலாம்; காதலித்தவன் வாழ்க்கைக்கு உறுதி கொடுப்பான் என்று

அறுதி செய்ய இயலாது. ஊஞ்சல் வைக்கும் பலூன் வெடித்துப் போக வாய்ப்பு உண்டு. அப்புறம் அது வெறும் ரப்பர் தோல் தான். காதல் சந்திப்புகள் வாழ்க்கையில் ஒரு சூழ்நிலைச் சூழல்கள் எனலாம்; அதில் முழுகி எழுந்து, பின் தொடர்ந்து அவனையே மணக்கலாம்; மணத்துக்கு அது துணையாகலாம்; ஆனால் அதுவே முடிவு என்று கூறமுடியாது. மனம் மாறி விடலாம்; மேல் நாட்டிலும் மணம் ஆவதற்கு முன் இருவரும் சேர்ந்து பழக அனுமதிக்கப் படுகின்றனர்; ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வாய்ப்புகள் கிடைக்கின்றன. "பிடிக்கவில்லை" என்றால் இடுப்பில் இருந்து கைகள் விலக்கப்படுகின்றன. இதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்டேன்.

"எல்லை கடந்து பழகிவிட்டுப் பின் தொல்லை என்று எப்படித் திரும்ப முடியும்?"

"காதல் விவகாரமே அப்படித்தான்; தூண்டில் முள் போன்றது தான்; அதில் அகப்படும் மீன் தப்பாது; புத்தி சாலிகள் தெளிவு பெறுவதும் உண்டு" என்றேன்.

"கறைபட்ட பிறகு கரை ஏற நினைப்பது அவர்களுக்கு அது ஒரு குறைதான்" என்றான்.

"அதுவும் முறைதான்; ஒவ்வொன்றும் ஓர் அனுபவம்தான்; அதிலிருந்து விடுபடுவது தவறு அல்ல; ஒட்டினால் நல்லது என்றால் ஒட்ட வேண்டியது; இல்லை, வெட்டினால் நல்லது என்றால் விட்டு விலகுவது கெட்டிக்காரத்தனம்தான்" என்றேன்.

அவன் தன் நிலையில் இருந்து மாறவில்லை; அவனை என்னால் மாற்ற முடியவில்லை.

சிலருக்கு மற்றவர்கள் நன்றாக வாழ்வது பிடிப்பது இல்லை; தாங்கிக் கொள்ள இயல்வது இல்லை. அதில் இவன் விதி விலக்கு அல்ல என்பது அறிந்தேன்.

3

எனக்கும் கந்தசாமிக்கும் நட்பு புத்தகக் கடையால் ஏற்பட்டது. தி. நகரில் இன்று பல புத்தகக் கடைகள் பெருகி உள்ளன. ஏதாவது நல்ல புத்தகம் தேவைப்பட்டால் அந்தப் பக்கம்தான் செல்ல வேண்டியுள்ளது. அண்ணாசாலையில் ஆங்கிலப் புத்தகங்கள் ஆக்கிரமித்து உள்ளன. திருவல்லிக் கேணி பாரதி சாலையில் கல்லூரிப் பள்ளிநிறுவனங்களுக் கான பாட நூல்களை வாங்க முடியும். கலைத்தொடர்பான புதிய படைப்புகள். நாடகங்கள், தெய்வ நூல்கள் இன்று தி. நகரில்தான் கிடைக்கின்றன. பட்டுப் புடவை தேவைப் பட்டாலும் நகைக் கடைகளை நாடினாலும் நல்ல தமிழ் நூல்களைத் தேட வேண்டுமானாலும் அங்குதான் செல்ல வேண்டும். ஒரு கடையில் கிடைக்காவிட்டாலும் இன்னொரு கடையில் கிடைக்கும்.

இவன் பாண்டி பஜாரில் நல்ல முக்கியமான இடத்தில் 'இலக்கியப் பண்ணை' என்ற பெயரில் புத்தகக்கடை வைத்திருந்தான். நல்ல வியாபாரம்; வசதியும் உடையவனாக இருந்தான். பட்டப் படிப்பை எட்டிப் பிடிக்க வில்லை; கட்சி அரசியலில் ஈடுபட்டுப் புத்தகத் தொழிலைக் கற்றுக் கொண்டான். சில்லரை புத்தகக் கடையில் ஆரம்பித்து சொந்தமாக ஆசிரியர்களைக் கொண்டு எழுத வை நூல்களை வெளியிட்டுத் தொழிலைப் பெருக்கி வ அவனிடத்தில் கேட்ட புத்தகம் இல்லை எ

கிடைக்கும் இடம் அறிந்து வாங்கிக் கொடுப்பான். அதனால் அவனை எனக்குப் பிடித்து இருந்தது. நெருங்கிய வாடிக்கைக்காரன் என்ற முறையில் எனக்கு அழைப்பு மணத்துக்கு அனுப்பி இருந்தான்.

மாலியின் மனைவி காஞ்சனை மழை வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போன குடிசை மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டது போல் தோற்றம் அளித்தாள். மழை வந்தது; பள்ளமாக இருந்த இடத்தில் நீர் பாய்ந்தது; குடிசை சாய்ந்து விட்டது. மறுபடியும் அது புதிதாக வேயப்பட்டது என்றாலும் பழைய குடிசையின் பொலிவு அதற்கு இல்லை; அரசு அள்ளிக் கொடுக்கும் நன்கொடையில் கீற்றுகள் வாங்கி வேயப்பட்டவை அவை.

அந்த வீட்டுக்குள் போனாலே பழைய குடிசை அடித்துக் கொண்டு போன செய்தியை அவர்களால் பேசாமல் இருக்க முடியாது. அவர்கள் அந்தச் சோகக் கதையைச் சொன்னால்தான் துயர் ஆறும்; அவர்கள் நிலையும் மாறும். அதைக் கேட்பது மரியாதையும் ஆகும்.

"உங்களுக்குக் குழந்தை?"

"பிறந்தது இறந்தது" என்றார்.

பிறப்பும் இறப்பும் இணைந்து நின்ற சோகச் செய்தி அது.

"காரணம்?"

"றைப்பிரசவம்; அவசரப்பட்டு அவதரித்துவிட்டது"

"எல்லாருக்கும் எதிலும் அவசரம்; பிறக்கின்ற குழந்தைகளும் அவசரப்பட்டு விடுகின்றன" என்றேன்.

என் தத்துவம் மிகத்துவமாகப் பட்டது.

"நாங்கள் எவ்வளவோ; முயன்றோம் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது" என்று தன் ஆற்ற முடியாத துயரத்தைச் சொல்லி ஆற்ற முனைந்தாள்.

"அதற்கு என்ன? வயசு இருக்கிறது; கவலைப் படாதீர்கள்" என்றேன்.

"அந்த பவிசு எனக்கு இல்லை. மறுபடியும் பிறக்காது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். கருப்பை அதன் உருவினைக் கலைத்துவிட்டார்கள்" என்று தெளிவு படுத்தினாள்.

அதற்குமேல் பேசுவதற்கு என்னைத் தயார்படுத்திக் கொள்ளவில்லை.

என்னோடு என் பெயரன் உடன் வந்திருந்தான்; அவள் தொடரும் பேச்சுக்கு அவன் ஆரம்பம் ஆயினான்.

"இவன் பெயரனா?"

"மகனுக்கு மகன்; என் பெயரை அவன் தாங்கவில்லை; அவன் பாட்டன் பெயரை அவனுக்குச் சூட்டி இருக்கிறார்கள்" என்றேன்.

"உன் பெயர் என்ன?" என்று ஆங்கில்த்தில் என் பெயரனைப் பார்த்துக் கேட்டாள்.

"அமீது" என்றான்.

"அது அவன் அம்மாவின் அப்பாவின் பெயர். அம்மா பாகிஸ்தானி; அவள் பேசுவது இந்துஸ்தானி; இராஜஸ்தான் அவள் பழைய இராசதானி" என்றேன்.

"அது எப்படி இந்த உறவு உண்டாயிற்று?"

"என் மகன் படிக்கச் சென்றான்; அவளும் அங்குப் படிக்க வந்தாள். பூர்வீகம் பாகிஸ்தான். அவள் இப்பொழுது தங்குவது இந்துஸ்தான். அமெரிக்க நாட்டில் பல்கலைக் கழகம் அவர்களைச் சந்திக்க வைத்தது. காலை முழுவதும் படிப்பு; பின்பு மாலை முழுவதும் களிப்புக்கு உதவும் காதல் சந்திப்புக்கள்; கனிவு தரும் நல்ல வாழ்க்கை அவர்கள் அமைத்துக் கொண்டது. அதன் விளைவு என் பெயரன்; பின் பிறந்தவள் மீனாட்சி; அது இந்தப் பக்கம்" என்று விளக்கினேன்.

"இவன் குல்லா போட்டு இருக்கிறானே."

"வடநாட்டு முல்லாக்கள் இதை அதிகம் பாவிக்கிறார்கள்; நேருவுக்குப் பின்னால் அவர் விட்டுச் சென்றவை பல; அதில் இந்தத் தொப்பி மறக்க முடியாத ஒன்று."

"இது கிரிக்கெட்டுக் கலாச்சாரம்; வாளைப் பிடித்த கைகள் இன்று கிரிக்கட்டு மட்டைகளைப் பிடித்து வெய்யிலில் உலர்ந்து காய்கின்றன" என்றேன்.

காஞ்சனையின் குடும்பம் எனக்கு அறிமுகம் ஆகியது; குடும்பம் என்று சொல்லிக் கொள்வதற்குத் தன்னைத் தவிர வேறு ஆள் இல்லை. கட்டிக் கொண்டவனைத் தவிர. அவள் விநாயகர் சதுர்த்திக்குச் செய்யும் வெள்ளருண்டையையும்

கடலைச் சுண்டலையும் தட்டில் வைத்துத் தந்தாள். அமீது இவற்றைச் சுவைத்து உண்டான்.

பாட்டியிடம் சொல்லி இதே போலத் தனக்குச் செய்து தருமாறு கேட்டுக் கொண்டான்.

பிரியாணி சாப்பிடும் அவன் இதைப் பிரியமாகச் சாப்பிடுவது எனக்கு வியப்பைத் தந்தது. அவன் தாய் அவனுக்கு அதிகம் பிரியாணி செய்து போட்டும் பழக்கம்; அது அவள் பின்னணி.

4

கந்தசாமியின் நூல் பண்ணைக்குச் சென்றேன்; நீதி வாணன் எழுதிய காராமசாலாக்களை அடுக்கி வைத்திருந்தான்.

"இவை இலக்கியப் பண்ணையா?" என்று கேட்டேன்.

"தமிழகம் தாழ்ந்து விட்டது" என்றான்.

அதற்குமேல் தனிப்பட்ட ஒரு ஆசிரியரை விமரிசித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை.

"இலக்கியப் பண்ணை என்று பெயர் வைத்துக் கொண்டு குப்பை மேடாக ஆக்காதே" என்று கூறினேன்.

"குப்பை மேடு' என்ற தலைப்பில் அன்னை தெரிசாவின் படம் போட்டு ஒரு நூல் புதிதாக வெளி வந்திருந்தது. அதை அவன் வைத்திருந்தான்.

"இப்படியும் ஒரு தலைப்பா?" என்று கேட்டேன்.

'கரித்துண்டு' என்ற தலைப்பில் நூல் ஒன்று வந்திருக்கிறது; இது குப்பை மேடு" என்றான்.

"இதில் மூன்று கதைகள் இருக்கின்றன. முதல் கதை குப்பை மேடு; அடுத்தது சீற்றம்; மூன்றாவது அதிர்ச்சி; மூன்றும் புதிய சிந்தனைகள் கொண்டவை: கொண்டு வந்து வைத்திருக்கிறேன் விற்பனைக்கு" என்றான்.

"பழைய ஆசிரியர்கள்?"

"அவர்கள் எழுதியவை நல்ல வரவேற்பு பெற்றன. காலத்தால் அவை பின்னடைகின்றன. பாராட்டலாம்; பயனில்லை; எழுத்து காலத்தோடு ஒட்டவேண்டும்" என்றான்.

"இலக்கியம் காலத்தை வெல்ல வேண்டும்" என்றேன்.

"மறுக்கவில்லை; அதனால் பயன் இல்லை; காலத்தோடு ஒட்ட வேண்டும்; புதிய சிந்தனைகளைத் தரவேண்டும்" என்றான்.

புத்தகக் கடை அனுபவம் அவனது; அதைக் கேட்டு வைத்தேன்.

"நான் ஏதாவது எழுதலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"இன்று மக்கள் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை; ஆத்ம சிந்தனை அதுவே இன்றைய பிரச்சாரம்; அதில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்; வெற்றி பெறலாம்" என்றான்.

"அடுத்தது காதல்; அதுதான் இன்றைய படங்களில் மூலதனம்; அதைக் கவிஞர்கள் சொந்த உடைமையாக்கிக்

கொண்டார்கள்; நீர் அங்கே கால் வைக்க முடியாது" என்றான்.

"என்னதான் எழுதுவது?" என்றேன்.

"எழுதி ஏட்டைக் கெடுத்தாலும் பரவாயில்லை; நாட்டைக் கெடுக்க வேண்டாம்" என்றான்.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஆட்டோவில் 'ஒரு மடமாது' ஒருத்தியாக வந்து இறங்கினாள். அவள் கந்தசாமியின் அண்மை மனைவி அஞ்சலை என்பது அடையாளம் கண்டு கொண்டேன். நூல் உள்ளடக்கத்தில் பார்க்க வேண்டிய செய்தியை அட்டைப்படத் தலைப்பில் அவளைக் கண்டேன். கடைக்கு வந்து அவனுக்கு உதவ, எடுக்கப்பிடிக்க, சூடாக உரையாட அங்கு வந்திருந்தாள்.

என்னை மணவிழாவில் 'புத்தகப்பிரியன்' என்று தன் பிரியதரிசினிக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தான். இன்று வேறு விதமாக அறிமுகம் செய்தது எனக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்தது.

"இவர் மகன் பாகிஸ்தானிப் பெண்ணை மணம் செய்து கொண்டார்" என்று என் மகனை வைத்து என்னை அறிமுகம் செய்தான்.

இதில் என்ன பெருமை? மாறுபட்ட தேசங்கள் ஒன்று பட்டது போன்ற ஓர் உண்மையை வற்புறுத்தியது போல இருந்தது. யார் எதிர்பார்த்தார்கள்; இன்று இஸ்ரேலும் பாலஸ்த்தீனும் ஒற்றுமை காண்பார்கள் என்று. கிழக்கு ஜெர்மனியும் மேற்கும் இணைந்து விட்டது. பகைமை மறந்து இரண்டு தேசங்களும் சுமூக உறவு கொள்ள ஓர் வாய்ப்பு

உண்டாகாமல் போகாது என்ற எண்ணத்தை அவன் கிளறிவிட்டான்.

மதவியலில் சிக்குண்ட தேசங்கள் சமுதாய இயலில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. மதச்சார்பு அற்ற நிலை உலகம் முழுவதும் பரவாமல் இருக்கும் என்று கூற முடியாது; கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்கும் சங்கமிக்கும் காலம் வந்து கொண்டுதான் இருக்கிறது.

தொடக்க காலத்தில் மதம் இனப்பற்று தேசப்பற்று இவற்றை உண்டாக்கியது. மக்களை ஒற்றுமைப்படுத்தியது. இன்று அரசியல் சமூக இயல் இந்த அடிப்படையில் ஒன்றுபடும் சூழ்நிலை வளர்ந்து விட்டது. மதம் பின்னுக்குச் செல்ல வாய்ப்பு உள்ளது; இந்த நினைவுகள் எனக்குள் தோன்ற ஆரம்பித்தன.

அவள் அறிமுகம் ஆனபிறகு பேசுவதற்கு ஒரு பொருளைத் தேர்ந்து எடுத்தாள்.

"உங்களுக்கு சினிமா பிடிக்குமா?" என்று கேட்டாள்.

"I love cinema" என்றேன்.

அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"இந்தத் தலைப்பை டி.வி.யில் பார்த்துக் கற்றுக் கொண்டீர்கள் என்று நினைக்கிறேன்"."

"அதன் பாதிப்பு ஏற்படாமல் போகாது" என்றேன்.

"புதிய பாதை பார்த்திருக்கிறீர்களா" என்று கேட்டாள்

"வள்ளி வரை வந்து இருக்கிறேன்" என்றேன்.

"கெடுத்தவனையே மணம் செய்து கொள்கிறாள் ஒருத்தி; காதலித்தவனைக் கொலை செய்கிறாள் மற்றொருத்தி" என்று விளக்கம் கூறினாள்.

"ஆம்; மக்கள் பாராட்டுகிறார்கள்" என்றேன்.

"தேவை இல்லை; பெண் காதலித்தவனை அல்லது கெடுத்தவனை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பது கொடுமையான விதி; மனப்போக்குகள், பாலியல் வேறு; மணவியல் வேறு; துணிந்து பிறகு நிதானமாகத் தக்கவனைத் தேர்ந்து மணம் செய்து கொள்ளலாம். இது என் கருத்து" என்று கூறினாள்.

இந்த விமரிசனத்தில் அவள் சொந்த வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை என்னால் உணரமுடிந்தது.

"கூட்டுக்குடும்பம் இன்று அதன் பயனை இழந்து விட்டது" என்றாள்.

"எப்படிச் சொல்கிறீர்?"

"விவசாய நிலைக்கு அது தேவைப்பட்டது; இன்று தொழில் நிலைக்கு வந்த பிறகு அவர்கள் பிரிந்து செயல்படுவதுதான் தக்கது; முதியவர்களைக் கவனிப்பது வேறு; அவர்கள் அதிக்கம் தொடர்வது வேறு" என்று விவரித்துப் பேசினாள்.

பிறகு பொது விஷயங்கள் அதிகம் பேசவில்லை; "புத்தக வியாபாரத்தை விட்டு விட்டுத் தன்னோடு ஊர் வந்து

சேர்ந்து விட்டால் புதிய தொழில் தொடங்கலாம்; இவர் மறுக்கிறார்" என்று கூறினாள்.

"என்ன தொழில்?"

"இன்று தேவை புத்தகம் அல்ல; தண்ணீர்" என்றாள்.

நான் ஒன்றும் பேசவில்லை.

6

என் வீட்டில் போன் ஒலிக்கிறது; என் மகளும் மருமகளும் பேரன்பேத்தியோடு சென்னை வருவதாக இச்செய்தியைப் பரப்பிவிடுகிறேன். அதனால் மாலி என் வீட்டுக்கு வந்தான்.

வெளிநாட்டிலிருந்து வருவதால் புதிய காசெட்டுகள் கிடைக்கும் என்று அவன் என் வீட்டை முற்றுகை இடுகிறான்.

அவன் பேச்சு கந்தசாமி அஞ்சலையைத் தொடர்கிறது.

"ஏற்கனவே ஒரு காதலன் இருக்கிறான்; அவனோடு அவள் தொடர்பு வைத்திருந்தாள்; அதை முறித்துக்கொண்டு இவனை மணம் செய்து கொண்டிருக்கிறாள்; கந்தசாமிக்குத் தெரிந்து விட்டது; அவளை விட்டு விலக விரும்புகிறான்" என்றான்.

எனக்கு அது அதிர்ச்சி தந்தது. அஞ்சலை அன்று பேசிய பேச்சில் அர்த்தம் இருக்கிறது என்பதை உணர முடிந்தது.

அவன் மனைவி காஞ்சனையைப் பற்றி விசாரித்தேன்.

"அவள் பிடிவாதமாக இருக்கிறாள் நான் இன்னொரு மணம் செய்து கொள்ளவேண்டும் என்பதில். அவள் பிள்ளை பெற்றுத்தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்."

"நீ என்ன செய்யப் போகிறாய்."

"எனக்கும் ஓர் எழுத்து ஆசிரியைக்கும் தொடர்பு உண்டு; எப்பொழுதாவது நான் அவளுக்குப் பயன்படுவேன். அவளை மணக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றான்.

"பின்னால் சிக்கல்கள் வரும்; யோசித்துச் செயல்படு" என்றேன். அவன் காசெட்டுகள் கேட்டுப் பெற்று விடை பெற்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கந்தசாமியின் மனைவி அஞ்சலை என் வீட்டுக்கு வந்தாள்.

என் மருமகளைப் பார்க்க வந்தாள் என்பது தெரிந்தது; வரவேற்றேன்.

என் பேர்த்தி மீனாட்சியின் சிரிப்பு அவளை மிகவும் கவர்ந்தது.

பிறகு நேரே பேச்சுக்கு வந்தாள்.

"எனக்கு நீங்கள் அடைக்கலம் தரவேண்டும்" என்றாள்.

"இடைக்குல மடந்தையர் கண்ணகிக்கு அடைக்கலம் தர" என்றேன்.

"நான் உன் மருமகளோடு டெல்லிக்குப்போய் அங்கே இருந்து ஏதாவது தொழில் செய்யப் போகிறேன்" என்றாள்.

"கந்தசாமி?"

"விவாகரத்துக்கு அவர் முன் அறிவிப்புத் தந்திருக்கிறார்" என்றாள்.

எனக்கு நிலை கொள்ளவில்லை.

நேரே கந்தசாமியின் கடைக்குச் சென்றேன்.

அங்கே மாலி குறிப்பிட்ட எழுத்தாசிரியை அந்தக் கடையில் தக்கதோர் ஆசனம் அதில் வீற்றுக்கொண்டு தான் எழுதும் கதையை விமர்சித்துப் பேசிக்கொண்டு இருந்தாள். அவள் புனைபெயர் பூலன்தேவி என்று தெரிந்தது.

கந்தசாமி பூலன் தேவியை அறிமுகம் செய்தான்.

"இவர்கள் சிறந்த சமூக எழுத்தாளர்" என்றான்.

"குடும்ப எழுத்தாளர் என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறேன்; இது புதிதாக இருக்கிறதே" என்றேன்.

"இன்று எழுத்தாளர்கள் மாறி வருகிறார்கள்; புதிய பிரக்ஞையோடு எழுதுகிறார்கள். புதிய பிரச்சனைகளைத் தம் எழுத்தில் சந்திக்கிறார்கள். இவர்கள் பூலன்தேவி என்ற புனைபெயரில் எழுதுகிறார்கள்" என்றான்.

"இந்தப் பெயர்" என்று ஆரம்பித்தேன்.

"புரட்சி; என் எழுத்தில் புரட்சியை உண்டாக்கு கிறேன்" என்றாள்.

"உங்களை மாலி மணக்கப் போகிறான் என்று கேள்விப்பட்டேனே" என்றேன்.

அவளுக்கு அது அதிர்ச்சியைத் தரவில்லை.

"நான் கந்தசாமி இவரைத்தான் மணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்றாள்.

எனக்கு இது அதிர்ச்சியைத் தந்தது.

"என்னப்பா; அஞ்சலை என்ன ஆனாள்?"

"இவ்வளவு நேரம் டெல்லி பயணம் ஆகி இருப்பாள்" என்றான்.

"தாரம் இருக்கும்போது வேறு பேரம் பேசுவது உனக்கு பாரம் அல்லவா?" என்றேன்.

"அவள் வாழ்க்கையில் எந்தச் சாரமும் இல்லை. குடும்பத்தில் ஒட்டியும் வாழ மறுக்கிறாள். வெட்டியும் போகத் தயங்குகிறாள். அவள் தெரிந்து தவறு செய்துவிட்டு மறைத்துவிட்டு என்னை மணந்து கொண்டாள்" என்றான்.

"ஆயிரத்தோர் இரவுகள் கதை படித்து இருக்கிறாயா?" என்றேன்.

"ஒரு பெண் நினைத்தால் தான் விரும்பும் ஒருவனை அடைய முடியும். காவல் எவ்வளவு வைத்தாலும் அவள் ஆவலுக்குத் தடை விதிக்க முடியாது" என்றேன்.

"அவர்களை அவள் வெட்டி விட்டாள். இதுதானே அந்தக் கதை" என்றான்.

"இல்லை அவனுக்கு அவளை மணந்தவள் அறிவுரை கூறுகிறாள். தவறு செய்துவிட்டார்கள் என்று அவர்களை ஒதுக்குவது அறியாமை. அது அவர்கள் சொந்த விருப்பு வெறுப்பு ஒட்டியது; அதைத் தடை செய்ய முற்பட்டால்

இந்தப் பூவுலகில் பெண்களே இருக்கமாட்டார்கள்" என்று அறிவுறுத்துகிறாள்.

"தாயை வெட்டச் சொன்ன ஒரு முனிவன். ஜமதக்கினி முனிவன் என்று நினைக்கிறேன்."

"ஆமாம்"

"தவறு செய்யாதவர்கள் தேடித் தேடிக் கண்டால் இலக்கிய உலகில் ஒரு கண்ணகி ஒரு சீதை இப்படித்தான் காண முடிகிறது. அதனால்தான் அவர்களைப் பற்றிக் காவியம் பாடினார்கள். மற்றவர்களைப் பற்றி விமரிசிக்க நமக்கு உரிமை இல்லை" என்றேன்.

"நீ காதலிக்கும் பூலன்தேவி அவர்கள் அபிப்ராயம் கேள். நானும் கேட்கக் காத்திருக்கிறேன்" என்றேன்.

எழுத்துக்காரர் ஒருவர் என்ன சொல்கிறார் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்தேன்.

"நான் இவரை மணம் செய்து கொள்ளத் தடை இல்லை; ஆனால் சுத்தமான தேங்காய் எண்ணெய்; கலப்படமில்லாதது தேவை என்றால் என்னை இவர் மறந்து விட வேண்டியதுதான்" என்றாள்.

"மற்றும் என் சொந்த வாழ்க்கையை உங்களிடம் விமர்சிக்க விரும்பவில்லை. கந்தசாமி கண்திறந்து பார்க்க வேண்டும்; அவன் மனைவி டெல்லிக்குச் சென்று விட்டாள். அவள் தக்க காதலனைத் தேடிக் கொள்ள முடியும். அவள் அழகு, அறிவு, ஆற்றல் அதை அறிபவன் இல்லாமல் இருக்கமாட்டான்."

"கடைசி நேரம்; முதலில் போனில் பேசி அவளை நிறுத்துங்கள்; இவர்கள் வாழ்வைத் திருத்துங்கள்."

"ஆடவர்கள் தவறு செய்வதை இந்தப் பூலன் தேவி தாங்கிக் கொள்ளமாட்டாள். அஞ்சலையை அழையுங்கள்.

என்னை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டால் இவர் என் கடந்த கால வாழ்வை விமர்சிக்காமல் இருக்க முடியுமா? அப்பொழுது விரிசல் உண்டானால் என்ன செய்வார்?

நான் சுதந்திரமான எழுத்துக்காரி! இந்த அற்ப விஷயங்கள் என்னைக் கட்டுப்படுத்தாது.

மாலி என்னை விரும்பலாம்; நானும் அவரை நேசிக்கலாம். குழந்தை வேண்டும் என்று முதல் தாரம் வற்புறுத்துவதால் நான் மனைவியாக வேண்டும் என்பதை இந்தப் பூலன் ஏற்கமாட்டாள். இந்த தேசத்தில் எத்தனையோ குழந்தைகள் ஆதரவு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை வளர்த்துக் கொள்வது தான் அவர்கள் கடமை.

மாலி தவறுகள் செய்யலாம்; நானும் தவறுகள் செய்திருக்கலாம்; தவறுகள் அடிப்படையில் எந்தக் கட்டிடமும் அமைக்கக் கூடாது. எனக்குச் சுதந்திரம் தான் உயிர்; எழுத்து என் தலைவன். மற்றவர்களுக்கு நான் கட்டுப்பட முடியாது.

ஆயிரத்தோர் இரவுகள் அருமையான கதை; அந்த சுல்தானை அவள் திருத்தினாள். கதைகளைச் சொல்லிக் கந்தசாமியைத் திருத்த வேண்டியது நம் கடமை; பாலியல் வேறு; மண இயல் வேறு.

அவள் பழைய காதலன் கடிதங்கள் எழுதலாம்; பித்தம் பிடித்து அலையலாம்; அதைப் பொருட்படுத்தக் கூடாது.

மணவாழ்வு என்று அவள் துணிந்து ஏற்றுக் கொண்ட பிறகு அவள் பாதை விலகவில்லை; அவளைத் துறப்பது; இழப்பது மடைமை; முதலில் அவளை டெல்லி போகாமல் நிறுத்துங்கள்" என்றாள்.

பூலன்தேவி என்னை மிகவும் கவர்ந்து விட்டாள்; அவள் தெளிந்த அறிவு, புரட்சி உள்ளம் புதிய சிந்தனைகளைத் தருகின்றன. அவை நாட்டுக்குப் பயன்தருவன என்று மதிப்பீடு செய்தேன்.

"மனைநலம் என்பது தவறுகளைப் பற்றிப் பேசுவது விமர்சிப்பது அன்று; நேசமும் பாசமும் வளர்த்து வாழ்க்கையை அழகுபடுத்த வேண்டும் என்று அவள் கூறிய அறிவுரை என்னை மிகவும் கவர்ந்தது. நிச்சயம் கந்தசாமி அவள் எழுத்துக்களை அச்சிட்டு நூலாக்கினால் நன்கு பயன் அடைவான். 'பூலன்தேவி' வாழ்க என்று வாழ்த்தினேன்.

பத்திரிகை படி

1

"திருடன் பெண்டாட்டி கம்மினாட்டி" என்ற பழமொழி கூறி வருகிறார்கள்.

"ஏன் இப்படி இந்தப் பழமொழி வழங்குகிறது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்".

"அந்தப் பொம்மனாட்டி ஒரு சீமாட்டி; அவள் இப்பொழுது என்ன ஆனாள் தெரியுமா?" என்று கேட்டான் என் நெருங்கிய நண்பன் வேணுகோபாலன்.

"காமாட்டி! சொல்லித் தொலை?" என்று அவசரப்படுத்தினேன்.

"அதை என் வாயால் நான் சொல்ல மாட்டேன்; பத்திரிகை படி" என்று கூறினான்.

"நான் பொதுவாகப் பத்திரிகைகளைப் படிப்ப தில்லை; அப்படிப் படித்தாலும் அரசியல் தலைப்புகளை மட்டும் பார்ப்பேன்; கட்சிக்காரர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது என்னை இழுக்கும்; குற்றச் சாட்டுகள் எதிர்க்குற்றச் சாட்டுகள் இவை புதிய அரசியல் உருவாக்குவதற்கு ஆரம்பம் என்று பார்ப்பேன். இந்தத்

தேசத்தின் புதிய சக்திகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைக் கவனிப்பேன்; நாட்டு நடப்புகள் அரசியல் கிளர்ச்சிகள் இந்தச் செய்திகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அரசியல் கட்டுரைகள் ஒன்று இரண்டு வரும்; அவையும் பயன் உடையன என்பது என் கருத்து; அவற்றையும் புரட்டிப்பார்ப்பேன்.

கிரைம் செய்திகளைப் படிப்பது இல்லை. அவற்றைப் படித்தால் நம் சுற்றுப்புறம் நமக்கு அச்சத்தை விளைவிக்கிறது. கதவு திறந்து வைக்கவே முடிவதில்லை. என் மனைவியைத் தனியாக வெளியே அனுப்புவதற்குத் தடைபோட வேண்டி நேர்கிறது. அவளை நகைகளைப் போட்டுக் கொண்டு போகாதே என்று கூறுவேன். அவள் உடனே "நீங்கள் போட்டது இல்லை; என் அப்பா எனக்குச் செய்து போட்டவை; அதைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்; நகை இல்லாமல் போனால் நாகரிகம் உடையவர் யாரும் மதிக்க மாட்டார்கள். காய்கறிக்கடைக்காரிகூடக் கழுத்தில் என்ன இருக்கிறது என்று பார்த்துவிட்டுத்தான் பதில் சொல்கிறாள். பட்டம் பெற்ற பெண்கள் கூடப் படிப்பு முடிந்ததும் நாலு காசு சம்பாதித்தால் நகைக் கடைக்குத்தான் போகிறார்கள். இந்தியப் பெண்கள் இந்த நகைகளால்தான் நாகரிகத்தைக் காக்கிறார்கள். பொன்னும், பெண்ணும் உடன் பிறப்புகள்; இரட்டைப் பிறவிகள்; பிரிக்க முடியாது. நீங்கள் தயவு செய்து நாளிதழ்கள் படிக்காதீர்கள். அதில் கிரைம்களுக்கு முதலிடம் தருகிறார்கள். அதைப் படித்துவிட்டு உங்களைப் போன்றவர்கள் எங்களை அடக்கி வைக்க முற்படுகிறீர்கள். நீங்கள் அவற்றைப் படிக்காதீர்கள்" என்று எனக்கு அறிவுரை தருகிறாள்.

"நகை போனால் போகிறது; உன்னை யாராவது?"

"உங்களைத் தவிர எந்த ஏமாளியும் என்னைத்தொட மாட்டான்; பயப்படாதீர்கள்" என்று என்னை விமரிசிக்கிறாள்.

"ஆனால் ஒன்று; எந்தக் காரணத்துக்கும் என்னைப் போலீசு நிலையத்துக்கு அனுப்பக் கூடாது. இது போச்சு அது போச்சு என்று என்னை அறுக்கக் கூடாது; பேசாமல் மஞ்சள் கயிறு மாட்டிக்கொள்; அது போதும்" என்கிறேன்.

எனக்குக் காவல் நிலையம் என்றாலே அலெர்ஜி. அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடை தரமுடியும். அவர்கள் பசுமையான கேள்விகளைக் கேட்பார்கள்; அதற்குப் பதில் சொல்ல முடியாது. ஒரு மருத்துவ மனைக்குச் சென்றால் கேட்கின்ற அவலக் குரல்களை அங்குக் கேட்க நேர்கிறது. ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஒரு 'பிக்பாட்டை' விளாசிக் கொண்டிருந்தார்.

அவர் நீதிக்காகப் போராடுவதைக் கண்டு வியந்தேன். "இவர் அல்லவா சட்டத்தின் காவலர்? இதைப்போல் ஒவ்வொரு காவல் அதிகாரியும் கடுமையாக இருந்தால் எவன் திருடுவான்? எவன் முரணுவான்?" என்று பாராட்டினேன்.

"வெளியே ஒரு பெண் எதையோ பறி கொடுத்து விட்டதாக வந்து கத்திக் கொண்டு இருந்தாள்"

"கவலைப்படாதே எதை இழந்தாலும் இவர்கள் தேடிக் கண்டு பிடித்துவிடுவார்கள்" என்றேன்.

அவளைச் சுற்றிப் பொது ஜனங்கள் கிளர்ச்சி மனப் பான்மையில் உற்சாகமாகச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் ஏதோ மக்கள் சங்கத் தலைவர் என்று தெரிந்தது.

"எப்படி அவர்கள் உன்னைக் கெடுத்தார்கள்?" என்று கேட்டார்.

"ஒருவரா? எத்தனை பேர்?" என்று உபதலைவர் உப கேள்வி கேட்டார்.

"நீ சும்மாவா இருந்தே! எதிர்க்கவில்லையா?" என்று செயலாளர் வினவினார்.

"குரல் எழுப்பி அழைத்தால் யாராவது உதவிக்கு வந்திருப்பார்களே" என்றான் ஒருவன்.

"இன்னொருவர் சேர்வதற்கு அது வாய்ப்பாகி விடும்" என்று திருத்தம் கூறினான் மற்றொருவன்.

"ஏன்'டி! அவனுங்ககிட்டே ஆளுக்கு இவ்வளவு என்று கேட்டு வாங்காமல் விட்டுட்டே" என்று கேட்டாள் அனுபவம் மிக்க ஒத்த வயது உடைய மாது.

"பாவிங்க அவர்களுக்குக் கூடப் பிறந்த தங்கைகள் இல்லையா" என்று கேட்டாள் ஒரு மங்கை.

"தங்கை இருந்தால் என்ன செய்வது" என்று நறுக்கென்று குறுக்கே கேட்டான் தங்கைகளுடன் பிறந்த தமையன் ஒருவன்.

"அவர்களை எப்படி விட்டு விட்டாய்" என்று கேட்டார் ஒரு சமூக சேவகர்.

"இதைத் தேசத்துப் பிசச்சனையாக்க வேண்டும்" என்றார் கட்சிக்காரர் ஒருவர்.

"வேலியே பயிரை மேய்ந்து விட்டது; வேலிகள் இந்த நாட்டில் சரியாக இல்லை" என்று விவரம் தெரிந்தவன் விளக்கம் கூறினான்.

"தடிப்பசங்கள்" என்றேன் நான்.

"ஆமாம் கையில் தடி வைத்து ரோந்து சுற்றிக் கொண்டிருப்பார்களே அவர்கள்தான்" என்றான் இன்னொருவன்.

நீதிவிசாரணை நடத்தும் சப்-இன்ஸ்பெக்டரிடம் இதைச் சொன்னால் கவனிப்பார் என்று அவர்களை அழைத்துக் கொண்டு நானே சென்றேன்.

"அந்தப் பெண் கூலிவேலை [illegible]பவள்" என்று தெரிந்தது.

"இதனால் உனக்குப் பாதிப்பு ஏற்பட்டு இருக்கும்; பாவம் உன் புருஷன் உன்னை வைத்து வாழ மாட்டானா?" என்று கேட்டுவிட்டேன்.

"என் புருஷனை இவர்கள் முதலில் வாழ விடட்டும்; முட்டிக்கு முட்டி தட்டிக்கொண்டு இருக்கிறார்களே அவர்தான் என் புருஷன்" என்றாள்.

"ஏன் அவரைப் பிடித்து உள்ளே போடவேண்டும்?" என்று கேட்டேன்.

"பிக்பாக்கெட் செய்துவிட்டார்" என்றாள்.

"அதற்கு ஏன் அவனை அடிக்க வேண்டும்?" என்று கேட்டேன்.

"உண்மையைச் சொல்லட்டுமா?" என்று உள்ளே இருந்தவனின் தோழன் உளர வாய் எடுத்தான்.

அதைத் தாங்கும் சக்தியை வரவழைத்துக் கொண்டேன்.

"நாங்கள் எதிலும் பாதி தந்து விடுவோம். இவன் பொய்க் கணக்குத் தந்தான்; மாட்டிக் கொண்டான். மாமூல் கொடுக்காமல் ஏமாற்றி விட்டான்" என்றான்.

அவன் சொல்லியதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட வில்லை; இவர்கள் ஒரே கூட்டம்; இப்படித்தான் சொல்வார்கள் என்று பட்டது. காவலர்கள் நீதிகளைக் காப்பவர்கள்; நிச்சயம் நேர்மை தவறமாட்டார்கள்; இவர்கள் கூறுவது அவதூறு என்று எனக்குப் பட்டது.

"அந்த சப்-இன்ஸ்பெக்டர் எனக்குத் தெரிந்தவன். எம்.ஏ. பட்டதாரி; முதல் மதிப்பெண் வாங்கித் தங்கப் பதக்கம் பெற்றவன்; சமுதாய சேவைகள் செய்து நற்சான்றுகள் பெற்றவன்; நிச்சயம் அவன் தவறு செய்ய மாட்டான்" என்று வாதாடினேன்.

"அவன் வேலைக்குச் சேர்ந்தபோது அவன் கொடுத்த தொகை இரண்டு லட்சம்; இது உங்களுக்குத் தெரியுமா" என்று அந்தக் குற்றவாளி திருப்பிக்கேட்டான்.

"எனக்கு ஆளும் கட்சி மீது அபார நம்பிக்கை இருக்கிறது. மக்கள் ஏராளமான வோட்டுகள் தந்து இவர்களைத் தேர்ந்து அனுப்பி. இருக்கிறார்கள். நிச்சயம்

அவர்கள் மக்களுக்குத் துரோகம் செய்ய மாட்டார்கள்" என்றேன்.

"அது மட்டுமல்ல; கட்சித் தலைவர் சுடுமையானவர்; ஊழலே தலை காட்டக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்' என்றேன்.

என்னைப் பார்த்துச் சிரித்தார்கள்.

"நீங்கள் பத்திரிகைகளைப் படித்துவிட்டு மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்வதை நம்புகிறீர்கள். இதுவரை குற்றச் சாட்டுகள் அடுக்குகிறார்களே தவிர நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுவியிருக்கிறார்களா? ஊழல் என்பது எல்லாம் வெறும் புரளிதான்."

"ஆளும் கட்சி என்றால் அவர்களைப் பற்றி ஆளுக்கு ஒன்று பேசுவார்கள்; அதை எடுத்துக் கொள்ளக்கூடாது; எந்தக் கட்சி ஆட்சிக்கு வரட்டுமே அவர்களை இப்படித்தான் விமரிசிப்பார்கள். யாரையும் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. ஆதாரம் காட்டமுடிவதில்லை" என்றேன்.

என்னைவிட அந்தப் பெண்தான் அவர்களைக் கவர்ந்தாள்.

அவளை வைத்து வழக்குத் தொடுத்தால் ஆட்சியிடமிருந்து ஒரு லட்சமாவது பெறமுடியும் என்ற நம்பிக்கையை வளர்த்தார்கள். அதற்காக நிதிதிரட்ட உண்டி குலுக்கினார்கள்.

"என் வழக்கு விஷயமாக உள்ளே சென்றேன்; சப்-இன்ஸ்பெக்டர் ஆறி அடங்கி இருந்தார். படியாத

மாணவனை முட்டி போடவைக்கும் ஆசிரியர்கள்தான் என் நினைவுக்கு வந்தார்கள்.

"உங்கள் பிராது என்ன?" என்று கேட்டார்.

"எங்கள் வட்டாரத்தில் மெட்ரோ தண்ணீர்கொண்டு வருவதே இல்லை. அந்த வாரிய அதிகாரி இளைஞர்; நிறைய பணம் வசூல் செய்கிறார். குடித்துக்குப் பதினைந்து காசு வசூல் செய்கிறார்கள்; அதில் பாதி அவர் கைக்குச் செல்கிறது. நாங்கள் பணம் தருவதில்லை என்பதால் லாரி அனுப்ப மறுக்கிறார்" என்று கூறினேன்.

"நீங்கள் அவர் மேலதிகாரிகளிடம் முறையிடுங்கள்; அவர்கள் கவனிப்பார்கள்" என்றார்.

"அதிகாரிகள் என்றால் நீங்கள் தான் எங்களுக்குத் தெரிகிறீர்கள். தவறு நடந்தால் உங்களிடம் வருவது பழக்கம் ஆகிவிட்டது."

"தனிப்பட்டவர்கள் தவறு செய்தால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்."

"அரசாங்க அதிகாரிகள் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்க எங்களுக்கு அதிகாரம் இல்லை. தயவு செய்து நீங்கள் போய் வரலாம்" என்று கூறினார்.

"அவர் எங்களை மதிக்கமாட்டேன் என்கிறாரே."

"போய் ரகளை செய்யுங்கள்; அதற்குப் பிறகு நாங்கள் வருகிறோம்" என்றார்.

இவர் வந்தால் யார் மீது நடவடிக்கை எடுப்பார் என்பது எனக்குத் தெளிவு ஆகவில்லை.

ரகளை செய்வதாக இருந்தால் நாங்கள் ஏன் பெடிஷன்கள், முறையீடுகள், பிராதுகள் இவற்றைத் தேடுகிறோம். அதற்கு எனக்குத் திராணி இல்லை. இனியும் உப்புத் தண்ணீர் தான் குடித்துக் கொண்டு இருக்கிறேன்; என்ன செய்வது?

"அடிதடிக்குத்தான் மக்களும் பயப்படுகிறார்கள்; அதிகாரிகளும் பயப்படுகிறார்கள். சுத்தமான குடிவாசிகள் எதுவும் செய்ய முடியாது" என்பதை அறிந்தேன்.

காவல் நிலையம் செல்வது என்றால் இந்தக் கசப்பான அனுபவம் குறுக்கிடுகிறது. அதனால் என் மனைவியிடம் அறிவித்தேன்.

"ஏதாவது பறி கொடுத்து விட்டால் நீ என்னிடம் சொல்லாதே; நான் காவல் நிலையம் மட்டும் கால் வைக்க மாட்டேன்" என்றேன்.

"அப்பொழுது புகார் கூடக் கொடுக்கமாட்டீர்களா?"

"கொடுக்கலாம், நீ என்னை எதிர்த்து நகைகள் போட்டுச் சென்றாய் என்று எப்படி உன்னைக் காட்டிக் கொடுப்பது? நகை ஆசை இருக்கிறது. ஒன்று இரண்டு போனால் அதற்காகக் கவலைப் படக் கூடாது; அதைவிட அங்குப் போனால் அது சுலபம் அல்ல; சும்மா இருப்பதே சுகம்" என்றேன்.

"என் நகையும் போகாது; நானும் உங்களிடம் வந்து சொல்ல மாட்டேன்" என்று சொல்லி அவற்றைப் பத்திரமாக லாக்கரில் வைத்தாள். ஆடம்பரம் அவளை விட்டு அகன்றது. இந்திய சராசரிக் குடிமகளாகச் செயல் பட்டாள்.

2

என் மனைவியைத் தேடிக் கொண்டு ரசீது புத்தகங்கள் எடுத்துக் கொண்டு ஒரு கூட்டம் வந்தது.

என் மனைவி ஏதோ சீட்டுக் கட்டி இருக்கிறாள். அதில் ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கேட்க வந்திருக்கிறார்கள் என்று நினைத்தேன்.

"உங்கள் நன்கொடை வேண்டும்?" என்றார்கள்.

"எதற்கு?" என்று கேட்டேன்.

"கோயில் விழா எடுக்கிறோம், அதில் பட்டி மன்றங்கள் நடத்துகிறோம்; சாலமன் பாப்பய்யா தலைமை வகிக்கிறார். டிஸ்கோ சாந்தியை வைத்து நடனம் ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கு அடுத்து குஷ்பூவைக் கூப்பிட இருக்கிறோம். சூப்பர் ஸ்டார் 'படிப்பாளி' என்ற படம் சூட்டிங்கில் மும்முரமாக இருக்கிறார். அவர் வர இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து இருக்கிறார். கவிஞர் பொன் முத்து அவர்களை அழைத்து இருக்கிறோம், அவர் வெளிநாட்டுப் பயணம் முடித்து விட்டு வருகிறேன் என்று கூறி இருக்கிறார். ஆப்பிரிக்க நாட்டில் ஆதி பரா சக்தி கோயில் கட்டுகிறார்கள். கட்டி முடிந்ததும் அவர் அங்கே போக இருக்கிறார், அது முடிந்ததும் இந்தியா திரும்புவார். வந்ததும் இந்த விழாவில் இவர் கலந்து கொள்வார். திருக்குறள் முத்துசாமி அவர்கள் பேச இருக்கிறார், இசை இயக்குநர் பாரதி ராஜாவைக் கூப்பிட்டு இருக்கிறோம்; அவர் காட்டு வாசிகளை இயற்கைராசியில்வைத்துப் படம் எடுக்க

ஈடுபட்டு இருக்கிறார். அது முடிந்ததும் வந்துவிடுவார்" என்று அடுக்கிக் கொண்டே போனார்கள்.

"இசையியக்குநர் இளையராஜா; பாரதி ராஜா அல்ல" என்று திருத்தினேன்.

"நாங்கள் பேதம் பாராட்டுவது இல்லை; இரண்டு பேரும் எங்களுக்கு ஒன்று தான்" என்று அவர் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

"கோயில் விழாவுக்குச் சினிமாக் கலைஞர்கள் தேவைதானா, ஏன் கால்ட்சேபங்கள் என்ன ஆயிற்று?" என்று கேட்டேன்.

"கூட்டம் கூட மறுக்கிறார்கள். மூத்த வயதினர் கூட இப்பொழுது திரைக் கலைஞர்களைத் தான் விரும்பு கிறார்கள்; நாங்கள் என்ன செய்வது?" என்று கேட்டார்.

"நான் நாத்திகன்; கோயிலுக்குத் தருவது இல்லை" என்றேன்.

அவர்கள் ஆஸ்தியே பறி போய்விட்டது போல் அதிர்ச்சி அடைந்தனர்.

"கடவுள் இல்லை என்று கூறியவர்கள் எல்லாம் இன்று கட்சி மாறிவிட்டார்கள். எல்லாம் சரணாகதி அடைந்து விட்டார்கள். அப்படிச் சொல்கிறவர்கள் ஒரு நாளைக்குத் தவறுகளை உணர்வார்கள். மனிதன் மதத்தில் ஏறிவிட்டான் என்று பாடிய கவிஞர்கள் எல்லாம் படி இறங்கி வந்து விட்டார்கள். கஷ்டம் வரும்போது தானாக நீர் மாறி விடுவீர்" என்றார்கள்.

கஷ்டம் தேவை இல்லை; என் இஷ்டத்துக்கு விட்டு விடுங்கள்" என்றேன்.

"நல்ல காரியம்; அதற்கு மறுப்புக் கூறக்கூடாது; அம்மா இருந்தால் மறுக்க மாட்டார்கள்" என்று என் மனைவியைப் பல முறை கோயிலில் பார்த்தவர் கருத்துத் தெரிவித்தனர்.

"என் மனைவியின் ஈகைத் திறனைத் தடுத்து வாகைசூட எனக்கு விருப்பம் இல்லை; அது அவள் விருப்பம்" என்று கூறி முடிப்பதற்குள் அவள் வந்து அவர்களுக்கு அபயம் அளித்தாள்.

"பொதுக் காரியத்துக்குக் கேட்கிறார்கள்; அது தவறு என்று ஏன் தடுக்கிறீர்கள். இன்னும் இந்தத் தேசம் சோர்ந்து விடவில்லை; நல்லது நடக்கவேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது; அதுதான் இந்தக் கோயில் திருப்பணி. அதை மதிக்க வேண்டும்" எனறாள்.

"கோயில் விழாவில் டிஸ்கோ நாட்டியமாம்; அதில் மாஸ்கோ கட்சிக்காரர் தலைமை வகிக்கிறாராம்" என்றேன்.

"நான் தான் சொன்னேன்; கோயிலுக்கு மக்கள் திரளாக வர வேம்டுமானால் கவர்ச்சி நாட்டியங்கள் தேவை; அவற்றை ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னேன்" என்றாள்.

எனக்கு அதிர்ச்சி தாங்கவில்லை. அவள் அறிவின் முதிர்ச்சியைக் கண்டு வியந்தேன்.

எதிரிகள் எங்கோ இருக்கிறார்கள் என்று நினைத்தேன்; அவள் என் வீட்டிலேயே இருந்தாள்.

"கோயில் புனிதமான இடம். அங்கே இந்தக் கலைநிகழ்ச்சிகள் எதற்கு?" என்றேன்.

"கலை நிகழ்ச்சிகள் மக்களுக்குத் தேவை; அது எந்த இடத்திலும் தரலாம்; இன்று மக்கள் சோர்ந்து இருக்கிறார்கள்: அவர்களுக்கு இவை தேவைப்படுகின்றன. கட்சிக் கூட்டங்களுக்குச் சென்ற பழக்கம், இப்படித் திசைமாறுகிறது; அரசியலில் அவர்கள் இனி ஒன்றும் செய்ய முடியாது; கூட்டங்களும் நடப்பது இல்லை தேர்தல் காலம் தவிர." என்று விளக்கம் தந்தாள்.

"இத்தகைய நிகழ்ச்சிகளை வைத்தால்தான் கோயிலில் சுறுசுறுப்பு ஏற்படும்; கவர்ச்சி என்பது தேவைப்படுகிறது; அதற்குக் கோயில் விதிவிலக்கு அல்ல" என்றாள்.

அவளை எதிர்க்கும் ஆற்றல் இல்லை; அவர்கள் கேட்டதைக் கொடுத்து விட்டேன்; கடவுளிடம் உடன்பாடு எனக்கு இல்லை; மக்கள் கருத்துக்கு நான் மதிப்புத்தர வேண்டியதாகிவிட்டது. அதைவிட எங்கள் குடும்பத்தில் வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையும் தேவைப்படுகிறது, விட்டுக் கொடுப்பதால் என் மனைவியின் நன்மதிப்பு எனக்குக் கிடைக்கிறது.

அவள் விருப்பப்படி பெரிய தொகை அவர்களுக்குக் கொடுத்தேன்.

ரசீது தர வந்தார்கள். "தேவை இல்லை" என்றேன்.

"இல்லை; வைத்திருங்கள்; உங்கள் பெயர்களைப் பட்டியல் இட்டு அச்சிடுவோம். அடுத்த ஆண்டும் வந்து கேட்க இது சவுகரியமாக இருக்கும்" என்று கூறினார்கள்.

அவர்கள் புத்தி சாதுர்யம் என்னை வியப்பில் நிற்க வைத்தது.

"இந்தப் பணத்தைக் கலைஞர்களுக்குத் தரப் போகிறீர்கள்; மிச்சம் என்ன இருக்கும்?" என்று கேட்டேன்.

"அது தான் இல்லை; ஓசியில் வருவார்கள்; அவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற வேண்டியுள்ளது; மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு அது படம் ஓடத் துணை செய்கிறது; நடிப்புத்திறமை மட்டும் வெற்றி தருவது இல்லை; மக்கள் விரும்பும் பாத்திரங்களில் நடிக்க வேண்டும்."

"அதுமட்டும் அல்ல; ஓய்வு பெற்ற பிறகு சாய்வு தேவைப்படுகிறது. அரசியல் அவர்களை அழைக்கிறது. அவர்கள் ஒதுங்கி வாழ முடியாது. இந்த விழாக்களுக்கு அவர்கள் காசு கேட்காமல் வருகிறார்கள்" என்று விளக்கம் தந்தார்கள்.

"அவர்களுக்கு நாங்கள் மேடைகள் அமைத்துத் தருகிறோம். எங்கள் குடும்பத்திற்கு அடுத்து அவர்களைத் தான் நேசிக்கிறோம்; அவர்களை அழைக்கிறோம்; அவர்கள் வருவதற்கு யோசிப்பது இல்லை" என்ற மேலும் கூறினார்கள்.

"நீங்கள் நாத்திகர் என்று கூறுகிறீர்கள்; அறிவு விளக்கம் தரலாம்; ஆனால் எங்களுக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் தேவைப்படுகின்றன. ஒன்று கோயில்; மற்றொன்று கலை; இவற்றை இணைப்பதால் எந்தத்தவறும் இல்லை" என்று விளக்கம் தந்தார்கள். சிந்தித்துப் பார்க்கிறேன். என்னால் முடிவு காண இயலவில்லை.

3

என் நண்பன் என்னைப் பத்திரிகை படி என்று என்னிடம் கூறியது நினைவுக்கு வந்தது.

"கிரைம்களை ஒதுக்கக் கூடாது" என்று அவன் சொன்னான். எனக்கு அவற்றைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

"போலீசு அதிகாரி ஐ.பி.எஸ். வீட்டில் வருமான வரி அதிகாரிகள் நுழைந்தார்கள். ஒரு கோடி ரூபாய் நோட்டுகளும், தங்க நகைகளும், போதைப் பொருள்களும் பிடிபட்டன" என்பதைப் படிக்கிறேன்.

தர்மத்தில் எனக்கு இருந்த நம்பிக்கை என்னிடம் விடுதலை பெற்று விட்டது.

இந்த ஐ.பி.எஸ். அதிகாரி யார் என்று துருவிப் பார்த்தேன்; எனக்கு வேண்டிய குடும்பம் அது. இப்பொழுது அவர் மனைவியார் ஒரு சீமாட்டியாக வாழ்கிறார். டி.வி.யில் அவர்களை அடிக்கடி அழைத்துச் சமூகச் சீர்கேடுகளை விமரிசிக்கச் செய்கிறார்கள்.

அந்த அம்மையார் ஒரு மிராசுதாரரின் ஒரே மகள்; அவர் தன் மகளை ஒரு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.பி.எஸ். அதிகாரி இளைஞர் ஒருவருக்குத் தருவதில் உறுதியாக இருந்தார். டாக்டர் இன்ஜினியர்கள் மணச்சந்தையில் இவர்களை நோக்க ஒளிவிட முடியவில்லை. இந்த முடிவை அவர் ஒரு சாதனையாக மேற் கொண்டார். அவர் கொடுத்தது எவ்வளவு? என்ன செய்தார்? என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஐ.பி.எஸ். அவர் மருமகன்.

செய்திகளைப் பொதுவாகப் படிக்கும்போது அது எந்தப் பாதிப்பும் ஏற்படுத்துவது இல்லை; நமக்கு வேண்டியவர்கள் இதில் இருக்கிறார்கள் என்றால் வேதனையாகத் தான் இருக்கிறது.

இதைப் பற்றி விமரிசித்தோம்; விவாதித்தோம்.

"நாம் படிக்கும் குறள் தேவைதான்; கீதையும் அவசியம்தான். அதைவிட இந்தக் கிரைம் செய்திகளும் அறியவேண்டியவைதான்; இந்தத்தேசத்தின் போக்கு களையும், தீமைகளையும் அறிய முடிகிறது. அது மட்டும் அல்ல; அந்தத் தீயவர்கள் பிடிபடுகிறார்கள்; தண்டிக்கப் படுகிறார்கள் என்ற செய்தி படிக்கிறோம். இதுதான் காவிய முடிவுகளும் என்ற முடிவுக்கு வந்தோம்.

"பத்திரிகை படியுங்கள் அவை இன்றைய காவியங்கள்" என்று என் நண்பன் கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டேன்.

அறம் வெல்கிறது; ஆக்கிரமிப்புகள் தேய்கின்றன என்பதை அறிய முடிகிறது.

நூல்கள் கிடைக்குமிடம்

அணியக வெளியீடுகள்

ஆசிரியர் : ரா.சீ

1. அணியகம், சென்னை-30. ✆ 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.